966
97

Tamil Nadu Legislative
Assembly. 1997

©

2,11,31 N97
N17.24
16548

வெளியீடு 12-2-98

Issued 12-2-98

966
97

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 21, 1997 – தொகுதி 24 – எண் 2

**Friday the 21st March, 1997 – Volume 24 – No. 2**

*றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**'ive Assembly Secretariat, Fort St. George,**

**Chennai-600 009**

**[Price Rs. 3.00**

744/77

6 JUL 1998

**21-03-1997**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. **வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 269-315 |
| 2. **அமைச்சர்களின் பணியாளர்கள் பேரவையில் அமைச்சர்களுக்கு உதவ வரும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை—பேரவைத் தலைவர் குறிப்புரை** | 306 |
| 3. **சிறப்புக் கவன ஈர்ப்பு —** | |
| (அ) திருப்பூர் சாயத் தொழிற்சாலைகளுக்கு பற்றாக்குறை நிமித்தம் சுற்றுப்புறங்களிலிருந்து தண்ணீர் அளிப்பது நிறுத்தப்பட்டுள்ளமை | 316-321 |
| (ஆ) தொகுதியில் நடைபெறும் விழாக்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய இடம் அளித்தல் | 322-326 |
| 4. **மானியக் கோரிக்கைகள்,** 1997-98, **விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி** | |
| (அ) கோரிக்கை எண் 1 — நிலவருவாய்த் துறை | |
| (ஆ) கோரிக்கை எண் 40 — இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு | 326-383<br>385-409 |
| (இ) கோரிக்கை எண் 45 — இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | |

பக்கங்கள்

4. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் | 335, 388-402, 403-404 |
| திரு. வி. திருஞானசம்பந்தம் | 336-340 |
| * திரு. என். பாண்டுரங்கன் | 340-344 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 344-349 |
| திரு. என். தங்கவேல் | 349-354 |
| * திரு. எஸ். இராஜரெட்டி | 354-357 |
| திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில் | 358-363 |
| * திரு. ப. பாலசுப்பிரமணியன் | 363-365 |
| திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத் | 365-372 |
| திரு. நெல்லிக்குப்பம் அ. மணி | 372-375 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 375-383 |
| திரு. பி. வெங்கடசாமி | 385-388 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 402-403 |

5. பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை—

| | |
|---|---|
| சென்னை பொது மருத்துவமனை இருதய சிகிச்சைப் பிரிவுக்கு 'கேத் லாப்' வாங்கவிருப்பதில் கையாளவிருக்கும் நடைமுறை | 383-385 |

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 409

2/3/97 N97-262
216348

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 8, தாது — திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 மார்ச் 21, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு "

பொருள்வளம் நிறைந்ததாகவும், பிறர் போற்றத்தக்கதாகவும், கேடற்றதாகவும், நல்ல விளைச்சல் கொண்டதாகவும் அமைவதே சிறந்த நாடாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 281, திரு. செங்கை சிவம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

281—

### காவலர் குடியிருப்புகள் கட்டுதல்

***100—திரு. செங்கை சிவம் :**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, கொண்டித்தோப்பில் பழுதடைந்த நிலையில் உள்ள காவலர் குடியிருப்புகளை இடித்துவிட்டு மாற்று குடியிருப்பு கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சென்னை கொண்டித்தோப்பில் இருக்கும் காவலர் குடியிருப்புகள் மொத்த எண்ணிக்கை 12. அவை மிகவும் பழுதடைந்த, குடியிருப்பதற்குத் தகுதியற்ற நிலையில் இருப்பதால் அக்குடியிருப்புகளை இடித்துவிட்டு, அதே இடத்தில் 368 காவலர் மற்றும் தலைமைக் காவலர் குடியிருப்புகள் அடங்கிய அடுக்குமாடிக் கட்டிடம் கட்டுவதற்கான ஆணை 12-2-1997-ல் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. செங்கை சிவம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற அதேநேரத்தில் காவல் துறையில், காவலர் முதல் ஆய்வாளர் வரையிலே உள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு, இவற்றில் எத்தனை காவலர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது, நடப்பு நிதியாண்டில் மாவட்டங்களில் காவலர்கள் குடியிருப்பு கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்று தங்கள் மூலம் முதல்வர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையில் தரப்பட்ட புள்ளி விவரம்தான். காவல் துறையிலே காவலர் முதல் ஆய்வாளர் வரையிலே பணிபுரிகின்றவர்களின் எண்ணிக்கை 76,447. அதில் இதுவரையிலே குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்ட காவலர்களுடைய எண்ணிக்கை 25,791. மாவட்டங்களில், இந்த ஆண்டு 500 காவலர் குடியிருப்புக்காக 14.20 கோடி ரூபாயும், சென்னைக்கு 1,000 குடியிருப்புகளுக்கு 27.55 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் மு. தேவராஜன்.

**டாக்டர் மு. தேவராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூரில் காவலர்கள் குடியிருப்பு நீண்ட நாட்களாகப் பழுதடைந்து, பழுது பார்க்கப்படாமலே இருக்கிறது. அதை இடித்துத் தள்ளிவிட்டு புதிய காவலர்கள் குடியிருப்பு அமைத்துத் தர ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, முதலில் வினா எழுப்பப்பட்டது, விடை அளித்தேன். இப்போது கேள்வி எழுப்பப்படுகிறது, விடையையே பதிலாக வைத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் காவல் நகரம் அமைக்கப்பட்டுள்ளதா ? ஆம் எனில், அங்கு எத்தனை கோடி செலவில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நகரத்தைப் பற்றித் தனிக் கேள்வி கேட்கவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகள் ஒரு பகுதியில் மட்டுமல்லாது, தமிழகத்தின் பல இடங்களிலும் கிராமப்புறங்களிலும் இருக்கின்ற காவலர் குடியிருப்புகள் எல்லாம் பழுதடைந்து இருக்கின்றன. அவைகளை எல்லாம் ஒட்டுமொத்தமாகச் சரி செய்வதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னேன் ; 25, 791 காவலர்களுக்குத்தான் குடியிருப்பு வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. இன்னும் 50,656 காவலர்களுக்கு இந்த வீட்டு வசதி செய்யப்பட வேண்டும். இந்த வசதிகள் முழுவதும் முடிவு அடைவதற்கு ஏறத்தாழ 25 ஆண்டுகள் ஆகும். அந்த அளவுக்குக் காலம் ஆகாமல் முன்கூட்டியே அவர்களுக்கு இந்த வீடுகளைக் கட்டித் தர நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமா என்பது பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. பழுதடைந்த வீடுகளும் பழுது பார்க்கப்படுகின்றன என்பதற்கு உதாரணமாகத்தான் இந்தக் கேள்விக்கான, மூலக் கேள்விக்கான பதிலை நான் சொல்லி இருக்கிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவோணம் திரு. மா. இராமச்சந்திரன்.

[1997 மார்ச் 21

**திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர் குடியிருப்புகளுக்காக, அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டுகிறபோது, பின் பகுதியில் இருக்கிற குளியலறைகள், கழிவறைப் பகுதிகள்தான் சேதமடைந்து அதன்மூலம் எல்லா குடியிருப்புப் பகுதிகளும் விரைவில் பழுதடைந்துவிடுகின்றன. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாமல் இருப்பதற்காக, நவீன முறையில் அவைகளை அமைத்து, கட்டிக்கொடுத்தால் பழுதடையாமல் இருக்கும் என்ற காரணத்தால் நல்ல குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, எந்த அரசும் நாங்கள் நல்ல குடியிருப்புகளைக் கட்டித்தர மாட்டோம் என்று சொல்லாது. கட்டப்பட்ட பிறகுதான் அது நல்ல குடியிருப்பா, அல்லவா என்பது தெரியவரும். இந்த அரசு நிச்சயமாக நல்ல குடியிருப்புகளைக் கட்டித்தரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy :** Hon. Speaker Sir, now all the Officers who are working in other Departments are being allotted houses on rental basis by the Housing Board. May I know from the Hon'ble Chief Minister, whether in the same manner, the Officers in Police Department will be given preference by the Housing Board in the allotment of houses so that they can occupy the houses and pay the rent ?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, வாடகைக்கு வீடுகளை விடுவதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கின்றார்கள். இந்த வீடுகளை வாடகைக்கு விடுவதா அல்லது சொந்தமாக விடப்படுவதா என்பதைப் பற்றி எல்லாம் அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை. இவை எல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பொ. முருகேசன்.

**திரு. பொ. முருகேசன் :** தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் தொகுதியில் பாலுசெட்டிச்சத்திரம் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட ஏற்கெனவே இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலேயே புதிய காவலர் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்க ஆவன செய்யப்படுமா?



1997 மார்ச் 21]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, வருகிற ஆண்டில் எந்தெந்த மாவட்டங்கள் என்று உள்ள பட்டியலில், காஞ்சிபுரம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25,791 குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டிருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். கட்டித் தரப்பட்டிருக்கின்ற அந்தக் குடியிருப்புகளில், வேலூரிலேகூட அப்படி 200 குடியிருப்புகள் பழுதடைந்திருக்கின்றன. பழுதடைந்து இருக்கக்கூடியவற்றை சீர் செய்வதற்காக நிதி ஒதுக்கப்படுவதில்லை. புதிதாகக் கட்டுவதற்குத்தான் நிதி ஒதுக்கப்படுகிறது. ஆகவே பழுதடைந்தவற்றை ரிப்பேர் செய்வதற்காவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக உத்தரவிட்டு, வேலூரில் இருக்கக்கூடிய குடியிருப்புகளை சரி செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கொண்டித்தோப்பிலே உள்ள வீடுகள் பழுதடைந்து விட்டன என்று அறிந்த பிறகுதான் அவைகளையெல்லாம் இடித்துவிட்டு 368 புதிய குடியிருப்புகளைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல எந்தப் பகுதியில் அத்தகைய பழுதடைந்த நிலை இருந்தாலும், அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமேயானால், அதுபற்றி ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் முதன்முதலில் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் அந்தப் பகுதியிலேதான் போட்டியிட்டார்கள். அங்கு போடப்பட்ட சாலைகள், குடிநீர் வசதிகள், கழிவறை வசதிகள், விளக்கு வசதிகள் எல்லாம் அப்போது செய்யப்பட்டவைதான். இன்னமும் அவைகள் பொதுப்பணித் துறையால் சீர்செய்யப்படவில்லை. தண்ணீர் எடுப்பதற்குக்கூட அந்தக் காவலர்கள் வெளியில் வந்துதான் எடுக்கிறார்கள். ஆகவே புதிய வீடுகளைக் கட்டுகிற அதே நேரத்தில், சாலை, குடிநீர் போன்ற வசதிகளையும் அவற்றின் உள்ளேயே செய்து தரப்படுமா ? அதைப்போலவே அந்த வீடுகளில் தனித்தனி மின்சார மீட்டர்கள் வைத்து அவைகளுக்குரிய

கட்டணத்தைச் செலுத்துவதற்கு வழிவகை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவம் அவர்கள், மாநகராட்சி மன்றத்திற்கு அண்ணா அவர்கள் அந்தப் பகுதியில் ஏற்கெனவே போட்டியிட்டார்கள் என்று கூறினார்கள். போட்டியிட்டுத் தோற்றுவிட்டார்கள் அந்த மாநகராட்சி மன்றத் தொகுதியில். ஒருவேளை தொடர்ந்து வந்த அரசுகளுக்கெல்லாம், அண்ணாவையே தோற்கடித்த அந்தப் பகுதிக்கு ஏன் இவைகளையெல்லாம் செய்ய வேண்டும் என்ற கோபம் இருந்திருக்கலாம். (சிரிப்பு) இனிமேல் அதை மன்னித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற இந்த யோசனைகளையெல்லாம் ஏற்று செயல்படுத்த முடியுமா என்பதை, அரசு பரிசீலிப்பதைப் பற்றி பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 282, திரு. மீ. அ. வைதியலிங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

282—

## தீயணைப்புப் பயிற்சி நிலையம் அமைத்தல்

*** 4073—திரு. மீ. அ. வைதியலிங்கம் :**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்தில் தென் மாநிலங்களுக்கான தீயணைப்புப் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ)

தற்போது சென்னை பேசின்பிரிட்ஜ் சாலையிலே அமைந்துள்ள மாநில தீயணைப்புப் பயிற்சி நிலையத்தை மாற்றி, அதனை தாம்பரத்தில் 4 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளோடு அமைத்திட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



**திரு. மீ. அ. வைதியலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாம்பரத்தில் இந்தப் பயிற்சி நிலையம் எந்தப் பகுதியில் அமைக்கப்பட இருக்கிறது ? அதிலே மத்திய அரசின் பங்கு உண்டா ? அதிலே பயிற்சி பெறப் போகிறவர்கள் அதிகாரிகள் அளவில் இருப்பவர்களா அல்லது நேரடியாகக் களப்பணியில் இருக்கக்கூடிய தீயணைப்புப் பணியாளர்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீயணைப்பு நிலையம் பயிற்சி நிலையமாகவும், விரிவாக்கப்பட்ட தீயணைப்பு நிலையமாகவும் அங்கே அமையும். மேம்படுத்துதல் மற்றும் சிறப்பு வகை நிதி என்ற வகையில் 1996 - 2000 வரையிலான இந்த ஆண்டுகளுக்கு 10-வது நிதிக்குழு மாநிலங்களுக்கென பரிந்துரை செய்து, தமிழ்நாடு தீயணைப்புத் துறைக்கு 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதைக்கொண்டுதான் இந்தப்பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதைப் போல தீயணைப்புத் துறையிலே பணியாற்றுகின்ற தீயணைப்பாளர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கவும் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ. மாரிமுத்து.

**திரு. அ. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வானூர் தொகுதியில், வானூர், மரக்காணம் தீயணைப்பு நிலையங்கள் தனியார் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு அரசுக் கட்டிடம் கட்டித்தர ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தமிழகத்திலே ஏற்கெனவே இருந்த

தீயணைப்பு நிலையத்தை பெரிதுபடுத்தி, விரிவாக்கிப் பயிற்சி அளிக்கின்ற அளவிற்கு, இன்னும் சொல்லப்போனால் நாக்பூருக்கு அடுத்தபடியாக இன்னொரு பிரிவாக, தென் மாநிலங்களிலே உள்ள தீயணைப்புத் துறை அதிகாரிகள் எல்லாம் வந்து பயிற்சி பெறக்கூடிய இரு இடமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த முக்கியமான கேள்வியில், ஒவ்வொரு ஊருக்கும் தீயணைப்புப்படை வருமா என்ற கேள்விகளுக்கும், வாடகைக் கட்டிடம் மாற்றப்படுமா என்ற கேள்விகளுக்கும் பதிலளிப்பது இயலாத காரியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புப் பணியைப் பொறுத்தவரையிலே முன்பிருந்த நிலை வேறு. எல்லாம் குடிசைகளாகவும் ஓட்டு வீடுகளாகவும் இருந்த நிலைபோய், இன்றைக்குப் பல மாடிக் கட்டிடங்கள் எல்லாம் வந்துவிட்டன. சென்னையை உலுக்கிய தீச்சம்பவங்களிலே முக்கியமானது எல்.ஐ.சி. தீப்பற்றிய சம்பவம். அப்போது தான், பலமாடிக் கட்டிடங்களில் தீயணைப்பதற்கான 'ஸ்நோர்க்கெல்' என்ற இயந்திரம் வாங்கப்பட்டது. இன்றைக்கு பல முக்கிய நகரங்கள், கோவை, திருச்சி, மதுரை போன்ற எல்லா நகரங்களிலுமே பலமாடிக் கட்டிடங்கள் வந்துவிட்டன. அந்தப் பலமாடிக் கட்டிடங்களிலே தீ ஏற்படுவதைத் தடுப்பதற்காகவும், தீயை அணைப்பதற்காகவும் 'ஸ்நோர்க்கெல்' போன்ற இயந்திரங்கள் எல்லா மாநகரங்களுக்கும் வாங்கி வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயை அணைப்பதற்கு எல்லாவிதமான நவீன யுக்திகளையும் அரசு கையாளத் தவறாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தென் மாநிலங்களுக்கான தீயணைப்புப் பயிற்சி நிலையம் என்கிற காரணத்தினாலே, நான்கு மாநிலங்களைச் சார்ந்தவர்கள் வருகிறபோது, தமிழகத்திற்கு தனி இடம் ஒதுக்கப்படுமா ? இதிலே அதிகாரிகள் மட்டும் பயிற்சி பெறுகிறார்களா, அல்லது களப்பணியாளர்களும் பெறுகிறார்களா, என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையம் என்ற முறையிலே களப் பணியாளர்கள் அங்கே பயிற்சி பெறுவார்கள். இது தென் மாநிலங்களுக்கும் உகந்தது. நாக்பூரினுடைய ஒரு பிரிவு இங்கே அமைகிறது என்ற அளவில் மற்ற மாநிலங்களிலே உள்ள அதிகாரிகளும் இங்கே பயிற்சி பெறுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 283, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

283—

## ஆண்கள் கலைக்கல்லூரி அமைத்தல்

*** 2013— திரு. இரா. மணிமாறன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திண்டுக்கல் நகரில் ஆண்கள் கலைக்கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் பகுதியில் அரசின் சார்பாக ஒரு மகளிர் கல்லூரி இருக்கிறது. ஒரு தனியார் கல்லூரியில் ஆண், பெண் இருபாலரும் பயின்று வருகிறார்கள். அந்தப் பகுதியிலே நூற்றுக்கணக்கான மேல்நிலைப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் கல்லூரி வகுப்புக்குச் செல்வதற்கு போதிய இடம் இல்லாத காரணத்தால், வேறு பல மாவட்டங்களை நோக்கிச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது.

[1997 மார்ச் 21

எனவே, திண்டுக்கல் பகுதியில் ஒரு ஆண்களுக்கான கல்லூரி அமைத்துத் தர அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை இந்த அவையில் எடுத்துச் சொன்னதைப்போல கல்வித் துறையில் கல்லூரிக்காக நிதி ஒதுக்கக்கூடிய வாய்ப்பு மிகக்குறைவாக இருக்கிறது. எனவே, தனியார் அப்படிப்பட்ட கல்லூரிகள் துவங்க முன்வந்தால், அதுபற்றி ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆண்டவனின் பிள்ளைகள்தான் மக்கள்' என்று சொல்லப்படுகிறது, எனவே, அறநிலையத் துறையிலே இருக்கக்கூடிய நிலங்களை, கல்வித் துறை கையகப்படுத்தி, கல்விப்பணிக்குப் பயன்படுத்த விரும்புகிறவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமாகக் கையகப்படுத்துவது என்பது அந்தத் துறை இயங்குவதையே தடை செய்வதாக இருக்கும். தேவைப்படுகிறபோது அந்தத் துறையோடு கலந்தாலோசித்து உரிய வகையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவதற்கு முயற்சிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது பவானி பகுதியில் இலவசமாக 10 ஏக்கர் பூமியைக் கொடுத்தால், அரசு கல்லூரி அமைக்க முன் வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கல்லூரி தொடங்குவதற்கு நிலம் இல்லாமல் அரசு திண்டாடவில்லை, நிதியில்லாமல் திண்டாடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இரா. மணிமாறன்.



1997 மார்ச் 21]

**திரு. இரா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மலைக்கோட்டை மாரியம்மன் கோவில் பரம்பரை அறங்காவலர்கள் தங்களுடைய சுய நிதியிலிருந்து கல்லூரி தொடங்குவதற்கு முன்வந்தால் அவர்களுக்கு அரசு அனுமதி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரியமுறைப்படி விண்ணப்பம் இருக்குமானால் அது பரிசீலனைக்குரியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 284, திரு. ஏ. ராசேந்திரன் மற்றும் திரு. ஏ.எம். ராமசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

284—

**இளநிலைக் கல்லூரி தொடங்குதல்**

*** 4009— திரு. ஏ. ராசேந்திரன் :**
**திரு. ஏ. எம். ராமசாமி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் மேல்நிலைக் கல்வியைத் தனியாக பிரித்து "இளநிலைக் கல்லூரி" தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயற்படுத்தப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தற்போது அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஏ. ராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மேல்நிலைப் பள்ளிக் கல்வி 1978-வது ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. பக்கத்து மாநிலமான ஆந்திராவில் 1969 ஆம் ஆண்டு ஆரம்பித்து, அங்கெல்லாம் 1976 ஆம் ஆண்டு ஜூனியர் காலேஜ் என்று ஆரம்பிக்கப்பட்டு, இன்றைக்கு கர்நாடகா, கேரளா,

மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் எல்லாம் ஜூனியர் காலேஜ் இருக்கிறது. கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்காக இதைப்போன்று மேல்நிலைப் பள்ளிகளைத் தனியாகப் பிரித்து அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்து, விடையாக நான் சொல்ல விரும்பும் கருத்து இது. அடிக்கடி கல்வி முறைகளை மாற்றி மாற்றித்தான் கல்வி முறை செம்மைப்படுவது தவறிப் போய் இருக்கிறது. இப்போது ப்ளஸ்-2 முறை இருக்கிற காரணத்தால், கல்வித் தரம் குறைபாட்டிற்கு ஆளாகிவிடவில்லை. மேலும் பரவலாக கல்வி இடம் பெற வேண்டும் என்ற அந்த நோக்கத்திலே ப்ளஸ்-2 முறை எந்த அளவுக்கு வாய்ப்பாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு ஜூனியர் கல்லூரி ஏற்படுத்துவதற்கு அதிகச் செலவாகும் என்ற காரணத்தால் அது கல்வி வளர்ச்சிக்கு வாய்ப்பாக அமையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 285, திரு. எம். முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

285—

## ஹோமியோபதி கல்லூரிக்குக் கட்டிடம் கட்டுதல்

*** 2149—திரு. எம். முத்துராமலிங்கம் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் அரசு மருத்துவமனைக்குள் நடைபெற்று வரும் ஹோமியோபதி கல்லூரியை இடமாற்றம் செய்து புதிதாக கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். உள்ளது.



**திரு. எம். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலத்தில் அரசு மருத்துவமனைக்குள் நடைபெற்று வருகிற ஹோமியோபதி கல்லூரிக்கு இடம் மாற்றி புதிய கட்டடம் வழங்கப்படுமா என்று கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்கு இடம் கையகப்படுத்தப்பட்டு விட்டதா, கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலத்தில் தற்போது போதிய வசதிகளின்றி பழைய கோர்ட் அலுவலகத்தில் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி இயங்கி வருகிறது. அதை விரிவுபடுத்த வேண்டுமென்பதற்காக திருமங்கலம் அருகிலுள்ள மறவன்குளம் என்ற கிராமத்தில் சர்வே நம்பர் 4/2 மற்றும் 6-ல் சுமார் 20 ஏக்கர் நிலத்தை இந்திய மருத்துவத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அங்கே கட்டடம் கட்டுவதற்காக இந்த ஆண்டு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் கட்டடப் பணித் தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 286, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

286—

## எரிவாயு மின் உற்பத்தி நிலையம் அமைத்தல்

*** 3954—திரு. குத்தாலம் பி. கல்யாணம் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

குத்தாலத்தில் எரிவாயுவைப் பயன்படுத்தி எரிவாயு மின் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

[1997 மார்ச் 21

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குத்தாலம் இயற்கை எரிவாயு கண்டுபிடிப்பை பொறுத்தவரை அது ஆரம்ப நிலையில் இருப்பதால் தேவையான தகவல்கள் கிடைக்கப் பெற்றவுடன் எரிவாயு மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் நகரின் நடுவில் ஓடுகிற காவிரி ஆற்றின் கரையில் எரிவாயு கிணறு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதிலே இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற கிணறுகளில் இருப்பதைவிட அதிகமாக கனமீட்டர், கியூபிக் மீட்டர் எரிவாயு கிடைக்கக்கூடிய வகையில் அந்தக் கிணறு அமைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்கள் அதையொட்டி கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். வேலை தொடங்குகிற நேரத்தில் வாகனங்கள் செல்லக்கூடிய அளவுக்கு அங்கேயிருக்கிற சாலைகளும் பாலங்களும் சீர் செய்யப்பட்டு புதியதாக அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் சாத்தியக்கூறுகள் அங்கே இருக்கிறதா என்று ஆராய்ந்தோம். அதற்கு அந்தக் கழகம் சாலைகளைப் பற்றியும் மற்றவைகளைப் பற்றியும் சொல்லவில்லை. அதற்கு மாறாக குத்தாலம் இயற்கை எரிவாயு கண்டுபிடிப்பைப் பொறுத்தவரையில் மிகவும் ஆரம்ப நிலையில் இருப்பதாகவும், அதுகுறித்து முழு விவரங்கள் தெரிந்தவுடன் மின் வாரியத்திற்குத் தகவல் தெரிவிப்பதாகவும் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப்போல சாலைகளை அகலப்படுத்தினால்தான் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும், நமக்கு எரிவாயு கிடைக்கும் என்றால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களோடும், முதலமைச்சர் அவர்களோடும் கலந்து பேசி, நம்முடைய தமிழ் நாட்டினுடைய நன்மைக்காக அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம்.



1997 மார்ச் 21]

**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேருந்து வாகனங்களுக்கு எரிபொருளுக்குப் பதிலாக இந்த எரிவாயுவைப் பயன்படுத்தி இயக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதலிலே எரிவாயு கிடைக்கட்டும். பிறகு அதுபற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 287, திரு. மு. பெ. சாமிநாதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

287—

### வெள்ளக்கோவில் தொகுதி குடிநீர்த் திட்டம்

*** 232—திரு. மு. பெ. சாமிநாதன் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி மக்களுக்குப் பயன்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரைவுபடுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) : வெள்ளக்கோவில் தொகுதிக்குட்பட்ட முத்தூர், வெள்ளக்கோவில், மூலனூர், கன்னிவாடி, குண்டடம் சின்னக்கம்பாளையம் மற்றும் குளத்துப்பாளையம் ஊரகப் பேரூராட்சிகள், காங்கேயம் நகர் பேரூராட்சி, தாராபுரம் நகராட்சி மற்றும் 964 ஊரக வழியோர குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் காவிரி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் முதல்நிலை பணிகள் அனைத்தும், 1998-ஆம் வருடம் மார்ச் மாதத்திற்குள் முடித்துவிடப்படும், திட்டம் தயார் நிலையில் வரும்.

[1997 மார்ச் 21

**திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பெரியார் மாவட்டம் கொடுமுடி அருகே காவிரி கரையிலிருந்து உருவாகி வருகின்றது. இந்தத் திட்டம் நான்கு நிலைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதன் முதல் நிலையாக வெள்ளக்கோவில் தொகுதி முத்தூர் பேரூராட்சியிலும் காங்கேயம் தொகுதி காங்கேயம் பேரூராட்சியிலுமாக இப்போது வேலை நடைபெறுகிறது. இதனுடைய முதன்மைப் பொறியாளரும் நானும் நேற்று இந்தத் திட்டத்தை பார்வையிடச் சென்றிருந்தோம். இந்த 5,6 மாதங்களாகத்தான் இந்தத் திட்டம் விரைவாக நடைபெற்று வருகிறது. மேலும் இரண்டாவது நிலையாக வெள்ளக்கோவில் தொகுதியில் வெள்ளக்கோவில் பேரூராட்சி, மூலனூர் பேரூராட்சி மற்றும் கன்னிவாடி பேரூராட்சிகளுக்கு இந்த நிதிநிலை ஆண்டில் அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இதைப்பற்றி நான் ஏற்கெனவே விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். இது எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டம். இது அடுத்த ஆண்டு மார்ச்சுக்குள் முடித்து விடுவதென்று உறுதி அளிக்கப்பட்ட திட்டம், இதிலே எதையும் இந்த ஆண்டுதான் செய்யவேண்டுமென்று இல்லை. தொடர்ச்சியாக அந்தப் பணி நடைபெறுகிறது. கூடுமானவரையில் மார்ச்சுக்குள்ளேயே அதை நிறைவேற்றுகின்ற நிலையை ஏற்படுத்தும் வகையில் இந்த நான்கு வகையான திட்டங்களும் ஒரே நேரத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு அது நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஊரிலே அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் ஒரு நல்ல திட்டம். ஆனால் கடந்த ஆட்சியாளர்களால் அங்கே மோசமான பைப் எல்லாம் போடப்பட்டது. அன்றைக்கு அமைச்சர் அவர்கள் அங்கே வந்து எல்லா அதிகாரிகளிடமும் பேசியும், நானும் நமது அமைச்சர் பொங்கலூர் திரு. பழனிச்சாமி அவர்கள் எல்லாம் போய் பார்த்துச் சொல்லி வந்தும்கூட இன்னும் கிராமங்களுக்குக் குடிநீர் வரவில்லை. குடிநீரை காட்டியிருக்கிறார்களேயொழிய, அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு பின்னரும் இன்னும் எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வரவில்லை, நான் விசாரித்த அளவிலே அந்தத் திட்டம் சரியாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னால் 10,15 கிராமங்களை



1997 மார்ச் 21]

ஒன்றாகச் சேர்த்து ஒரு ஸம்ப் அமைத்து அந்தத் தண்ணீரை பம்ப் செய்தால்தான் சரியாகப் போகும் என்று இன்ஜினியர்கள் எல்லாம் சொல்கிறார்கள். எனவே இப்போது மிகவும் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் இருக்கின்ற நேரத்திலே அதிகாரிகளை அதிகமாக முடுக்கிவிட்டும், அதிகாரிகளை அதிகமாகச் சேர்த்தும், வல்லுநர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்தும் அந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தை நேரடியாகப் பார்வையிட்டபோது குழாய்களில் பழுது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது உண்மை. தமிழ்நாடு பூராவிலும் ஏற்கெனவே பதிக்கப்பட்ட குழாய்களில் பழுது வந்து கொண்டுதான் இருக்கிறது. அது பழுதேயில்லை. தகுதிவாய்ந்த பைப்பைப் பயன்படுத்தாத காரணத்தால் பழுது தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. தொடர்ந்து சீர்செய்து கொண்டுதான் இருக்கிறோம். முழுமையாக தமிழ்நாடு பூராவிலும் அதை மாற்றுவது என்பது இயலாத காரியம். பைப்பும் கிடைக்காது, குழாயும் கிடைக்கப்போவது இல்லை, அந்த அளவிற்கு பணி செய்வதற்கு கால அவகாசம் போதாது. ஆகையினால் எங்கெங்கே பழுது ஏற்படுகிறதோ அவைகளைப் பரிசீலித்து கூடுமானவரையில் திட்டங்களை விரைவுபடுத்தி மக்களுக்கு நீர் வழங்குவதைத் துரிதமாக இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் இதற்கு ஏதாவது இந்தப் பணிகள் தேவையென்று விரும்பினால் மாண்புமிகு உறுப்பினர் என்னிடத்தில் தெரிவித்தால் தனிக் கவனம் செலுத்தப்படும்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 288, திரு கோ. தளபதி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

288—

### சேடப்பட்டி தொகுதிக்குக் குடிநீர் வழங்குதல்

***2082—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 மார்ச் 21

சேடப்பட்டி தொகுதிக்கு வைகை ஆறு, குன்னூரிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேடப்பட்டி தொகுதிக்கு வைகை ஆறு, குன்னூரிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேடப்பட்டி தொகுதி நிலத்தடி நீர்வளம் மிகவும் குறைந்து போன பகுதியாகும். ஆகையால், இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவாக நிறைவேற்றித் தந்தால், சேடப்பட்டி தொகுதி மக்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்பதால், விரைந்து இந்தத் திட்டம் தீட்டப்படுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவிதமான பூர்வாங்கப் பரிசிலனையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அநேகமாக 1997 மே மாதத்திற்குள் வாரியத்தினுடைய பரிசிலனை முடிந்து, அரசுக்கு அறிக்கையை விரைவில் அனுப்ப வேண்டும் என்று நான் தெரிவித்திருக்கிறேன். அது வரும் என்று எதிர்பார்க்கிறேன். அதற்குப் பிறகு, பணிகள் துவங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. ஆசையன்.

**திரு. பெ. ஆசையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதிக்கு உட்பட்டிருக்கிற குன்னூர், வைகை ஆறு சம்பந்தப்பட்ட கேள்வி. 1972ஆம் ஆண்டு நமது மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், அன்றைக்கு முதல்வராக இருந்தபோது, ஆண்டிப்பட்டிக்கு வருகை தந்து, அங்கு வறட்சி நிலவிய காலத்தில் வந்திருந்த வேளையில், ஆண்டிகளைப் போல வாழ்ந்து கொண்டிருக்கிற ஆண்டிப்பட்டி தொகுதி மக்களுக்கு குடிதண்ணீரைத் தரவேண்டும், அது என்னுடைய கடமை என்று சொல்லிவிட்டு, இந்தத் திட்டத்திற்கு யாரும் முயற்சிக்கவில்லை நானாக முயற்சித்து, இத்தனை ஆண்டுக்காலத்தில் இவ்வளவு மக்கள் தொகை இருக்கும் என்று கணக்கிட்டு, இரண்டாயிரமாவது ஆண்டில், வருகிற மக்கள் தொகைக்குத் தகுந்தாற்போல, குடிதண்ணீர்த் திட்டத்தை அமைத்துத் தந்திருக்கிறேன் என்று சொல்லி, குன்னூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை நான் இப்போது தருகிறேன் என்று சொல்லி, அந்தச்



1997 மார்ச் 21]

செயல் பணியைத் துவக்கி வைத்துவிட்டு வந்தார்கள். அதற்குப் பின்னால் ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு, தொடர்ந்து சில கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அதே இடத்திலே முறைகேடாக அமைக்கப்பட்டதாலும் அதற்குப் பின்னால், அது முறையாக பராமரிக்கப்படாததாலும், குன்னூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினுடைய கிணறுகள் இருக்கிற இடத்தில் மணல்கள் கான்ட்ராக்ட் விடப்பட்டு, அவைகள் எல்லாம் அள்ளிச் செல்லப்பட்டு விட்டதாலும் சிதைந்து போய்விட்டது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் சுருக்கமாகப் பேச வேண்டும். இது கேள்வி நேரம், உரையாற்றுகிற நேரம் அல்ல.

**திரு. பெ. ஆசையன்:** இப்போது ஆண்டிப்பட்டி தொகுதி மக்கள் 16 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீரைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்போதுகூட தொடர்ச்சியாகப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், இனி அமைக்கப்படுகிற கூட்டுக் குடிநீர் திட்டங்கள் அந்த இடத்தில் அமைக்கப்படுகிறபோது, இப்போது செயல்பட்டு வருகிற குன்னூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், எம். சுக்லாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், கண்டமனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்களினுடைய செயல்பாடுகளில் இருக்கிற குறைகளையும் களைய முயற்சி மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை ஆறு என்று சொன்னவுடனே எல்லாத் திட்டங்களையும் ஒன்றாக இணைத்துவிடக் கூடாது. வைகையில் தண்ணீர் எடுத்துக் கொடுப்பது என்பது தனித் தனித்திட்டங்களாக அமைக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. எனவே, உறுப்பினர் குறிப்பிட்ட திட்டம் ஆய்வில்தான் இருக்கிறது. அதைப்பற்றிய முடிவு, ஆய்வு முடிந்தபிறகு தெரிவிக்கப்படும். இருப்பினும் ஏற்கனவே போடப்பட்ட குழாய்கள் மூலம் தடுப்பு ஏற்படுகிறது. அதனால் குடிநீர் கொடுப்பதற்கு இடையூறு ஏற்படுகிறது என்பதை உடனடியாக நாளையே கவனிக்கின்ற ஒரு நிலையை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தையே அறிவித்துவிட்டார்கள். 5 ஆண்டுக்காலத்திற்குள்ளாக தமிழ்நாடு பூராவிலும் உள்ள அத்தனை குடியிருப்புகளும், தகுதி வாய்ந்த குடிநீரை, பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பெறவேண்டும் என்பதை முழு நிறைவு பெறவேண்டும் என்பதை அறிவித்திருக்கிறார்.

அதையொட்டி பணிகள் விறுவிறுப்பாக தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறன.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என் தொகுதியில் எனக்கு முன்னால் இருந்த முன்னாள் சபாநாயகர் அவர்கள் ரூபாய் 52 கோடி அளவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிட்டதாகவும் பணியை நாங்கள் ஆரம்பிக்கப் போகிறோம் என்றும் சொல்லி, தேர்தல் அறிக்கையிலே கொடுத்திருந்தார்கள். அதைக் கருத்திலே கொண்டு, நமது அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாயால் சொன்னதெல்லாம் திட்டமாகிவிடாது, பத்திரிகையிலே வந்ததெல்லாம் உறுதியாகிவிடாது. கோப்புகள் ஏதாவது இருந்து, அவர்கள் அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று விரும்பினால், அதை எனக்குத் தெரிவித்தால், அதை உடனடியாக நான் நிறைவேற்றித் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். இருந்தாலும் இந்த அரசு அதைப் பற்றி மீண்டும் பரிசீலித்து நடவடிக்கையைத் துவங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 289, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

289—

**விவசாயிகள் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்தல்**

*** 2501 திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—

ஏனைய தொழில்களில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு உற்பத்தியாளர்களே விலை நிர்ணயம் செய்வதைப்போல், விவசாயிகளும் தங்கள் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்து கொள்ள அரசு வழிவகை செய்து தருமா?

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.





**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு நிலையான மூலதனம் நிலமாகவும், ஆண்டுதோறும் அவர்கள் செலவிடுகின்ற உரம், பூச்சிக்கொல்லி மருந்து போன்ற இடுபொருட்களுக்கான செலவு ஓர்க்கிங் கேப்பிட்டலைப் போலவும் இருக்கின்ற காரணத்தால் இன்றைக்கு அவர்கள் வேளாண்மைத் தொழிலிலே மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொழில் அதிபர்களாவது ஒரு பகுதியை முதலீடு செய்துவிட்டு, பெரும்பகுதியை வங்கிக் கடன் மூலமாகவோ அல்லது பங்கு மூலதனத் திரட்டல் மூலமாகவோ பெற்றுவிடுகிறார்கள். ஆனால் விவசாயிகளாக இருக்கக்கூடியவர்கள், கூட்டுறவுத் துறையிலே கடன் வாங்கினாலும் பெரும்பாலும் அவர்கள் தனியாரிடம் அதிக வட்டிக்குத்தான் கடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, வேளாண்மைத் தொழில் இன்றைக்கு இலாபகரமாக இல்லை. ஆகவே இந்த வேளாண்மைப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யக் கூடிய அளவிற்கு அதில் குறைந்தது 30 சதவீதமாவது அவர்கள் இலாபம் பெறக்கூடிய அளவிற்கு ஏதேனும் ஒரு வழிவகையை மாநில அரசு செய்து தருமா? சில பொருள்களுக்கு கரும்பு போன்ற பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்கின்ற உரிமை மத்திய அரசாங்கத்திடம் இருக்கின்ற காரணத்தினால் நாம் நினைத்தால்கூட - மாநில அரசாங்கம் கரும்பு விலையை உயர்த்துவதற்கு பல தடைகள் அல்லது சங்கடங்கள் இருப்பதாக முன்பு ஒரு முறை அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இது மாதிரியான விவசாய விளைபொருட்களுக்கான இந்த விலை நிர்ணயம் செய்கின்ற அதிகாரத்தை மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில அரசாங்கமே பெறுவதற்கு வழிவகை காண அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்துகொள்ள வகை செய்யப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டார்கள். ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வது என்பதில், அவர்கள் அதை எந்த விலைக்கு வேண்டுமென்றாலும் விற்கலாம். இதில் எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. ஆனால் மத்திய அரசில்தான் இதுபோல விலை நிர்ணயிப்பது என்று

இருக்கிறது. நெல், கரும்பு இவைகளுக்கு அவர்கள்தான் விலை நிர்ணயிக்கிறார்கள். அதுபோல பல்வேறு பொருட்களுக்கும் மாநில அரசாங்கத்தினுடைய கருத்தைக் கேட்டு, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல், கரும்பு போன்றவைகளுக்கும், சோளம், மக்காச் சோளம், கேழ்வரகு, துவரை, பச்சைப்பயறு, உளுந்து, நிலக்கடலை, சோயா பீன்ஸ் பருப்பு, சோயா பீன்ஸ், மஞ்சள், சூரியகாந்தி விதை, பருத்தி எப்.414, எச்.777, எச்.4, பி.எப்.சி. புகையிலை, கரிசல் மண் எப்.2 தரம் போன்ற பொருட்களுக்கு மத்திய அரசு விலை நிர்ணயிக்கிறது. அதேபோல மத்திய அரசுதான்-விலை நிர்ணயிக்கின்ற அந்தக் குழு அங்கு இருக்கின்ற காரணத்தால் இதில் கூட இந்தியா அளவில் சராசரி விவசாயிகளுடைய செலவு, எந்த அளவிற்கு உற்பத்தி செய்யக் கூடிய ஒவ்வொரு பொருளுக்கும் என்று ஒவ்வொரு மாநில அரசாங்கத்தினுடைய கருத்தையும் கேட்கிறார்கள். நம்முடைய கருத்தையும் சொன்னபிறகு, அந்தக் குழு தான் இப்போது விலை நிர்ணயம் செய்கிறார்கள். மாநில அரசாங்கத்திற்கு இதுபோல விலை நிர்ணயம் செய்கின்ற அந்த உரிமை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அதிகாரத்தை நாம் பெறுவதற்கு வழி இருக்கிறதா என்றுதான் நான் கேட்டேன். அப்படி இல்லாவிட்டாலும்— வெள்ளம் வந்தாலும், வறட்சி வந்தாலும், விவசாயிகள்தான் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே—குறைந்தபட்சம் இந்தப் பயிர் பாதுகாப்பு காப்பீட்டுத் திட்டத்தை, அனைத்து விவசாயிகளும் பெறுகிற வகையில் ஏதேனும் சிறப்புத் திட்டங்களை அரசு செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மத்தியிலே அமைந்திருக்கின்ற ஐக்கிய முன்னணி அரசு இன்சூரன்ஸ் திட்டம் ஒன்று கொண்டு வந்து—இந்தியாவில் 15 மாவட்டங்கள் என்று நான் கருதுகிறேன்—எல்லா பயிர்களுக்கும் முழுமையாக பிரிமியம் தொகையை அவர்கள் கட்டுவதாக அறிவித்திருக்கிறார்கள். கூட்டுறவுக் கடன் அதைப்போல நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வாங்கியவர்கள் மட்டுமல்ல, கடன் வாங்காத விவசாயிகளும் கூட இன்சூரன்ஸ் செய்வதற்கு திட்டம் இருக்கிறது. பிரிமியம் தொகையைக்கூட, மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கம் இரண்டும் இணைந்து செலுத்தி



அவர்களுக்கு நட்டம் ஏற்பட்டால் உதவி கிடைக்கக் கூடிய வகையில்— நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அங்கு எடுத்துச் சொன்னதன் பேரில் — இப்போது நம்முடைய தமிழகத்திலே, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலே பிரிக்கப்படாத மாவட்டத்திலே இப்போது பிரிக்கப்பட்டிருக்கிற ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் உட்பட இரண்டும் ஒரே மாவட்டமாகக் கருதி அந்த மாவட்டத்திலே — இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு கே. எம். விஜயகுமார்.

**திரு. கே. எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி வட்டம் என்று அறிவிக்கப்பட்டால்தான் அந்தப் பிரிமியம் கட்டியிருந்தாலும் தற்போது வழங்கிவருகிறார்கள். தனிப்பட்ட ஒரு விவசாயி - இன்றைய தினத்திலே கடன் வாங்கி, பிரிமியம் செலுத்திய விவசாயிகளுடைய நிலத்திலே விளைச்சல் பாதிக்கப்பட்டாலும்கூட, அவர்களுக்கு அந்த நட்ட ஈடு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** அப்படி பிரிமியம் செலுத்தப்பட்டு இன்சூரன்ஸ் செய்யப்பட்டிருந்தால், பாதிப்பிற்கு ஆளான விவசாயி தெரிவிக்கிறபோது அறிக்கை பெற்று, அதன்மூலம் அவர்களுக்குரிய நஷ்டஈட்டுத் தொகையைப் பெறக் கூடிய அந்த வாய்ப்பு இப்போதும் இருக்கிறது.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய கரும்பு, விலை நிர்ணயித்து வாங்கப்படுகிறது. ஆலைகள் அரைவை செய்ததற்குப் பின்னாலே, அதே சீனியை விவசாயிகள் வாங்குகிறபோது கடைக்காரர்கள் கூறுகிற விலைக்கு வாங்க வேண்டியிருக்கிறது. அதேபோல, பருத்தியை விவசாயி உற்பத்தி செய்கிறார். அது பஞ்சாகி, துணியாகி வருகிறபோது, திரும்பவும் கடைக்காரர் விற்கிற விலைக்கு வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, உற்பத்தி செய்கிற விவசாயி, தான் விலை நிர்ணயித்து வாங்க முடியாத இந்த அவல

நிலையைப் போக்குகின்ற வகையிலே, விலையை நிர்ணயிக்கிற உரிமையை வைத்திருக்கிற மத்திய அரசாங்கத்திடம், நம்முடைய மாநில அரசாங்கம் வலியுறுத்தி. விவசாயிகள் விலை நிர்ணயித்துக் கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துவதற்குத் தனி முயற்சிகளை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விலை நிர்ணயம் செய்வது என்பது, ஒவ்வொரு மாநிலத்திற்கும் விவசாயிகள் உற்பத்திச் செய்கின்ற பொருள்களின் விலையைப் பொறுத்து ஒவ்வொரு விதமாக இருக்கின்றது. அந்த அடிப்படையிலே எல்லா மாநிலங்களினுடைய விவரங்களையும், மத்திய அரசாங்கம் கேட்டு, அதை அந்தக் குழுவிலே வைத்து நிர்ணயிக்கிறார்கள். நம்முடைய மாநில அரசாங்கத்தினுடைய கருத்தையும் கேட்கிறார்கள். நாம் சொல்கிறோம். நெல் உற்பத்தி செய்யும்போது, அதிலே சாதாரண நெல் உற்பத்தி செய்தால் அவர்களுக்கு என்ன செலவாகும், அதேபோல, பைன் வெரைட்டிக்கு என்ன செலவாகும் என்று இப்படிப்பட்ட ஒவ்வொன்றுக்கும் நாம் சொல்கிறோம். இந்த அளவுக்கு விலை இருக்க வேண்டும் என்ற நம்முடைய கருத்தையும் சொல்கிறோம். அந்தக் கருத்தையும் அவர்கள் கேட்டுக்கொண்டுதான், மத்தியிலே விலையை நிர்ணயம் செய்கிறார்கள். இப்போது 1996-97-க்கு சாதாரண நெல் ரகம் ஒரு குவிண்டாலுக்கு 370 ரூபாயாக விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நேர்த்தியான ரகம் அதாவது பைன் வெரைட்டி 390 ரூபாய். மிக நேர்த்தியானது. அதாவது சூப்பர் பைன் 410 ரூபாய் என விலை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. இது, அரசாங்கம் பி.டி.எஸ். மூலமாகக் கொள்முதல் செய்கின்றதே அந்த விலை. ஆனால், இதை விடக் குறைத்து விவசாயிகள் யாரும் விற்க வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் அரசாங்கத்திற்கு, வாங்கிக்கொள்கிறோம் விலை அரசாங்கம் தரும் என்பதுதான் மைய அரசின் நிலை. இதுகூட கொஞ்சம் குறைவு என்ற காரணத்தினால் — நாமாக ஒரு விலையைக் கொடுக்க முடியாது. அதற்குத்தான் — நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு ஊக்கத் தொகையாக ஒரு குவிண்டாலுக்கு 50 ரூபாய் கொடுக்கிறார். இந்த 370,390,410 என்பது ஒரு குவிண்டாலுக்கான விலை என்றாலும்கூட ஊக்கத் தொகையாக ஒரு குவிண்டாலுக்கு 50 ரூபாய் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அறிவித்து 44.75 கோடி ரூபாய் இந்த ஆண்டு அந்த விவசாயிகளுக்குத் தர அனுமதித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு முறை கேட்டாகிவிட்டது. (குறுக்கீடு) சரி, கேளுங்கள். திரு ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதுமைக்கு விலை நிர்ணயம் செய்கின்றபோது தாராள மனப்பான்மையும், நெல் போன்ற பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்கின்றபோது கஞ்சத்தனமும் காட்டப்படுவதாக ஒரு கருத்து விவசாயிகளிடம் நிலவுகிறது. அதைப்போக்க அரசு ஏதாவது முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நன்மையை அரசு கவனிக்கிற அதே நேரத்தில், வாங்கிப் புசிக்கிறவர்களுடைய நன்மையையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. இந்த விலை ஏறினால் அங்கே அந்த விலை ஏறும். அதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறபோது, காப்பீடு சம்பந்தப்பட்டவை வழங்குவது ஒரு சிக்கல் நிறைந்த பிரச்சினையாக இருக்கிறது. அநேகமாக என்னுடைய நாகை-காயிதே மில்லத் மாவட்டம், ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம் போன்ற இடங்களில் வெள்ளத்தால் பயிர் பாதிக்கப்பட்டு இருக்கின்ற அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையாக இந்தக் காப்பீடு கிடைப்பதில்லை. அதற்கு மாறாக, கூட்டுறவு வங்கியிலே கடன் பெற்றிருக்கிற விவசாயிக்குத்தான் நன்மை கிடைப்பதாக இருக்கிறது. அதனாலே, ரெவின்யூ துறையும் சேர்ந்து, விவசாயிகளிடமிருந்து கிஸ்தி வசூல் செய்கிறபோது, இந்தக் காப்பீட்டுத் திட்டத்திற்கான தொகையையும் சேர்த்து வசூல் செய்தால் அனைத்து விவசாயிகளும் நன்மை அடைவார்கள். அதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல பயிர் இன்ஷுரன்ஸ் செய்து, அவர்கள் கூட்டுறவு வங்கிகளிலே கடன் வாங்குகின்றபோது, அந்தப் பிரிமியம் தொகையை வசூல் செய்துவிடுவார்கள். அதுபோல, நாட்டுடமை

[1997 மார்ச் 21

ஆக்கப்பட்ட வங்கிகளிலும் அவர்கள் வசூல் செய்து கொள்வதற்கான அனுமதியை, கடன் வாங்கக்கூடிய விவசாயிகளே தரலாம். இல்லாவிட்டால் அவர்கள் செய்ய வேண்டும். சில நேரங்களிலே அவர்கள் அந்த பிரிமியத்தைச் செலுத்துவதில்லை. அதனாலேதான் இதுபோன்ற பிரச்சனைகள் வருகின்றன. இதையெல்லாம் உத்தேசித்துத்தான் இப்போது நம்முடைய மாநில அரசாங்கத்தினுடைய வேண்டுகோளை ஏற்று பிரிமியம் 10,000 ரூபாய் வரைக்கும்கூட செலுத்துவது—மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் விவசாயிகளுக்காக இவர்களே முழு பிரிமியத்தையும்கூட செலுத்துவது—என்று சொல்லி பரிட்சார்த்தமாக இது நடைமுறையிலே எப்படி ஏற்றதாக இருக்கும் என்பதை அறிய, இந்திய அளவில் 15 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அதிலே நம்முடைய மாநிலத்திலே ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், நாகை-காயிதே மில்லத் மாவட்டம் சேர்ந்து ஒரு மாவட்டமாக அது கருதப்பட்டு, நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். அதை ஏற்றுக்கொண்டு அறிவித்து விடுவார்களேயானால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காணப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 290, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

290—

**நிலத்தடி நீர்மட்டம் உயர்த்துதல்**

***867—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதியில், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெருந்துறை தொகுதியில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



1997 மார்ச் 21]

(ஆ) வினா எழவில்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை சட்டமன்றத் தொகுதியிலே ஊத்துக்குளி, பெருந்துறை ஆகிய இரண்டு ஒன்றியங்களும் 90 சதவீதம் வானம் பார்த்த பூமி. அங்கே நிலத்தடி நீர் என்பது தொள்ளாயிரம் அடிக்கும் கீழே சென்றுவிட்டது. அதற்கு நிலத்தடி நீரை உயர்த்தாவிட்டால் அங்கே போடப்பட்டிருக்கின்ற ஆழ்குழாய் கிணறுகளும் அதற்கென செலவு செய்யக்கூடிய மின் ஆற்றல் செலவும் பல வகையிலே வீணாகப் போகக்கூடும் என்ற அச்சம் இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு அங்கே இருக்கின்ற 50 குளங்களுக்கும், 200 குட்டைகளுக்கும் தண்ணீர் கொடுக்க, குடிநீர் நோக்கத்திற்காக அங்கே தண்ணீர் கொடுக்கிற காரியத்தில், பொதுப்பணித் துறை ஈடுபடுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீரை உயர்த்துவது பற்றித்தான் கேள்வி கேட்டார். இப்போது கொஞ்சம் பி.ஏ.பி.யிலிருந்து தண்ணீரைக் கொண்டு வருவதற்கு வழி சொல்கிறார் என்று, நான் கருதுகிறேன். அதுதானே சொல்கிறீர்கள் இல்லையா? ஆனால் பொதுவாக நிலத்தடி நீரை ஆர்ட்டிஃபிஷியல் ரீ-சார்ஜ் மூலம்தான் உயர்த்த முடியும். பெர்குலேஷன் பாண்டு கட்டுவது, செக்-டாம் கட்டுவது, அதற்குப் போதிய வசதிகள், நீர்வரத்துக்கள் இருந்தால் உள்ளாட்சித் துறையின் மூலம், வேளாண்மைத் துறையின் மூலம் அந்த பெர்குலேஷன் பாண்டு கட்டுகிறார்கள். செக்-டாம் கட்டுகிறார்கள். அவைகள் இருந்தால் அரசு அதைப் பற்றி பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 291, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

291—

**பொன்விளைந்த களத்தூர் ஏரிக்குத் தண்ணீர் விடுதல்**

***3949- திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம், பொன்விளைந்தகளத்தூர் ஏரிக்கு வாத்துக்கால்வாய் மூலம் தண்ணீர் வருவது இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1975 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தில் நீஞ்சல் மடுவு அணைக்கட்டின் வலது ஏரியில் உடைப்பு ஏற்பட்டுவிட்ட காரணத்தால் ஏரிக்குத் தண்ணீர் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. இதைச் சரி செய்வதற்கு 54 இலட்சம் ரூபாயிலே ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தலைமைப் பொறியாளர் அலுவலகத்திலே பரிசீலனையில் இருக்கிறது. அறிக்கை கிடைத்த பிறகு அரசு அதுகுறித்து பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே இந்தக் கால்வாயைச் செப்பனிடுகிறேன் என்றுசொல்லி பல இலட்ச ரூபாயை 5 ஆண்டு காலத்திற்குள்ளாக செலவு செய்தும் இதுவரையில் அந்த ஏரிக்கு தண்ணீரே வரவில்லை. அந்த நீஞ்சல் மடுவில் ஒரு சரியான அணையைக் கட்டி அந்தக் கால்வாயைச் சீர் செய்தால்தான் களத்தூர் ஏரிக்குத் தண்ணீர் வரும். அதன்மூலம் சுமார் 4,000 ஏக்கர் பயன்படக்கூடிய அளவுக்கு இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலாவது அதற்கு வேண்டிய பணத்தை ஒதுக்கீடு செய்து ஆங்கிலேயர் காலத்திலிருந்து செப்பனிடப்படாமல் இருக்கின்ற அந்த களத்தூரான் கால்வாயைச் செப்பனிட அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல 1975 ஆம் ஆண்டு ஏற்பட்ட மழையின் காரணமாக — நீஞ்சல் மடுவிலே இருந்து தண்ணீர் இந்த ஏரிக்கு வரவேண்டும் — அந்த நீஞ்சல் மடுவிலே வலக்கரையிலே ஒரு உடைப்பு ஏற்பட்டுவிட்டது. அவர்





குறிப்பிட்டதைப் போல 1985-86 ஆம் ஆண்டு 12 இலட்சம் ரூபாய் செலவு செய்தார்கள். ஆனால் மீண்டும் அதில் உடைப்பு ஏற்பட்டுவிட்டது. எனவே இப்போது 54 இலட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன். அது தலைமைப் பொறியாளருடைய பரிசீலனை முடிந்து அரசுக்கு வருகிறபோது அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 292, திரு. கே. சுந்தர், திரு. எஸ்.ஆர். சிவலிங்கம், மற்றும் திரு. ஜி. சொக்கலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

292—

## கிராமப்பகுதிகளில் நகரப் பேருந்துகள் இயக்குதல்

*1592— **திரு. கே. சுந்தர் :**
**திரு. எஸ்.ஆர். சிவலிங்கம் :**
**திரு. ஜி. சொக்கலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேருந்துகள் இயக்கப்படாத கிராமப் பகுதிகளில் நகரப் பேருந்துகள் இயக்கும் தூர அளவை 35 கிலோ மீட்டர் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இதற்கான ஆணை நடைமுறையில் உள்ளது.

முற்பகல் 10-15

**திரு. கே. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியின் அர்த்தம் மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது 1990-91 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது அப்போதைய நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் அப்போது இருந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்துப் பேசும்போது பேருந்துகள் இயக்கப்படாத கிராமங்களுக்கு 35 கிலோ மீட்டர் தூரம் வரை நகரப் பேருந்துகள் இயக்கப்படும் என்று

அறிவித்தார்கள். ஆனால் நான் கேட்ட கேள்வி, இப்போது இயக்கப்படுகின்ற நகரப் பேருந்துகளின் தூர அளவை எல்லா வழித் தடங்களிலும் 35 கிலோ மீட்டர் வரை இயக்கப்படுமா என்பதுதான். எனவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்று நடைமுறைப்படுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் இயக்கப்படாத கிராமப் பகுதிகளில் நகரப் பேருந்துகள் இயக்கும் தூர அளவை 35 கிலோ மீட்டர் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா என்றுதான் கேள்வியிலே கேட்கப்பட்டிருக்கிறது. அந்தக் கேள்விக்குத்தான் நான் பதில் சொல்லியிருக்கிறேன். ஆயிரம் மக்கள் தொகைக்குக் குறையாது இருக்கிற இடங்களில் 35 கிலோ மீட்டர் வரை நகரப் பேருந்துகள் இயக்கப்படுவதற்கு அரசாணை தற்போது நடைமுறையில் உள்ளது. எல்லாப் பேருந்துகளையும் 35 கிலோ மீட்டர் வரை நீட்டிக்கிற செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஆர். சிவலிங்கம்.

**திரு. எஸ். ஆர். சிவலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து திருச்சி ரோடு வழியாக கம்மாளப்பட்டி செல்லும் தூரம் 30 கிலோ மீட்டர். அதைப்போல இன்னொரு பேருந்து ஆத்தூர் ரோட்டில் வெள்ளாளகுன்றம் வழியாக திருமனூர் வரை செல்லுகிறது. அதுவும் 30 கிலோ மீட்டர் தூரம். ஆனால் கம்மாளப்பட்டிக்கும், திருமனூருக்கும் இடையில் இருக்கக்கூடிய தூரம் 5 கிலோ மீட்டர். ஆனால் இந்தப் பக்கம் செல்லுகிற வண்டியைக் கேட்டால் 30 கிலோ மீட்டருக்கு மேல் செல்லாது என்றும், அதைப் போல அந்த வழி சென்றாலும் 35 கிலோ மீட்டர் வருவதால் எங்களால் வண்டி அனுப்ப முடியாது என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே, அதை நீட்டித்து திருமனூர் வரை வரக்கூடிய கம்மாளப்பட்டி வண்டியையும், கம்மாளப்பட்டி வரை செல்லக்கூடிய அந்த வண்டியையும் திருமனூர் செல்ல ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்மாளப்பட்டி-திருமனூர் இடையிலே பேருந்துகள் இல்லாமல் இருக்குமானால் நகரப் பேருந்துகளை நீட்டிக்கலாம். அங்கே பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கிறபோது இவைகளை நீட்டிக்க இயலாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. சொக்கலிங்கம்.

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் அறிவித்த அந்த அடிப்படையில் நகரப் பேருந்துகள் இல்லாமல் கிராமங்களில் மட்டும் அல்ல, குறிப்பாக என்னுடைய தொகுதியே மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கே இரண்டு பிரிவுகள், ஒன்று எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் இன்னும் ஒன்று, பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் ஓடுகின்றன. நான் ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரடியாக மனு கொடுத்திருக்கிறேன். கூடுவாஞ்சேரிக்கும் மறைமலைநகருக்கும் அங்கே என்ன சொல்லுகிறார்கள் என்றால் அது மெட்ரோவாக இருப்பதால் அங்கே போக முடியாது என்று சொல்லுகிறார்கள். இப்படி இருக்கிற கிராமங்களில் 5 கிலோ மீட்டர் தூரத்தை இப்போது நீட்டித்துக் கேட்டால் இல்லை என்கிறார்கள். குறிப்பாக திருப்போரூர் போகும் வழியில் கேளம்பாக்கம் இருக்கிறது, இதற்கு ஏற்கனவே நீட்டித்துக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக முன்பு இருந்தபோதே ஏற்கனவே 25 கிலோ மீட்டர் என்று இருந்ததை 30 கிலோ மீட்டராக மாற்றினார்கள். இப்போது நீங்கள் 30 கிலோ மீட்டரை 35 கிலோ மீட்டராக ஆக்கினாலும்கூட இப்படிப்பட்ட கிராமங்களுக்கு இந்தப் பேருந்துகள் போவதற்கு வசதியாக ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, இந்த நகரப் பேருந்துகள் கூடுமானவரையில் பல கிராமங்களுக்கு உள்ளே செல்ல மாட்டேன் என்கிறது. 2 கிலோ மீட்டர் தூரம்கூட போக மாட்டேன் என்கிறார்கள். ஆகவே பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு— இப்போது எல்லாம் மக்கள் தொகை அதிகமாக இருக்கிற காரணத்தால்-வசதியாகவும், தொழிலாளர்கள் பணிக்குச் செல்ல முடியாத காரணத்தாலும் இதை நீட்டித்து மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விதத்தில் சட்டத்தைத் தளர்த்தி இதற்கு ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே 20 கிலோ மீட்டர், 25 கிலோ மீட்டர் என்றுதான் இருந்தது. இப்போது 30 கிலோ மீட்டர் அளவுக்கு வளர்ந்து இருக்கிறது. நகரப் பேருந்துகளில் கட்டணம் குறைவு. ஆகவே நகரப் பேருந்துகளை இந்த மாதிரி நீட்டித்துக்கொண்டே செல்வோமானால் எல்லாமே நகரப் பேருந்துகளாக மாறக்கூடிய சூழ்நிலைகள் வரும். ஆகவே, அங்கே மொபசல் பேருந்துகள்

[1997 மார்ச் 21

விடப்பட்டிருக்கின்றன. அவைகள் இல்லாத இடங்களில், பேருந்துகள் ஓடாத இடங்களில். 30 கிலோ மீட்டர் தூரத்தை 35 கிலோ மீட்டர் தூரமாக நீட்டித்துக் கொடுக்கப்படும். ஆகவே இதை அதிகரிக்க செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இப்போது பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 293, திரு. டி. நடராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

293—

**பழுதடைந்த பாலத்தை சீர்செய்தல்**

***3451—திரு. டி. நடராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) செஞ்சி, சங்கராபரணி ஆற்றின் குறுக்கே உள்ள பாலம் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாலத்தை சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இதற்கான நிதி நிலைமை அதிகமாகும் என்ற காரணத்தால் இப்போது அதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

**திரு. டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி, சங்கராபரணி ஆற்றின் குறுக்கே இருக்கின்ற பாலம் கட்டப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. தற்போது இந்தப் பாலம் உடைந்து பாதி பாலம் அடைக்கப்பட்டு ஒருவழிப் பாதையாக இருக்கிறது. அதனால் கடந்த மழையின் போது இந்தப் பாலம் இடிந்து விழக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பாலத்தை தலைவர் கலைஞர் அவர்கள் கருணை உள்ளத்தோடு உடனடியாக எடுத்து வரும் நிதி ஆண்டிலாவது இதற்கு நிதி ஒதுக்கீடு செய்து சீர்செய்துதர ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் நூறு ஆண்டுகள் ஆகிறது என்பது



1997 மார்ச் 21]

உண்மைதான். அதிலே சிலது பழுதுபட்டிருக்கிறது என்பதும் உண்மைதான். வெள்ளக் காலத்திலே அதற்கான உடனடி நிவாரணம் செய்யப்பட்டிருக்கிறது. அரசினுடைய நிதிநிலையிலே பார்ட்-2-விலே இதை எடுத்துக் கொள்கிற வசதிகள் இப்போது இல்லை. கிட்டத்தட்ட இதற்கு 3 கோடி ரூபாய் செலவாகும். ஆகவே, இதைத் தனித் திட்டமாக எடுத்து, நபார்ட் ஸ்கீமிலாவது நடத்தமுடியுமா என்பதை வருகிற காலங்களில் இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ஜி. சம்பத்.

**திரு. ஏ. ஜி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சங்கராபரணி ஆற்றின் குறுக்கே உள்ள பாலம், மாண்புமிகு உறுப்பினர் நடராஜன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போன்று, இரண்டு வழிகளிலே தொடர்ந்து பேருந்துகள் சென்றால், பாலத்திற்குச் சேதம் ஏற்பட்டு விடும் என்கின்ற நிலையிலே, தடுப்புச் சுவரெல்லாம் எழுப்பி அங்கே அந்தப் பாலம் மிக மோசமான சூழ்நிலையிலே இருக்கின்ற காரணத்தினால், ஒருவேளை அந்தப் பாலம் ஏதாவது சேதம் ஏற்பட்டு விட்டால் அந்த வழியாகச் செல்லுகின்ற பாதை முழுவதுமாக அடைபட்டு விடுமோ என்கின்ற காரணத்தினால் அரசு மறுபரிசீலனை செய்து அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு மீண்டும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலத்தை வெள்ளக் காலங்களில்கூட நானே நேரில் சென்று பார்வையிட்டிருக்கிறேன். அதனுடைய நிலைமையை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது. ஆகவே, நிதிநிலையைப் பொறுத்து, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் எடுத்துக் கொள்வதற்காக இந்த அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 294, திரு. கு. மனோகரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

294—

**நூற்பாலையைப் புதுப்பித்தல்**

***4687—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



D
V211,31N97
N47.24.2
216348

[1997 மார்ச் 21

தருமபுரி கூட்டுறவு நூற்பாலையைப் புதுப்பித்து சீராகச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி கூட்டுறவு நூற்பாலையை சீராகச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் சுமார் 96 ஸ்பிண்டில்களில் தற்போது 46 மட்டும்தான் இயங்கி வருகிறது. சுமார் 200 தொழிலாளர்களுக்கு மேல் அங்கே வேலையிழந்து இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, ஆலையைச் சீர்படுத்தி, நல்லமுறையில் இயக்க அரசு மேற்கொண்டு என்னென்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 96 பேல் - ஸ்பிண்டில் அல்ல - 25,000 ஸ்பிண்டில்கள் கொண்ட அந்த ஆலை இப்பொழுது முழு வீச்சுடன் செயலாற்றி வருகிறது. அதிலும் ஒரு மகிழ்ச்சியான செய்தி, இந்த மாதத்திலிருந்து அது இலாபகரமாக இயங்கக் கூடிய அளவிற்கு அதனுடைய நிலை மாற்றப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், முதலமைச்சரவர்கள் அளித்த கடன் தொகையில் அந்த ஆலைக்கு ஒரு கோடி ரூபாய் பஞ்சு வாங்குவதற்காகக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதே சூழ்நிலையிலே நீடித்தால், சவுத் இண்டியன் டெக்ஸ்டைல் ரிசர்ச் அசோசியேஷன் மூலம் பெறப்பட்டிருக்கின்ற மாடர்னைஸ்சேஷன் ஸ்கீம் என்ற அடிப்படையிலே அந்த ஆலையை விரைவிலே இன்னும் சிறப்பாக நடத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசிலே தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்த 18 நூற்பாலைகளும் நலிவுற்ற நிலையிலே நஷ்டத்திலே இயங்கி வந்தன என்பதை இந்த மாமன்றத்திலே அறிவித்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் நலிவுற்ற மில்களுக்கெல்லாம் 2 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அந்த மில்களை நல்லமுறையில்



1997 மார்ச் 21]

நடத்துவதற்கு மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்களிடத்திலே ஒப்புவித்தார்கள். அந்த வகையிலே, என்னுடைய அரவக்குறிச்சி தொகுதியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மலைக்கோவிலூரிலுள்ள திருச்சிராப்பள்ளி கூட்டுறவு நூற்பாலை நலிவுற்ற நிலையிலே இருந்ததை மாண்புமிகு அமைச்சர் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இன்றையதினம் நல்லமுறையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டு விட்டதா, எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கரூர் நூற்பாலையைப் பற்றித்தான் கேட்கிறார் என்று நினைக்கிறேன்.

**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** மலைக்கோவிலூர்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** அதுதான், மலைக்கோவிலூர், கரூர் நூற்பாலை 90 சதவீத வீச்சில் நடைபெறுகின்ற அளவிற்கு தற்சமயம், பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த வாரம் நானே நேரில் சென்று தொழிலாளர்களோடு கலந்து பேசி, அந்தப் பகுதியிலுள்ள தொழிலாளர் தலைவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடன் கலந்து பேசி, அந்த ஆலையினுடைய நிதிநிலையை விரிவாக எடுத்துச் சொல்லி, எதிர்காலத்திலே மீண்டும் மூடாமல் அது தொடர்ந்து இயங்குவதற்குரிய அளவிற்கு, அதனுடைய பொருளாதார வழிமுறைகளை ஆராய்ந்து ஒப்பந்தம் செய்ய வேண்டுமென்று அறிவித்து வந்திருக்கிறேன். அதற்குத் தேவையான பஞ்சு இப்போது கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. இதற்கிடையிலே தொழிலாளர்களோடு ஒரு ஒப்பந்தம் போட வேண்டுமென்ற அடிப்படையில் அங்கே பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பேட்டையில் அரசு கூட்டுறவு நூற்பாலை ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே ஏறத்தாழ 2 ஆயிரம் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த நூற்பாலையைப் பொறுத்தமட்டில், நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாகத் தகவல் கொடுக்கிறார்கள். காரணம் அங்கே பஞ்சு வாங்குவதற்கு நிதி இல்லாத காரணத்தால், கடன் மூலம் பஞ்சு அதிக விலை கொடுத்து வாங்குகின்ற காரணத்தால் அங்கே அதிக நஷ்டம் உருவாகிறது என்ற காரணத்தால், இப்போது அந்த மில் நஷ்டத்தில் இயங்கி வருகிறது என்று தெரிவிக்கிறார்கள். எனவே, அரசு, அந்த மில் சிறப்பாகச் செயல்படுவதற்கு நிதியுதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலே இருக்கின்ற நூற்பாலைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்த கடன் உதவியிலிருந்து கணிசமான அளவிற்கு நிதியுதவி அளிக்கப்பட்டு, அந்த ஆலையும் இப்போது முழுமையாகத்தான் இயங்கி வருகிறது. ஆனால், கடந்த காலத்திலே ஏற்பட்ட நஷ்டத்தைவிட இன்று நிர்வாகம் செம்மைப்படுத்தப்பட்ட காரணத்தால் நஷ்டம் குறைந்திருக்கிறதேயொழிய லாபம் பெறுவதற்குரிய வாய்ப்பு இன்னும் கிடைக்கவில்லை. நிச்சயம், எதிர்காலத்திலே அதையும் ஒரு லாபகரமான ஆலையாக மாற்றுவதற்குரிய வழிமுறைகளை இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது தருமபுரி நகரில் கூட்டுறவுத் துறை மூலமாக இயங்கிக்கொண்டிருக்கிற ஆலை பற்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லாபத்தில் இயங்குகிறது என்று தருமபுரி மாவட்டத்திலே ஊத்தங்கரையில் இயங்குகிற அந்த ஆலையைப் பற்றிக் கூறியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். தருமபுரியில் 76 பேர்தான் வேலை செய்கிறார்கள். அதைச் சிறப்பான நூற்பாலையாக இயக்கினால் இன்னும் 200 பேர் வேலைவாய்ப்பு பெறுவார்கள். அந்த வகையில் இதைச் சீர்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி கூட்டுறவு நூற்பாலை சீராகச் செயல்படுவதற்கு அரசு இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 295, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.





295—

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

***2112—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாமக்குடி தொகுதி, பாம்பூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ): பரமக்குடி தொகுதி, பாம்பூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பூர் கிராமமானது எனது சொந்த கிராமமாகும். அந்தக் கிராமத்திலே இயங்குகின்ற கால்நடை மருத்துவமனையானது கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், பாம்பூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனைக் கட்டிடம் கட்ட வேண்டுமென்று கோரிக்கையை விடுத்தபோது, அடுத்த ஆண்டு கண்டிப்பாகக் கட்டித் தருகிறேன் என்று அவர்கள் வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். அதன் அடிப்படையில் நான் உள்ளாட்சித் தேர்தலிலே நின்று இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருகிறேன் என்று கூறி வெற்றி பெற்றிருக்கிறேன். இது எனக்கு மட்டுமல்ல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொகுதிக்கும் அதிகப்படியான நன்மை பயக்கக்கூடியது. எனவே, கண்டிப்பாக இந்த ஆண்டு பாம்பூரில் கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி பஞ்சாயத்து யூனியன், பாம்பூர் மற்றும் பார்த்திபனூர் ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்படுகின்றன. கால்நடைகளின் தினசரி

[1997 மார்ச் 21

சராசரி வருகை எண்ணிக்கை 40-க்கு மேல் இருப்பின் கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்த பகுதி 2 திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் பரிசீலிக்கப்படுகிறது. இக்கால்நடை மருந்தகத்தில் தினசரி சராசரி வருகை எண்ணிக்கை 40-க்குக் கீழ் உள்ளதாலும், அரசு கட்டிடத்தில் இல்லாமல், வாடகையில்லா கட்டிடத்தில் இம்மருந்தகம் இயங்குவதாலும், இதைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு தற்போது சாத்தியமில்லை என்று துறையின் சார்பில் தெரிவித்திருக்கிறார்கள்.

## 2. அமைச்சர்களின் பணியாளர்கள் பேரவையில் அமைச்சர்களுக்கு உதவ வரும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை-பேரவைத் தலைவர் குறிப்புரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுகின்ற உறுப்பினர்களுக்கும் பேரவைத் தலைவர் இருக்கைக்குமிடையிலே நடந்து போகக் கூடாது என்பது மரபு என்பதைப் பலமுறை நினைவுபடுத்தினேன். சட்டமன்ற நடவடிக்கையிலே அனைவருக்கும் வழிகாட்டியாக இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட, துணை வினா கேட்கின்ற நேரத்திலே இங்கே பல நிமிடங்கள் நின்று கொண்டிருந்திருக்கிறார். ஆனால், மாண்புமிகு அமைச்சர்களுடைய ஊழியர்கள் உறுப்பினர்களைப் போலவே நடந்து வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்கள் அலுவலகத்திலே வேலை பார்க்கின்ற ஊழியர்களை இந்த ஒழுங்குமுறையைக் கடைபிடிக்கச் சொல்லி வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

## 1. வினாக்கள்-விடைகள்-தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண். 296, திரு. ம. சண்முகம், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.



1997 மார்ச் 21]

296—

### கோழி ஆராய்ச்சி மையம் ஏற்படுத்துதல்

***3480—திரு. ம. சண்முகம்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி பகுதியில் கோழிப்பண்ணைகள் அதிகரித்து வருவதால் தீவனம் மற்றும் நோய் தடுப்புகளுக்கு அங்கு ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே எத்தனை இடங்களில், எங்கெங்கு இதுபோன்ற ஆராய்ச்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கால்நடைப் பல்கலைக் கழகத்தின் மூலம் 16 பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன. நாகர்கோவில், திருநெல்வேலி, மதுரை, இராஜபாளையம், கரூர், நாமக்கல், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், தருமபுரி, திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், வேலூர், திருப்பூர் மற்றும் தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டத்தில், மொத்தம் 16 இடங்களில் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சிப் பகுதியிலே, விவசாயிகள் நவீன முறையிலே Broiler parent unit— என்று சொல்கின்ற அந்தத் தாய்க் கோழிகளை வளர்த்து வருகிறார்கள். பெரும் முதலீட்டிலே வளர்க்கப்படுகின்ற அந்தத் தாய்க் கோழிகளானது அவ்வப்போது நோய்வாய்ப்பட்டு பெருத்த நஷ்டம் ஏற்படுகின்றது. ஆகவே, கோவை மாவட்டத்திலே, திருப்பூரிலே இருக்கின்ற அந்த ஆராய்ச்சி மையம் மூடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆகவே திருப்பூரிலே செயல்படாமல் இருக்கின்ற அந்த ஆராய்ச்சி மையத்தை பொள்ளாச்சிக்கு மாற்றித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழி நோய்த் தடுப்பு ஆராய்ச்சி நிலையங்கள் பெரியார் மாவட்டம் ஈரோட்டிலும், சேலம் மாவட்டம் ஆண்டலூர் கேட் பகுதியிலும் இயங்கி வருகின்றன. அதேபோல் தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி மையம் கோவையில் உள்ளது. ஆகவே பொள்ளாச்சிப் பகுதியிலுள்ள கோழி வளர்க்கும் விவசாயிகள் அருகிலே உள்ள கோவை ஆராய்ச்சி நிலையத்தைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 297, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

297—

**தக்காளிப் பழக்கூழ் தொழிற்சாலை**

***3740—திரு. ஆர். ஆர். சேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியில் விளையும் தக்காளிப் பழங்கள் மூலம் "பழக்கூழ்" தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஓமலூர் தொகுதியில் பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஓமலூர் தொகுதிக்குட்பட்ட காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் தொழிற் துறையில் பின்தங்கியப் பகுதியாக





அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கே பல கிராமங்களில் தக்காளி விளைச்சல் அதிக அளவிலே இருக்கின்றது. உதாரணமாக கொங்குப்பட்டி, காரவள்ளி, குண்டுக்கல், செம்மாண்டப்பட்டி, பூசாரிப்பட்டி, டேனிஷ்பேட்டை, லோக்கூர் போன்ற பகுதிகளிலிருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 200 லாரி லோடுகள் தக்காளி அண்டை மாநிலமான பெங்களூருக்கு அனுப்பப்படுகின்றன. அதைத்தான் நாம், பெங்களூர் தக்காளி என்று நகர்ப்பகுதிகளிலே பயன்படுத்தி வருகிறோம். ஆகவே அந்தப் பகுதியிலுள்ள தொழிலாளர்கள் வேலை பெறும் வகையிலேயும், அங்கேயுள்ள விவசாய விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையிலும் அங்கே ஒரு பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓமலூர் பகுதியிலே குறிப்பிட்ட காலத்திலே தக்காளி விளைச்சல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதுபோக, பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்குப் போதிய தண்ணீர் வசதியும் தேவைப்படுகிறது. சிறுதொழிலைப் பொறுத்தளவில் அரசினுடைய கொள்கை, தொழிற்சாலை ஆரம்பிப்பதில்லை. ஆகவே, தனியார் ஆரம்பிப்பதற்கு முன்வந்தால் அதற்குரிய உதவிகளை அரசு வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 298, திரு. அ. லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

298—

**வணிக வளாகம் அமைத்தல்.**

***59—திரு. அ. லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலியிலுள்ள அருள்மிகு நெல்லையப்பர்-காந்திமதி திருக்கோயிலுக்குச் சொந்தமான "தாமரைக் குளத்தை" நிரப்பி, அதில் "வணிக வளாகம்" அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு செயல்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

[1997 மார்ச் 21

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். 3-3-1990-ல் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களின் தலைமையில் முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

(ஆ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான தாமரைக்குளத்தில் வணிக வளாகம் கட்ட முதலில் ரூ.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. வணிக வளாகம் கட்டும் பணிகளோடு, குளத்தை மண் போட்டு நிரப்புதல், சமப்படுத்துதல் மற்றும் பாசன வாய்க்கால் அமைத்தல் போன்ற வேலைகளுக்கு ரூ.6 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. தற்போது விலைவாசி உயர்வின் காரணமாக அனுமதிக்கப்பட்ட நிதியாதாரத்துக்குள் வணிக வளாகம் கட்டும் பணிகள் செய்ய முடியாது என்பதால், ரூ.161 இலட்சத்திற்குத் திருத்திய மதிப்பீடு தயார் செய்து, திருநெல்வேலி இணை ஆணையர் அவர்களால் 5-2-1997-ல் பரிந்துரை செய்யப்பட்டு, அது பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாமரைக்குளம் திருநெல்வேலி நகரத்தினுடைய மையப் பகுதியில் இருக்கிறது. அங்கே தனியார் கடை ஒன்றுக்கு 3 இலட்ச ரூபாய் பகடி, நன்கொடையாகத் தருகின்றார்கள். அந்த அளவுக்கு இருக்கிறபோது, அங்கே வணிக வளாகம் கட்டினால், வியாபாரிகள் கடைக்கு கணிசமான நன்கொடையும், முன்பணமும் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே, அதன் மூலமாக 80% நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும். மீதித் தொகையை பணக்காரக் கோயில்களான திருச்செந்தூர் அல்லது பழனி கோயில்களிலிருந்து கடனாகப் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே, நிதியைக் காரணம் காட்டாமல் உடனடியாக இந்த வேலையை முடிக்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.



1997 மார்ச் 21]

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயிலின் ஆண்டு வருமானம் பசலி 1405-ன்படி, 21,14,808 ரூபாய் ஆகும். திருக்கோயிலின் நிரந்தர முதலீடாக 3,34,737 ரூபாய் வங்கியில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திருக்கோயிலின் வருவாயைப் பெருக்குவதற்காக 'தாமரைக்குளம்' சர்வே எண் 3-ல் 10,800 சதுர அடி உள்ள பகுதியில் 25 கடைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு, 9-8-1991-ல் 70 இலட்சம் ரூபாய்க்கு திட்ட மதிப்பீட்டுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து கடனாக ரூபாய் 25 இலட்சமும், இதர திருக்கோயில்களிலிருந்து ரூபாய் 10 இலட்சமும், தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து கடனாக ரூபாய் 35 இலட்சமும், ஆக 70 இலட்சத்திற்கு நிதி கோரப்பட்டு, வணிக வளாகம் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டது. குளத்தில் மண் நிரப்புதல், சமப்படுத்துதல், பாசன வாய்க்கால் அமைத்தல் போன்ற வேலைகளுக்கு 6 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டது. அதன்பிறகு அந்தப் பணி தொடராமல் கிடப்பில் போடப்பட்டது. இந்த நிலையில் தற்சமயம் வணிக வளாகம் கட்டுவது தொடர்பாக, புதிய விலை விகிதப்படி 161 இலட்ச ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, திருநெல்வேலி இணை ஆணையரால் 5-2-1997-ல் பரிந்துரை செய்யப்பட்டது. திருத்திய மதிப்பீட்டுக்கு அங்கீகாரம் பெறவும், மதிப்பீட்டுக்கு ஏற்றவாறு நிதி ஆதாரம் திரட்டவும், பணியினை விரைவில் தொடங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலிலிருந்தும், பழனி திருக்கோயிலிலிருந்தும் கடனாகப் பெற்று, இப்போது 161 இலட்ச ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அந்தப் பணியை முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலத்தில் சிறப்புமிக்க கைலாசநாதர் திருக்கோயில் உள்ளது. அந்தக் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் பல ஆண்டுகளுக்கு முன்னால், கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்னால், கடைகள் கட்டி வாடகைக்கு விடப்பட்டு, இப்போது 100 ரூபாய், 150 ரூபாய் என்று வாடகையை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை ரென்யுவல் என்ற முறையில் பொது ஏலத்தில் விட்டால், மாதம்

ஒன்றுக்கு 1,000 ரூபாய் வீதம் அந்தக் கைலாசநாதர் கோயிலுக்கு இலட்சக்கணக்கான ரூபாய் வாடகையாக வசூலாகும். எனவே, அந்த இடத்தைப் பொது ஏலத்தில் விட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டுமென்று இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த ஒப்பந்தப்புள்ளி கொள்கைப்படி அரசுக்குச் சொந்தமான இடங்கள் அனைத்துக்கும் ஏலம் கோரப்பட்டு, ஆலய வருவாயைப் பெருக்குகின்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறியது இன்று இட நெருக்கடி காரணமாக திருநெல்வேலியில் கடைகளுக்கு ஏராளமான கிராக்கி இருக்கிறது. வியாபாரிகளையும் நான் அழைத்துப் பேசியிருக்கிறேன். அவர்கள் முன்பணம் தருவதற்கும் தயாராக இருக்கிறார்கள். நன்கொடையும் கோயிலுக்குத் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே மொத்த மதிப்பீட்டில் 80% நிதியை பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே, நிதியை அவர்கள் காரணம் காட்டாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல, 1990-ல் அடிக்கல் போடப்பட்டு இருக்கும் சூழ்நிலையில், இன்னும் இரண்டு ஆண்டுக்குள்ளாவது வணிக வளாகத்தைக் கட்டி முடிக்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில் நிதியிலிருந்து கடன் பெறுவது என்பது இயல்புதான் என்றாலும், கடைகளை வாடகைக்கு விடுபவர்களிடம் நன்கொடை வாங்குவது என்று சொன்னால், அவர்களுக்கே அந்தக் கடையைக் கொடுக்கக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும், எனவே, கோயில் வருவாயைப் பெருக்குகின்ற வகையில், ஏல முறையைப் பயன்படுத்தக்கூடிய நிலை இல்லாமல் போய்விடும். எனவே, இதுபற்றி பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்.299, திரு. கொ.வி. நன்னன். மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

299—

**கதர் அலகு அமைக்கும் திட்டம்**

***4732— திரு. கொ. வி. நன்னன்:**

மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் கதர் அலகு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை அலகு அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கம் தொகுதியில் கதர் அலகு அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

முற்பகல் 10-40

**திரு. கொ. வி. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதி வேலையற்ற மக்கள் அதிகமாக உள்ள பகுதி. அந்த வேலையற்ற மக்கள் கதர்த் தொழில் செய்வதற்கு ஆர்வமாக உள்ளனர். ஆகவே, இந்த மக்களின் வேலைவாய்ப்புக்காகவும் தொகுதியின் வளர்ச்சிக்காகவும் கதர் வாரியத்தின் மூலம் அலகு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா என்பதையும், எப்போது அமைக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில் ஒரு கதர் அங்காடியும், செங்கம் தொகுதிக்கு அருகில் தோக்கவாடி, காயம்பட்டு, பரமனந்தல், அனுவராபாத் ஆகிய கிராமங்களில் தலா ஒரு கிராமிய நூற்பு நிலையமும் செயல்படுகின்றன. தோக்கவாடியில், வேப்பெண்ணெய் 'எக்ஸ்பெல்லர்' யூனிட் ஒன்றும் செயல்படுகிறது. ஆகவே தற்போது

இது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 300, திரு. வெ. அ. ஆண்டமுத்து மற்றும் திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**300—**

**மீன் களவுபோவதைத் தடுத்தல்**

**•1838—திரு. வெ. அ. ஆண்டமுத்து:**

**திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) பவானிசாகர் அணைக்கட்டிலிருந்து தினமும் சுமார் 50 ஆயிரம் முதல் 1 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மீன்கள் களவுபோய்க் கொண்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இந்தக் கூற்று சரியல்ல.

(ஆ) பவானிசாகர் நீர்த்தேக்கம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் இவ்வாறு மீன்கள் களவு போவதைத் தடுப்பதற்கு தினமும் தீவிர ரோந்துப் பணி மேற்கொண்டு திருட்டு மீன் பிடிப்பு, தடுக்கப்படுகிறது. அவ்வப்போது மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்திலிருந்து சிறப்பு ரோந்துப் பணிகள் நடத்தப்படுவதுடன், தரை வழியாக நடைபெறும் திருட்டு மீன்பிடிப்பைத் தடுக்க ஒரு ஜீப் மூலம் சிறப்புக் காவலர்கள் ரோந்து வருகின்றனர். நீர்வழி திருட்டு மீன்பிடிப்பினைத் தடுக்க புதிதாக உள்பொருத்து இயந்திரம் ஒன்றும் படகில் பொருத்தப்பட்டு, அதன் மூலமும் ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் இந்நீர்த்தேக்கத்தில் சிறப்பான மீன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.





**திரு. வெ. அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அணை தமிழ்நாட்டிலேயே இரண்டாவது பெரிய அணை. இதிலிருந்து வருடத்திற்கு சுமார் 1 கோடி ரூபாய் மதிப்புள்ள மீன்கள் கிடைக்கின்றன. ஆனால் அரசு பங்கு மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும்போது, திருட்டு மீன் பிடிப்பவர்கள், புதுக்காடு என்ற இடத்திலிருந்து அவர்களைக் கற்களால் அடித்து, கத்தியால் வலைகளை அறுத்து, விரட்டி விடுகின்றனர். ஆகவே அவர்கள் மீன் பிடிக்க முடியாமல், இரண்டு நாட்களுக்கு முன்பாக ஒரு புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் 'நாங்கள் ஊரைவிட்டே செல்ல வேண்டிய ஒரு நிலையிருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க முயற்சி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை அரசு கருணையுடன் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணையில் திருட்டு மீன் பிடிப்பவர்கள் நாட்டு வெடிகுண்டுகளைப் பயன்படுத்துவதாகச் சொல்கிறார்கள். எனவே, இதுகுறித்து தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். கடந்த ஆண்டில் நடந்தவைகளைக் கருத்தில் கொண்டு உறுதியான நடவடிக்கை எடுக்க மேலும் தீவிர கவனம் செலுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு திருட்டு மீன் பிடித்ததற்காக 14 முதல் தகவல் அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டு 26 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. திருட்டு மீன் பிடிப்பவர்கள் மீது அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

**(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (•) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)**

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) திருப்பூர் சாயத் தொழிற்சாலைகளுக்கு பற்றாக்குறை நிமித்தம் சுற்றுப்புறங்களிலிருந்து தண்ணீர் அளிப்பது நிறுத்தப்பட்டுள்ளமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. திருப்பூர் பகுதியில் சாயத் தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் எடுப்பது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து உறுப்பினர்கள் திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

* **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்தைப் பொறுத்தவரையிலும், அனேகமாக எல்லா மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய மிகப் பெரிய மையம் என்பதை நாடு அறியும். ஏறத்தாழ, 3 இலட்சம் தொழிலாளர்கள் அங்குள்ள பனியன் தொழிற்சாலைகளில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பனியன் தொழிற்சாலைகள் இயங்குவதற்கு அடிப்படைத் தேவை என்னவென்றால், சாயப் பட்டறைகள். பனியன் துணிகளுக்குச் சாயமிட்டு, பனியன் தொழிற்சாலைகளுக்கு 'சப்ளை' செய்தால்தான், பனியன் உற்பத்தித் தொழிலே நடக்கும்.

முற்பகல் 10-45

இந்த நிலையில், சாயத் தொழிற்சாலைகளுக்கு அடிப்படைத் தேவையான தண்ணீரை, திருப்பூரைச் சுற்றியிருக்கின்ற பொங்கலூர், பல்லடம், அவினாசி போன்ற ஓரளவு நீர் உள்ள இடங்களிலிருந்து, கடந்த சில ஆண்டுகளாகப் பெற்று வந்தார்கள். ஆனால், தற்போது தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் குறைந்து வருகின்ற மாவட்டங்களில் மிக முக்கியமான மாவட்டமாக கோவை மாவட்டம் விளங்குகின்றது. குறிப்பாக, அவினாசி, பல்லடம், திருப்பூர் போன்ற தாலுக்கா பகுதிகளில் கடுமையான வறட்சி ஏற்பட்டு இருக்கின்ற காரணத்தினால், இன்றைக்கு மிகப் பெரிய அளவிற்கு நிலத்தடி நீர் நிலைகள் பாதிக்கப் பட்டிருக்கின்றன. நிலத்தடி நீர் நிலை கீழே போய்க் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், சுற்றுப்புற விவசாயிகள் திருப்பூர் சாயத் தொழிற்சாலைகள் தண்ணீர் எடுத்துச் செல்வதைத் தடுக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். பல இடங்களில் மறியல்கள் நடைபெறுகின்றன. எனவே, தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவது பெரும் பிரச்சினையாக



இருந்து வருகிறது. கடந்த முறை நான் சட்டமன்றத்தில் பிரச்சினையைக் கிளப்பியதற்கு பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை முன் வைத்தார்கள். அதன் அடிப்படையில் அங்கே ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டி மூலம் மூன்று அம்சங்களைக் கொண்ட முன்மொழிவுகள் இங்கே அனுப்பப்பட்டிருக்கின்றன.

எனவே, நான் தங்கள் மூலமாக வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புவது, திருப்பூர் நகரத்தின் வடக்குப் பகுதியில் 7 ஊராட்சிகளைக் கொண்ட பெரமநல்லூர் பகுதியில் தொறவலூர் என்ற இடத்தில் மிகப் பெரிய குளம் இருக்கின்றது. அந்தக் குளத்திற்கு பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் விட்டால் அந்தப் பகுதியில் இருந்து குன்னத்தூர் வட்டாரம் வரையுள்ள, ஏறத்தாழ 100 கிராமங்களுக்கு மேல், நிலத்தடி நீர் மேலே உயர்வதற்குரிய வாய்ப்பு ஏற்படுவதுடன், விவசாயக் கிணறுகளுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கும், அதேபோல, குடிநீர் போர்வெல்களில் தண்ணீர் மட்டம் உயர்வதற்கும், சாயத் தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கும் வசதியாக, மூன்று அம்சங்களில் பலன் கிடைக்கும். மேலும், துறவலூர் குளத்திற்குப் பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் விட்டு, திருப்பூர் சாயத் தொழிற்சாலைகள் தண்ணீர் எடுத்துச் செல்வதற்கு அரசாங்கமே ஒரு குறிப்பிட்ட கட்டணத்தை நிர்ணயித்துக் கொடுக்குமானால் அரசுக்கு வருமானம் கிடைக்கும். அதோடு அந்த வட்டாரத்தில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே, குடிநீர் போர்வெல்களில் நீர்மட்டம் மேலும் உயரும். அந்தப் பகுதி நீண்ட நெடுங்காலமாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிணறுகளில், இத்திட்டத்தினால் நீரூற்று பெருக வாய்ப்பு ஏற்படும். அரசாங்கத்திற்கு 'ரெவின்யூ' கிடைக்கும். தொழிற்சாலைகளுக்கு, ஒரு லோடு தண்ணீர் இவ்வளவு விலை என்று அரசே கட்டணத்தைத் தீர்மானித்துவிட்டால், அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கும்.

எனவே, இதில் கீழ்நிலை அதிகாரிகள் எதிர்மறையான முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்பி வைக்காமல், காரியார்த்தமான முறையிலும், மிகக் கூர்மையான கண்ணோட்டத்துடனும் இந்தப் பிரச்சினையை அணுகி, தொறவலூர் குளத்திற்கு பவானி ஆற்றுத் தண்ணீரை விட்டு, அதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு முன் வருமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

[1997 மார்ச் 21

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயத் தொழிற்சாலைகள் தண்ணீர் கிடைக்காமல் இன்றையதினம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருக்கின்ற மக்களெல்லாம் நிலத்தடி நீர் கீழே போய்விட்டது என்று பதைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், திரு. சுப்பராயன் அவர்கள் சொன்ன கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக் கொண்டு, இதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி அவர்களை மாற்றுத் தலைவராக உட்காரச் சொன்னால் மாட்டேன் என்கிறார். அங்கே உட்கார்ந்து கொண்டு தலைவர் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். (சிரிப்பு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் முன்மொழிந்து, விரிவாகப் பேசியதை நம்முடைய ஞானசேகரன் அவர்கள் ஒரே வரியில் வழிமொழிந்து இருக்கிறார்கள். அதைப் பற்றிய விவரம் அவருக்கு அவ்வளவுதான் தெரியும் என்று கருதுகிறேன். (சிரிப்பு) நானாவது திருப்பூர் பனியன் போட்டிருக்கிறேன். அவர் திருப்பூரைப் பற்றிப் பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது? (சிரிப்பு)

சுமார் 3 இலட்சம் மக்கள் தொகை கொண்ட திருப்பூர் நகரத்தில் தற்போது 2,500 பனியன் தொழிற்சாலைகளும், 750 சாயத் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. இயற்கையாகவே நிலத்தடி நீர் வசதி குறைவாக உள்ள திருப்பூர் நகரம், ஒரு பெரிய வணிக மையமாகக் கடந்த சில ஆண்டுகளில் வளர்ச்சி அடைந்ததைத் தொடர்ந்தும், புதிய தொழிற்சாலைகள் பல உருவாகிவிட்டதைத் தொடர்ந்தும், அங்கு தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. அதிலும் குறிப்பாக, சுமார் 2,000 கோடி ரூபாய்க்கு மேல் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற பனியன் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான தண்ணீர் கிடைப்பது மிகச் சிரமமாக உள்ளது. தற்போது இயங்கி வரும் 750 சாயத் தொழிற்சாலைகளுக்குச் சுமார் 75 மில்லியன் லிட்டர் தண்ணீர் ஒவ்வொரு நாளைக்கும் தேவைப்படுகிறது. இந்தத் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய, தற்போது திருப்பூரிலிருந்து 25 கிலோமீட்டர் சுற்றுவட்டாரத்திலுள்ள கிணறுகளிலிருந்து, தினந்தோறும் 400 முதல் 500 லாரிகளில் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது.



1997 மார்ச் 21] [கலைஞர் மு. கருணாநிதி]

முற்பகல் 10.50

வளர்ந்துவரும் இந்த பனியன் தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையைக் கருத்தில் கொண்டும், இதேபோல் பெருமளவுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் உள்ள இந்த நகரத்தின், மற்ற அடிப்படைத் தேவைகளைக் கருத்தில் கொண்டும், 1989-90-இல் கழக ஆட்சி, பொறுப்பிலே இருந்தபோது, 'திருப்பூர் பகுதி ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டம்' — 'மாஸ்டர் பிளான்' — ஒன்று தயாரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, பனியன் உற்பத்தி, ஏற்றுமதி வளர்ச்சி, வணிக வளர்ச்சி முதலிய துறைகளைச் சேர்ந்த, மத்திய அரசு உயர் அதிகாரிகளையெல்லாம் திருப்பூருக்கு அழைத்து, விரிவான திட்டங்களுக்கான கருத்துருக்களும் அப்போது உருவாக்கப்பட்டன. கழக ஆட்சி, பொறுப்பிலே இருந்தபோதே, இந்நகரின் எதிர்காலத் தேவையைக் கணக்கிட்டு, பவானி ஆற்றிலேயிருந்து தண்ணீர் எடுத்து, குழாய்கள் மூலம், திருப்பூர் நகருக்குக் கொண்டு வரலாம் என்றும், அதற்காக பனியன் ஏற்றுமதியாளர்கள் முதலீட்டுடன், இதற்கென்று தனியாக ஒரு நிறுவனம் உருவாக்கப்படலாம் என்றும் அப்பொழுதே கருத்துருக்கள் உருவாக்கப்பட்டன. கழக ஆட்சி, தொடர்ந்து பொறுப்பிலே இருந்திருக்குமேயானால், இந்நேரம் இத்திட்டம் முடிக்கப்பட்டு, இதன்மூலம் 185 மில்லியன் லிட்டர் தண்ணீர், திருப்பூர் நகருக்கு அன்றாடம் கிடைத்திருக்கும். ஆனால், இடையிலே வந்த ஆட்சி, தொடர்ந்து நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதால், இன்னும் இத்திட்டம் நிறைவுபெறாமல், தற்போதுள்ள நிலவரப்படி, நாம் இந்தத் திட்டத்தை மீண்டும் தொடங்கினாலும், கி.பி. 2000 ஆண்டிலேதான் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; அதாவது இன்னும் மூன்று ஆண்டுகளில். இருப்பினும், அந்த நிரந்தரத் திட்டம் முடிவுறும்வரை, தற்காலிக ஏற்பாடுகள் மூலம், திருப்பூர், சாயத் தொழிற்சாலைகளின் தண்ணீர்த் தேவை, ஓரளவுக்காவது நிறைவு செய்யப்படவேண்டும் என்ற வகையில், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல ஆண்டுகளாக இருந்துவரும் முறைப்படி, திருப்பூர் நகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் அமைந்துள்ள கிணறுகளிலிருந்து, லாரிகள் மூலம் தண்ணீர் எடுத்து, திருப்பூர் நகரிலுள்ள தொழிற்சாலைகளுக்குக் கொண்டு வரப்படுகிறது. ஆனால், தொழிற்சாலைகளின் உபயோகத்திற்காக அதிக அளவுக்கு நிலத்தடி நீர் உறிஞ்சி எடுக்கப்படுவதால், விவசாயம் பெருமளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்று சுட்டிக்காட்டி, தொகுட்டிபாளையம், வடக்கு அவினாசிப்பாளையம், பெருந்தொழுவு மற்றும் கண்டியம்கோயில் ஆகிய பகுதிகளிலேயுள்ள விவசாயிகள்,

திருப்பூர் நகருக்கு தண்ணீர் எடுத்துச் செல்லும் லாரிகளை நிறுத்த அறிவிப்புச் செய்தார்கள். அதைத் தொடர்ந்து, 11-2-1997-ஆம் நாள், கோவை, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், சம்பந்தப்பட்டவர்களைக் கொண்டு, கூட்டம் ஒன்றை நடத்தி, அந்தக் கூட்டத்திலே, விரிவாக அதுபற்றி விவாதிக்கப்பட்டது. மேலும், இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பது குறித்து, அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்க, 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அக்குழுவும், பல்வேறு நாட்களில் கூடி விவாதித்து, நீர்நிலை ஆதாரங்களைப் பார்வையிட்டு, பின்வரும் கருத்துக்களைக் கூறியது:-

முதல் கருத்து: திருப்பூர் வட்டம், கோயில்வழி கிராமத்திலேயுள்ள குட்டைக்கு, பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட வாய்க்கால் தண்ணீரை, திருப்பூர் கிளைக் கால்வாய் மூலம் எடுத்து வந்து, அக்குட்டையை நிரப்பி, அருகிலுள்ள திருப்பூர் நகரியம், கோயில்வழி நீரேற்று நிலையத்தைப் பயன்படுத்தி, தொழிற்சாலைகளுக்குத் தேவையான தண்ணீரை, அரசு நிர்ணயிக்கும் தீர்வை அடிப்படையில் வழங்கவும், திருப்பூர் நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட பகுதிகளில், பல ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்கவும், குட்டையை ஆழப்படுத்தவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. இத்திட்டத்தை அமல்படுத்த, 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், முன்மொழிவும் அனுப்பப்பட்டதாக, மாவட்ட ஆட்சித் தலைவர், அரசுக்குத் தெரிவித்திருக்கிறார். அதனைப் பரிசீலனை செய்து, விரைவில் அதற்கான ஒப்புதல் வழங்கப்படும் என்பதையும் இந்த அவையில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திருப்பூர் வட்டம் — நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, — துரவலூரில் அமைந்துள்ள பெரியகுளத்தில், பவானி ஆற்று நீரை, கருமந்துரர், நம்பியூர், சேவூர், சாவக்காட்டுப்பாளையம் வழியாக, வாய்க்கால் அல்லது பெரிய குழாய் மூலம் கொண்டுவந்து நிரப்பி, அரசுத் தீர்வை அதற்கு வசூல் செய்து, தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் வழங்க இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. இதனால், இந்தக் குளத்திற்கு அருகிலுள்ள பெருமாநல்லூர், துரவலூர், பட்டம்பாளையம், சொக்கனூர், மேற்குப் பகுதி, வள்ளிபுரம், ஈட்டிவீரம்பாளையம், குன்னத்தூர் ஆகிய ஊராட்சிகளில் உள்ளடங்கிய கிராமக் கிணறுகளின்



நீராதாரங்கள், குடிநீர் ஆதாரங்கள் அனைத்தும் பயனடைய வாய்ப்பும் உள்ளது. இதையும் இந்த அரசு பரிசீலித்து, மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தக்க அறிவுரைகளை வழங்கும்.

இதற்கிடையிலே, இந்தப் பிரச்சினைக்குத் தற்காலிகமாக தீர்வு காணும் வகையிலே, பின்வரும் யோசனையையும், மேற்கண்ட குழு பரிந்துரைத்துள்ளது.

பரம்பிக்குளம் ஆளியாறு பாசனத் திட்டப் பகுதிகளில், நான்கு மண்டலங்களுக்கும் தண்ணீர் திறந்து விடும்போது, தொகுட்டிப்பாளையம், பெருந்தொழுவு, கண்டியம்கோயில் மற்றும் வடக்கு அவினாசிப்பாளையம் ஆகிய கிராம ஆயக்கட்டுப் பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்க, அரசு ஆணை பிறப்பிக்கலாம் என்றும் இந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. இந்தப் பரிந்துரை சம்பந்தமாக, பொதுப் பணித் துறை பொறியாளர்களிடமிருந்தும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தும் அறிக்கை பெற்று, அதனை அரசு பரிசீலித்து தக்க முடிவு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நிரந்தரம் மற்றும் தற்காலிக ஏற்பாடுகள் ஆகியவற்றை அரசு செயல்படுத்துகிற வரையில் நிலைமையின் அவசியத்தைக் கருதி பின்வரும் உடன்பாடுகளை விவசாயப் பிரதிநிதிகளும், தொழிற்சாலைப் பிரதிநிதிகளும் உள்ளிட்ட குழு ஒருமனதாக செயல்படுத்த தீர்மானித்துள்ளது. 1997 மார்ச் 3-ஆம் தேதி காலை 9.00 மணி வரையில் இப்போதுள்ள நடைமுறையிலே உள்ளது போல டாங்கர் லாரிகளிலே தண்ணீர் எடுத்துக்கொள்வது என்றும்,— 3-ஆம் தேதி கடந்துவிட்டது என்றாலும்கூட அது தொடர்ந்து வருகிறது — 1997 மார்ச் 3-ஆம் தேதி காலை 9.00 மணிக்கு மேல் தாராபுரம் பிரதான சாலையில் அமைந்துள்ள நீர் ஆதாரங்கள் தவிர வேறு பகுதிகளில் நீர் எடுக்கக்கூடாது என்றும், மேற்கொண்டு மண்டபம் பகுதியிலே வியாபார நோக்கில் புதிய கிணறுகளோ அல்லது ஆழ்குழாய்க் கிணறுகளோ ஏற்படுத்துவதை அனுமதிப்பதில்லை என்றும், அந்தக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது சாயத் தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீர், திருப்பூரை ஒட்டியுள்ள பகுதியிலிருந்து லாரிகளின் மூலம் கொண்டு வரப்படுகிறது. அது தற்காலிகமான ஏற்பாடுதான். தற்காலிகமாக பிரச்சினை ஏதுமில்லையென்றாலும் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[1997 மார்ச் 21

முற்பகல் 10-55

## (ஆ) தொகுதியில் நடைபெறும் விழாக்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய இடம் அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு வனத் துறையின் சார்பாக இன்று மாலை 4-00 மணி அளவிலே உலக வன நாள் விழா எனது தொகுதிக்குட்பட்ட கே. என். புதூர் என்ற கிராமத்தில நடக்கவிருப்பதாக நேற்று இரவு 8-00 மணி அளவிலே எனக்கு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டது. அந்த அழைப்பிதழில் விழாத் தலைமை என்று ஒரு ஓய்வு பெற்ற வனத் துறை அதிகாரியைப் போட்டிருக்கிறார்கள். தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரையும், சட்டமன்ற உறுப்பினரையும் முன்னிலை வகிப்பதாக அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகரன், என்ன பிரச்சினை என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று பலமுறை எனது தொகுதியிலே அரசு விழாக்களில் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே எனக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதை நான் தங்கள் கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வந்திருக்கிறேன். ஏற்கெனவே 13-12-1996-ல் நடைபெற்ற தீயணைப்பு நிலையம் திறப்பு விழாவிலே இதேபோன்று நடைபெற்றது. அதைப்போல அதற்குப் பின்னரும் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை விழா எனக்கு அழைப்பு இல்லாமலேயே அதிகாரிகளால் திறக்கப்பட்டது. அதைப் போல புதிய பேருந்துகள் விடுவதிலும் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே எனக்குத் தகவல் தெரிவிக்கப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமையைப் பறிக்கும் செயலாக நான் இதைக் கருதுகிறேன். என் தொகுதி மக்கள் மத்தியிலே ஒரு அதிருப்தி உருவாகி வருகிறது. ஆகவே சபாநாயகர் அவர்கள் இதில் தலையிட்டு எங்களுடைய உரிமையைப் பாதுகாக்கும் வகையிலே ஒரு உத்தரவினை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1997 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே பிரச்சினை தலைமை தன்னைப் போடவில்லை என்றும் ஆனால் பெயரை அழைப்பிதழில் போட்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையோ அல்லது அந்த வனத் துறை அதிகாரிகளையோ தலைமை என்று போடுவதிலே தவறில்லை. ஆனால் ஒரு ஓய்வுபெற்ற அதிகாரியைத் தலைவராகப் போடுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, அமைச்சர் அவர்களோ அல்லது துறையில் வேலைபார்க்கிற அதிகாரிகளோ இல்லாத சூழ்நிலையில் சட்டமன்ற உறுப்பினர்களையோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களையோ போடலாம் என்று ஒரு கருத்தைச் சொல்லி இந்தப் பிரச்சினையை முடிக்கிறேன்.

***மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டிருப்பது, பொது நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது அந்தப் பகுதியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய மக்கள் பிரதிநிதிகளுடைய பெயர் அழைப்பிதழிலே இடம் பெற வேண்டும் என்பதுதான். தலைமை, முன்னிலை யார் இருப்பது என்று அதிலே வரையறுக்கப்படவில்லை. அந்த அடிப்படையிலே ஒரு பொது நிகழ்ச்சியை அரசு சார்பில் நடத்துகிறபோது தலைமை, முன்னிலை, வாழ்த்துரை என்று வருகிறபோது, அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யக்கூடியவர்கள் யாரை அழைக்கிறார்களோ, யாருக்கு முன்னுரிமை தர வேண்டுமென்று முடிவு செய்கிறார்களோ அந்த அடிப்படையில்தான் அழைப்பிதழ் அச்சடிக்கப்படுகிறதே தவிர, இதிலே ஒன்றும் உள்நோக்கமில்லை. அரசு அறிவிப்புக்கு மாறாக அங்கே ஒன்றும் நடைபெறவில்லை என்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், என்ன ரொம்ப வேகமாக எழுந்து நிற்கிறீர்கள் ? சட்டமன்றத்திலே இப்படியெல்லாம் நடந்துகொள்ளக் கூடாது. இப்படி நடந்தால் நான் நடவடிக்கை எடுப்பேன். இவ்வளவு வேகம் காண்பிப்பதற்கு இதில் என்ன இருக்கிறது? அவர் சொன்னார், எனக்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று சொல்லுங்கள், திரு. சேகரன் கேட்டிருக்கிறார். இதில் உங்களுக்கு என்ன உரிமை? நீங்கள் உட்காருங்கள். பேசியவர் முதலில் விளக்கம் சொல்லட்டும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

[1997 மார்ச் 21

**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல இதிலே ஏதோ உள்நோக்கம் இருப்பதாக நான் குறிப்பிடவில்லை. தொடர்ந்து இதுபோன்ற நிகழ்ச்சிகள் எனது தொகுதியிலே நடைபெற்று வருகின்றன. அதுவும் இந்த விழாவிலே ஓய்வு பெற்ற ஒரு அதிகாரியின் தலைமை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளாக நாங்கள் இருக்கும்போது, ஒரு ஓய்வு பெற்ற அதிகாரியின் தலைமையில் விழாவை நடத்த வேண்டிய அவசியம் என்ன என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிகழ்ச்சி பற்றி எனக்குத் தெரியாது. இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு அழைப்பிதழைப் போட்டு அவர் கட்சியின் சார்பிலே - தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஒரு கூட்டத்தை நடத்தினார்கள். அதிலே யாருக்கும் தெரியாமல், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் எல்லாம் கலந்துகொள்கிறார்கள் என்றுகூட அழைப்பிதழ் போட்டார்கள். ஆனால் அவர்களுக்கு அழைப்பிதழ்கூட அனுப்பவில்லை. அப்படி ஒரு கூட்டத்தை கூட்டுறவுத் துறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும், உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும் வைத்து நடத்தினார்கள். அதில் வருத்தம் ஒன்றும் இல்லை. ஏதோ போட்டுவிட்டபடி ஒரு நிகழ்ச்சியை நடத்தினார்கள். ஆனால் அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ளபடி, பொது நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சிகள் நடைபெறும்போது அந்தப் பகுதியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அதில் இடம்பெறச் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அந்த அடிப்படையில் எல்லோரும் போடுகிறார்கள். தலைமை யார் வகிப்பது, முன்னிலை யார் வகிப்பது என்று இன்னும் வரையறுக்கப்படவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களில் யார் பேசுவது என்று முடிவுசெய்துவிட்டீர்களா? திரு. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களது பெயர் அரசு விழாக்களில் இருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரோ



1997 மார்ச் 21] [திரு. ச. அழகிரி]

அல்லது அமைச்சர்களோ அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்கிறபோது, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலைப் பொறுப்பை ஏற்கலாம். ஆனால் ஓய்வுபெற்ற அதிகாரியின் தலைமையில் அந்த அரசாங்க நிகழ்ச்சி நடப்பதற்கு பதிலாக அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களது பெயரைத் தலைமையிலே போட்டால் அது பார்ப்பதற்கு நன்றாக இருக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினருக்கும் அந்தத் தொகுதியிலே ஒரு மரியாதை இருக்கும். இதிலே மாண்புமிகு அமைச்சருக்கு என்ன ஆட்சேபனை இருக்கிறது என்பதுதான் எங்களுடைய கேள்வி.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்ட இந்த விழா அழைப்பிதழில் அமைச்சர்கள் யாரும் கலந்துகொள்வதாகக் குறிப்பிடப்படவில்லை. வனத்துறை பாதுகாப்புத் திட்ட உலக வன நாள் விழா இன்றைக்கு தமிழ்நாட்டில் 200 இடங்களில் நடத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளாக வகுக்கப்பட்டு 200 இடங்களில் நடைபெறுகிறது. வனத் துறை அமைச்சர்கூட செங்கற்பட்டு அருகிலே ஒரு நிகழ்ச்சியிலே கலந்து கொள்வதாக இன்று பத்திரிகையிலே செய்தி வந்திருப்பதை அனைவரும் பார்த்திருக்கின்றோம். இதைப் பொறுத்தவரையில், முன்னிலை, தலைமை என்பதிலே பெரிய வேறுபாடு ஒன்றும் இல்லை. நானேகூட இங்கே சொல்ல விரும்புகிறேன். சில நேரங்களில் என்னுடைய தலைமையில் மூப்பனார் முன்னிலையில் என்று போடப்படுகிறது. சில நிகழ்ச்சிகளில் மூப்பனார் தலைமையில் என்னுடைய முன்னிலையில் என்று போடப்படுகிறது. ஆகவே, தலைமை, முன்னிலை என்று வரும்போது இருவருக்கும் மதிப்பு அளிக்கின்ற வகையிலேதான் அது இடம்பெற்றிருக்கிறது. இதிலே முன்னிலையிலே சேலம் நாடாளுமன்ற உறுப்பினருடைய பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் திரு. சேகரன் அவர்களுடைய பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சியில் ஓய்வுபெற்ற ஒரு அதிகாரியை தலைமை வகிக்கச் சொல்லியிருப்பது அவ்வளவு பொருத்தமானது அல்ல என்பதுதான் என்னுடைய கருத்தாகும். பொதுவாகவே இதுபோன்ற நிகழ்ச்சிகளில் அதிகாரிகள் தலைமை ஏற்பதைவிட, மாவட்ட அளவில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற அளவிலே தலைமை வகித்தால் அது சரியாக இருக்கும். மற்ற நிகழ்ச்சிகளிலே கூடுமான வரையில் அதிகாரிகள் பெரிய பொறுப்புகளை, அந்த விழாவிலே தலைமை, முன்னிலை போன்ற பொறுப்புகளை ஏற்காமல், வரவேற்பது, நன்றி கூறுவது என்ற அளவிலே அதிகாரிகளுடைய கடமை இருந்தால்

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 மார்ச் 21

போதுமானது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். இருந்தாலும் இதில் நாடாளுமன்ற உறுப்பினரோ, சட்டமன்ற உறுப்பினரோ புறக்கணிக்கப்படவில்லை என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். தலைமை ஏற்பதில்தான் ஒரு தகராறு ஏற்பட்டிருக்கிறது. தலைமை ஏற்பவர் உண்மையிலேயே ஓய்வுபெற்ற அதிகாரியாக இருப்பாரானால், அதுபற்றி அரசு விசாரித்து ஏற்றவகையில் எதிர்காலத்தில் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

## மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 1 - நில வருவாய்த் துறை

(ஆ) கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(இ) கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

### (அ) கோரிக்கை எண் 1- நில வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 1 - நில வருவாய்த் துறை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.13,58,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1158, திரு. சி. ஞானசேகரன்.



1997 மார்ச் 21]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தில் 10,15 ஆண்டுகளாக வீடுகட்டி வாழ்வோர்க்கு பட்டா வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,58,61,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 325, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'அரசுக்குச் சொந்தமான தரிசு, மேய்ச்சல், குளம், புறம்போக்கு, சமுதாயப் புறம்போக்கு போன்ற பகுதிகளில் பல ஆண்டு காலமாக வாழ்ந்துவரும் ஏழை ஆதிதிராவிடர் மக்கள், பிற்பட்டோர் ஆகியோருக்கு பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,58,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 64, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருப்பூர் ஆண்டிப்பாளையம் எஸ்.எப். எண் 48, நத்தம் புறம்போக்கில் ஓட்டு வீடு கட்டி குடியிருந்து வருகிறவர்களுக்கு பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,58,61,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 74 திரு. நா. பெரியசாமி.

[1997 மார்ச் 21

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பெரியார் மாவட்டத்தில் தவிர்க்க முடியாமல் நன்செய் பயிர் சாகுபடி செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ள வேளாண் சாகுபடியாளர்களுக்கு தண்டத் தீர்வை விதிப்பதை கைவிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,58,61,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1135, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'திருவள்ளூவர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, இடையர்குறிச்சி திராவிட நல்லூர், நிண்ணையூர் கிராமத்தில் வசிக்கும் இருளர் பழங்குடியினருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,58,61,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 339, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுக்கா அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டிடம் இந்த நிதியாண்டிலேயே கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,58,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1997 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 773, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'ஏ.டி. பன்னீர்செல்வம், நாகை, தஞ்சாவூர் மாவட்டங்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளானதால், நிலவரிகள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,58,61,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 331, திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 71, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1230, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழகத்தின் அறக்கட்டளைக்குச் சொந்தமான நிலங்களை அரசு கையகப்படுத்தி நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,58,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 784, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,58,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**(ஆ) கோரிக்கை எண் 40— இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 66,87,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 1182, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ரோடுகளை வெள்ள நிவாரண நிதியில் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,87,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 641, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம்' முத்துப்பேட்டை ஒன்றியம், தொண்டியகாடு கடலோரப் பகுதி மீனவ மக்கள் அதிகமாக வசிக்கும்



இடமாக இருப்பதால் புயல் பாதுகாப்பு இல்லம் ஒன்று அங்கு கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,87,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 238, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டு தீர்மானத்தை மொழிகிறேன் :

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,87,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1155, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'திருவள்ளுவர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தில் சன்னியாசிநல்லூர், அங்கனூர் முல்லையூர் பகுதியில் வெள்ளாற்றின் கரையில் வெள்ளத்தை தடுக்கும் கையில் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,87,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 648, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கை சீற்றங்களால் வீடுகளை இழந்தவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,87,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 240, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பெரியார் மாவட்டத்தில் கால்வாய் பாசனம் பெறும் பகுதிகள் நீங்கலாக அனைத்துப் பகுதிகளையும் வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,87,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1053, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி" மற்றும் பத்தமடையில் 4-3-1997 அன்று மாலையில் ஏற்பட்ட சுழிகாற்று மழையினால் வாழை மரங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்குப் போதுமான இழப்பீடு வழங்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் . கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,87,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1250, திரு. டி. மணி.



**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டத்தில் 1996-ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளிக் காற்றில் பயிர் சேதம் அடைந்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,87,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

### (இ) கோரிக்கை எண் 45— இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை எண் 45, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.101,23,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1185, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் அரசு கையகப்படுத்தும் நிலங்களுக்கு வழங்கும் ஈட்டுத் தொகையை வெளிச்சந்தை மதிப்பீட்டிற்கு இணையாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒ துக்கப்பெறுகின்ற ரூ.101,23,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத். தீர்மானம் எண் 653, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தஞ்சை மற்றும் ஏ.டி. பன்னீர்செல்வம், நாகை மாவட்டங்களில் பாம்பு கடி விபத்தால் இறக்கக்கூடியவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கும் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.101.23,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 244, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101.23,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 243, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வெள்ளத்தால் சேதப்படும் குடிசைகளுக்கு நிவாரணம் வழங்குவதில் ஒரு சுவர், பாதி சேதம் என்று பகுப்பதை கைவிட்டு முழு அளவில் நஷ்டஈடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 101.23,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 649, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 101,23,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் வி‌‌வாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளான நில வரி, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழபபீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்புகளின் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதில், தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது தங்களுடைய மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமாறும் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் முன்வைக்கும் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்பு, இறுதியில் என்னுடைய பதிலுரையையும், இந்தத் துறையின் வளர்ச்சிக்கான அரசின் புதிய அறிவிப்புகளையும் தெரிவிக்கிறேன் என்பதையும் எடுத்துரைக்கின்றேன்.

---

@ 411 முதல் 443 வரை இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் இந்த விவாதத்திலே கலந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் பத்து நிமிடத்திற்கு மேல் கட்டாயமாகப் பேசக்கூடாது என்ற ஒரு வேண்டுகோளை வைத்து, திரு. வி. திருஞானசம்பந்தம் அவர்களை விவாதத்தைத் தொடக்கி வைக்க அழைக்கிறேன். திரு. வி. திருஞானசம்பந்தம்.

**திரு. வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவரி, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்புகளின் கீழ் 1997-98 ஆம் ஆண்டிற்கான வருவாய்த் துறை மானியக் கோரிக்கைகள் மீது ஒருசில கருத்துக்களை எடுத்துக்கூற வாய்ப்புத் தந்தமைக்காக பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய்த் துறையானது அனைத்துத் துறைகளுக்குமே முதல் துறையாகும். வருவாய்த் துறையானது மனித வாழ்க்கையிலே பிறப்பிலிருந்து இறப்பு வரை அவனோடு ஒன்றிச் செல்லுகின்ற ஒரு துறையாகும். மேலும், மனிதனுக்குப் பயன்படுகின்ற மாவட்ட நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முதல் கிராம நிர்வாக அலுவலர்கள் வரைச் செயல்படுகின்ற இந்தத் துறை சிறப்பான துறை என்பதிலே நாம் பெருமையடைகின்றோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்பு 1405 ஆம் பசலியில் ரூ. 22.33 கோடி நில வரியைத் தள்ளுபடி செய்தார்கள். அதற்காக தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். நானும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு இறுதியில் பெய்த பெருமழையின் காரணமாக இலட்சக் கணக்கான இடங்கள் மிக அதிக அளவிலே பாதிக்கப்பட்டன. அதிலே எனது பேராவூரணி தொகுதியிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டன. அவற்றிற்கெல்லாம் ஈடுகொடுக்கும் வண்ணம், அரசு அதிகாரிகளை அழைத்து அப்பகுதிகள் எல்லாம் பார்வையிடப்பட்டு, நிவாரணம் வழங்கப்பட்டது. இந்த நேரத்திலே அங்கேயிருக்கின்ற அரசு அதிகாரிகள் எல்லாம் நில வரி கட்டுவதற்கு



விவசாயிகளைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த விவசாயிகள் மீது கருணைகாட்டி, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய நிலவரியை முழுமையாக ரத்து செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் தலைமை)

மேலும், கோயில் நிலங்கள், தர்ம ஸ்தாபன நிலங்களிலே குடியிருப்பவர்களுக்கு, அந்த நிலங்களில் குடியிருப்பதற்கு, அந்த இடத்திற்குரிய சரியான மதிப்பீட்டினைப் பெற்று, அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு யு.டி.ஆர். மூலம் நிலங்கள் சர்வே செய்யப்பட்டன. அப்படி சர்வே செய்யப்பட்டபோது பல்வேறு ஊழல்கள் நடைபெற்றன. ஒருவருடைய இடம் அவருக்குத் தெரியாமல் மற்றவர் பெயரிலே மாற்றப்பட்டது. அதுபோன்ற தவறுகள் நடைபெற்ற காரணத்தாலே பல்வேறு வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றை இந்த ஆண்டு சரியான முறையிலே சீர்திருத்தம் செய்ய வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பேராவூரணி தொகுதியிலே வாழ்கின்ற மீனவர்கள் எல்லாம் கடந்த புயல், பெருமழையின்போது பெரும் அவதிக்குள்ளானார்கள். காரணம், அங்கேயிருக்கின்ற புயல் பாதுகாப்பு இல்லங்கள் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் இந்த ஆண்டு பழுது நீக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த நிதியாண்டிலே எனது பேராவூரணி தொகுதியிலே சிறுவத்தேவன், மந்திரிப்பட்டினம், புதுப்பட்டினம் போன்ற கிராமங்களிலே புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டு, புயல், வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டபோது கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது போல, அங்கேயிருக்கின்ற கடல்வாழ் மீனவர்களுடைய மீன்பிடி படகுகளுக்கும், மீன்பிடி உபகரணங்களுக்கும் நட்ட ஈடு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

ஒவ்வொரு கிராமத்திலும் பணியாற்றுகிற கிராம நிர்வாக அலுவலர்கள், அக்கிராமப் பொதுமக்கள் பயன் கருதி, அந்தக் கிராமத்திலே தங்கி பணியாற்றும் அளவுக்கு, தனியாக அலுவலகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா முன்னுரிமை கொடுத்து வழங்குவதைப்போல, மிகவும் பிற்பட்ட மக்களுக்கும் முன்னுரிமை கொடுத்து, வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்குத் துரித நிவாரணமாக இந்த அரசு ரூ.1000 வழங்குகிறது. அதை 2,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், பாதி அளவிலே பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ரூ.500/- என்று வழங்கப்படுவதை, ரூ. 1000/- மாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் வழங்கப்படும் ரூ. 15,000-ஐ, ரூ. 25,000 என மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் புயல் வெள்ளத்தால் கால்நடைகள் இறக்க நேரிடுவதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற நஷ்ட ஈட்டுத் தொகை ரூ. 5,000, ரூ. 3,000, மற்றும் ரூ. 1,000, போன்றவற்றை உயர்த்திக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பேராவூரணி தொகுதி மக்களுடைய இன்றியமையாத கோரிக்கையான — என்னுடைய கோரிக்கையுமான, 10 பிர்காக்கள் கொண்ட பட்டுக்கோட்டைத் தாலுக்காவைப் பிரித்து, நிர்வாக வசதி கருதி திருச்சிற்றம்பலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு தனித் தாலுக்காவாக அமைத்துத்தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்ளையும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சிறியோனின் கோரிக்கையை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலித்து இந்த ஆண்டிலே நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறையில் முக்கிய சான்றிதழ்களான வருமானச் சான்றிதழ், ஜாதிச் சான்றிதழ் போன்றவைகளைப் பெறுவதற்கு கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், வட்ட ஆட்சியர் ஆகியவர்களுக்கு மனு செய்து பெறுவதற்கு ஏறக்குறைய 30 நாட்களுக்குமேல் ஆகின்றது. ந்தச் சான்றிதழ்களை, மனு செய்த நாளிலிருந்து ஒரு வார



காலத்திற்குள் கொடுக்க வேண்டுமென கால நிர்ணயம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், விவசாயத் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது இறக்க நேரிட்டால் அரசு பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு ரூ.15,000 உதவித் தொகை வழங்குகிறது. அதை ரூ.25,000-மாக உயர்த்தி வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை, நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற மாவட்டங்களில் அங்குள்ள புறம்போக்கு நிலங்களைத் தனியாருக்கு பட்டா போட்டுக் கொடுப்பதால், தார்ச் சாலைகளிலே வைக்கோல்களைப் போடுகின்றனர். இதனால் வாகனங்கள் போக்குவரத்து தடைப்பட்டு விபத்துக்கள் நடைபெறுகின்றன. எனவே இந்த அரசு புறம்போக்கு நிலங்களைத் தனியாருக்குப் பட்டா போட்டுக் கொடுப்பதைத் தடுக்க வேண்டும்.

இந்த மானியக் கோரிக்கையின்மீதான விவாதங்கள் தவிர, எனது தொகுதியான பேராவூரணி தொகுதியிலுள்ள பல்வேறு கோரிக்கைகளை, மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்கள் அனுமதியோடு இந்த அவையிலே கூறிக்கொள்கிறேன். பேராவூரணியில் இருக்கின்ற அரசு மருத்துவமனை இன்று மிகவும் சீர்கெட்டு இருக்கின்ற ஒரு நிலையிலே இருக்கிறது. அந்த மருத்துவமனையிலே போதிய பணியாட்கள் நியமிக்கப்படாத காரணத்தால், அந்த மருத்துவமனை நோயை உண்டாக்குகின்ற தொழிற்கூடமாக இருக்கிறது. எனவே போதிய பணியாட்களை நியமனம் செய்து சிறப்படையச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பேராவூரணியில் பெருமகளூர், செருவாவிடுதி, அழகியநாயகிபுரம் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனைகளாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பள்ளத்தூர், சித்துக்காடு ஆகிய இடங்களில் பிற்பட்டோர் மாணவர் விடுதிகள் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய பேராவூரணித் தொகுதியிலுள்ள, பேராவூரணி தாலுக்கா, பேராவூரணியைத் தலைமையிடமாகக் கொண்டு இருக்கிறது. அங்கே அனைத்து அரசு தலைமை அலுவலகங்களும் இருக்கின்றன. அங்கே வேலை செய்கின்ற அரசு அலுவலர்களுக்கு தங்க குடியிருப்பு வசதி கிடையாது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

பேராவூரணியிலே அரசு அலுவலர்களுக்குக் குடியிருப்பு வசதி அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எந்தவிதமான வசதிகளும் இல்லாமல் இருக்கின்ற காரணத்தால், பேராவூரணி தொகுதி மக்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை நம்பி என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு என்னுடைய பேராவூரணி தொகுதியைத் தத்து எடுத்து, எல்லா வசதிகளையும் கொண்ட தொகுதியாக மாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. ஆவுடையப்பன்) :** திரு. என். பாண்டுரங்கன்.

***திரு. என். பாண்டுரங்கன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டுக்கான நில வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள், இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். குறுகிய காலம் ஒதுக்கப்பட்டுள்ள காரணத்தால், முதலிலேயே என்னுடைய தொகுதியைப் பற்றி சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, வலுத்தவர்களெல்லாம் தங்களுடைய பகுதிகளை எடுத்துக்கொண்டது போக, மீதி ஒதுக்கப்பட்ட பகுதியாக, இந்தப் பகுதி நின்றுவிட்டிருக்கிறது. குறிப்பாக அந்தப் பகுதியிலே ஒரு பெரிய ஊரையோ நகரத்தையோ மையமாக வைத்து அந்தத் தொகுதி பிரிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் அந்தத் தொகுதி ஒரு செவ்வக வடிவில் இருக்கிறது. சதுர வடிவிலே அல்லது வட்ட வடிவிலே ஒரு நகரத்தை மையமாக வைத்து அமைத்து இருந்தால், அந்தத் தொகுதி பல்வேறு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்து இருக்கும்.

முற்பகல் 11-20

உதாரணமாக பெரணமல்லூர், தொகுதியின் தலைநகரமாக இருக்கிறது. ஆனால் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலே செய்யாறு



தொகுதி வந்துவிடுகிறது. அதேபோல பெரியநகரமான சேத்துப்பட்டு என்று எடுத்துக்கொண்டால் 1/2 கிலோ மீட்டர் தூரத்திலே விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம் வந்துவிடுகிறது. எனவே இந்தத் தொகுதி ஒரு நீளமான செவ்வக நிலையிலே அமைந்துவிட்ட காரணத்தால் இந்தப் பகுதியின் அடிப்படைப் பிரச்சினைகளை முன்னிறுத்தி எந்தப் பிரச்சினையையும் செயலாற்ற முடியாத ஒரு சூழ்நிலை அமைந்துவிட்டு இருக்கிறது. குறிப்பாக 1989-90 ஆம் ஆண்டிலே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தை அம்பேத்கர் மாவட்டம் என்றும் சம்புவராயர் மாவட்டம் என்றும் பிரித்தார்கள். மாவட்டம்தான் பிரிக்கப்பட்டதேயொழிய வட்டங்கள் அறிவிக்கப்படவில்லை. ஆனால் அதற்குப் பிறகு அறிவிக்கப்பட்ட மாவட்டங்களிலே புதிதாக மாவட்டங்களோடு வட்டங்களும் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. சமீபத்திலே அறிவிக்கப்பட்ட மாவட்டங்களோடுகூட வட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் இந்த மாவட்டம் பிரிக்கப்பட்டு ஏறக்குறைய 9 ஆண்டுகள் ஆகியும் வட்டங்கள் அறிவிக்கப்படவே இல்லை. குறிப்பாக திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் வந்தவாசி வட்டத்திலே ஏறக்குறைய 219 கிராமங்களுக்கு மேலே, அதாவது ஊராட்சிகள் அடங்கி இருக்கின்றன. 75 ஊராட்சிகள் கொண்ட ஒரு பகுதிகூட இன்று தாலுகாவாக அறிவிக்கப்பட்ட நிலை இருக்கிற காரணத்தால் வந்தவாசி வட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரணமல்லூர் ஒன்றியத்தையும் அதேபோல தெள்ளார் ஒன்றியத்தில் மழையூர் பிர்காவையும் தேசூர் பிர்காவையும் இணைத்து ஒரு புதிய வட்டமாக அமைத்தால் மிகவும் சிறந்த வட்டமாகவும், ஏழை எளிய மக்கள் மிகவும் நல்ல நிலையை அடைவதற்கும் ஏதுவாக அமையும்.

அதேபோல போளூர் தாலுகாவும் மிகப் பெரிய தாலுகாவாக அமைந்து இருக்கிறது. குறிப்பாக உலகம்பட்டு பகுதியிலே இருக்கிற ஒரு கிராமத்திலே இருப்பவர் போளூர் தாலுகா அலுவலகத்திற்குச் சென்று ஒரு சான்று வாங்க வேண்டுமென்று சொன்னால்கூட 60 கிலோ மீட்டர் பயணித்து, அந்தச் சான்றைப்பெற வேண்டிய நிலை இருக்கின்றது. எனவே, இந்த தாலுகாவையும் இரண்டாகப் பிரித்து சேத்துப்பட்டை மையமாக வைத்து ஒரு தனித் தாலுகா உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிகவும் மெத்தப் பணிவன்போடும் கனிவோடும் கேட்டுக்கொள்கிறேன். காரணம், இந்த மாவட்டம் அறிவிக்கப்பட்டு 9 ஆண்டுகள் ஆகியும் வட்டங்கள்

பிரிக்கப்படவே இல்லை. ஒரு பெண்ணுக்கு திருமணம் ஆகி பல ஆண்டுக்காலம் குழந்தைப் பேறே இல்லாமல் இருந்து குழந்தைப் பேற்றுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிற சூழ்நிலை போல் இருக்கிறது. எனவே எப்போது விடிவுகாலம் வரும்; எப்போது இது புதிய தாலுகாவாக அறிவிக்கப்படும் என்ற சூழ்நிலை தெரியாத காரணத்தால், பின்தங்கிய பகுதியான இந்தப் பகுதியை இரு வட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வருவாய்த் துறை பல்வேறு துறைகளுக்கு தாய்த் துறையாகவும், நிர்வாகத்தின் முதுகெலும்பாக நின்று, கட்டுக்கோப்பாக சமுதாயத்தை ஒருங்கிணைத்து, சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபடுகிற ஒரு துறையாகவும் இருக்கிறது. கீழ்நிலையில் உள்ள அதிகாரிகளுக்குத் தேவையான அதிகாரங்கள் வழங்குவதற்கும், நிர்வாகத்திலே ஏற்படுகிற காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கும் பல்வேறு சான்று, உரிமம் ஆகியவற்றை வழங்குவதை எளிமைப்படுத்துவதற்கும், முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் அவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து இந்த அரசு அறிவித்து இருப்பதை நான் வரவேற்கிறேன். அதேபோல் அரசின் நிலங்களை விவசாயத்திற்கும், வீடுகள் கட்டி குடியேற விரும்பும் லட்சக் கணக்கான ஏழை எளியவர்களுக்கும் இப்போது வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்படுகின்றன. குறிப்பாக 1996-97 ஆம் ஆண்டு ஏறக்குறைய 87,123 வீட்டுமனைப்பட்டாக்களை இந்த அரசு கடந்த காலத்திலே வழங்கி இருக்கிறது. அதேபோல நிலப் பட்டாக்களை 6552 பேருக்கு, 4,838 ஏக்கர் நிலம் கடந்த ஆண்டிலே இந்த அரசு வழங்கி இருக்கிறது. எனவே இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதேபோல பள்ளிக்கூடம், மருத்துவமனை, சுகாதார நிலையம் போன்ற இலாப நோக்கமின்றி பயன்பாட்டிற்கு நிலம் கேட்கப்படும் போது நிலக் கிரயம் இன்றி இந்த நில மாற்றம் செய்யப்படுகிறது. ஆனால் தற்போது பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் தேசூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் கூடுதல் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு ஒரு வருடம் ஆகியும், இன்னும் அந்த நிலம் ஒப்படைக்கப்படாமல் இருக்கிறது. எனவே அந்த நிலத்தை உடனடியாக அந்தத் துறைக்கு ஒப்படை செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



தற்போது அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள் மிகவும் குறைந்துவிட்டன. ஆனால் அவைகளைக் கோரி, கோரிக்கைகள் அதிகம் வருகின்றன என்று அரசு கருதுகிறது. எனவே இதை முறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். தமிழக முதல்வர், தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் கடந்த நான்கைந்து மாதங்களுக்கு முன்பு பலத்த மழை பெய்தது. அந்த மழையின் காரணமாக வட மாவட்டங்களில் இயற்கைச் சீற்றம் ஏற்பட்டு வெள்ளம் பெருக்கெடுத்து பல விளைநிலங்கள் பாதிக்கப்பட்டன. உடனடியாகத் தலைவர் கலைஞர் அவர்கள் வெள்ள நிவாரணப் பணிகளை உடனுக்குடன் முடுக்கிவிட்டார்கள். தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அமைச்சர்களையும் அதிகாரிகளையும் உடனடியாக சம்பந்தப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிடச் சொல்லி, அதேபோல மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் ஆகியோரையும் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட இடங்களைப் பார்வையிடச் செய்து வெள்ள நிவாரணப் பணிகளை உடனுக்குடன் செய்து தந்தார்கள். இதற்காக மத்திய அரசு வெள்ள நிவாரணப் பணிகளுக்கு என்று ஒதுக்கிய 25 கோடி ரூபாய்க்கு மேல் தர முன்வராவிட்டாலும், நமது முதலமைச்சர் அவர்கள் இதற்காக தனியாக நிதியை ஒதுக்கி வெள்ள நிவாரணப் பணிகளைச் செய்தார்கள். எனவே இந்த அரசை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

அதேபோல வீடிழந்தவர்களுக்கு ரூ. 1,000-மும், வீட்டின் பகுதியை இழந்தவர்களுக்கு ரூ. 500-ம், வெள்ளத்தால் இறந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ. 15 ஆயிரமாக உயர்த்திக் கொடுத்ததையும் நான் வரவேற்கிறேன்.

கிராம நிர்வாக அலுவலர்கள் ஊராட்சிகளில் தங்குவதற்கும், தங்கி பணிகளை ஆற்றுவதற்கும் அவர்களுக்கு இடம் இல்லை. இதனால் எப்போதாவது அந்த கிராம நிர்வாக அலுவலர் வருகிறார். அவர் எந்த இடத்தில் இருக்கிறார், என்ன பணிகளைப் புரிகிறார் என்பது கிராமத்தில் இருப்பவர்களுக்குத் தெரிவதில்லை. தெரிந்து கொள்ள வாய்ப்பும் இல்லை. எனவே அவர்களுக்கு ஊராட்சி மன்றத்தின் அலுவலகத்தில் இடம் ஒதுக்கித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்பத் தலைவர் இறந்தால் நலிவுற்ற நிலையில் இருக்கிற அந்தக் குடும்பத்திற்கு ரூ.5000 வழங்கப்பட்டதை இப்போது ரூ.7500 என்று உயர்த்தித் தந்திருப்பதற்கு நான் இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் தெள்ளார் ஒன்றியத்தில், தென்கரை ஊராட்சியில் பெரும்பாக்கம் என்ற கிராமத்தில் பெருமாள்மாட்டுக்காரர்கள் என்ற பூம் பூம் மாட்டுக்காரர்கள் - பிச்சை எடுப்பவர்கள் - 100 பேர் இருக்கின்றார்கள். அவர்கள் நீண்ட காலமாக நிலப்பட்டா கோரி வருகிறார்கள். அவர்களுக்கு நிலப்பட்டா வழங்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி இடம் சாருகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. ஆவுடையப்பன்):** அடுத்து டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி, நான் என்னுடைய கருத்துக்களை வைக்க முன்வருகின்றேன். மண்தான் மனிதர்களை சொந்தம் கொண்டாட வேண்டுமே தவிர, மனிதர்கள் மண்ணைச் சொந்தம் கொண்டாடக் கூடாது என்று அழகாக அன்னிய நாட்டுக் கவிஞன் ஒரு கருத்தைச் சொல்லி வலியுறுத்தியிருக்கிறான். அந்த அடிப்படையில் நான் என்னுடைய கருத்துக்களை வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

சுதந்திரம் பெற்று ஐம்பதாண்டுகள் ஆகியும் கூட தமிழ் மண்ணில் இன்னும் ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான தாழ்த்தப்பட்ட, மிகமிகப் பிற்படுத்தப்பட்ட, ஏழை எளிய மக்கள், தாங்கள் உழைப்பதற்குத் தயாராக இருந்தும் கூட, வெயிலிலும் மழையிலும் கஷ்டப்படுவதற்குத் தயாராக இருந்தும் கூட, ஒரு காணி நிலம் இல்லாமல் கஷ்டப்படக்கூடிய நிலை இன்றைக்கு நிலவிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கிராமப்புறங்களிலே இருந்தும்கூட, அந்த நிலங்களில் எல்லாம் நெல்லையும், எள்ளையும், கரும்பையும், மஞ்சளையும் விளைவித்துக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கக்கூடியவர்களுக்கு அந்த நிலங்கள்



சொந்தமாக இல்லாமல், சென்னையிலே, கோவையிலே, மதுரையிலே அல்லது மும்பையிலே, கல்கத்தாவிலே, டில்லியிலே இருக்கக்கூடிய புதிய பண்ணையார்களுக்கும், இந்த தமிழ் மண்ணுக்கேக்கூட சொந்தமாக இல்லாத அன்னியர்களுக்குக்கூட இந்த மண்ணில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சொந்தமாக இருக்கக்கூடிய அல்லது புதிய பண்ணையார்களாக உருவாகக்கூடிய சூழ்நிலை இருப்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எந்த நிலங்கள் பயிரிடத் தகுதியான நிலங்கள், எந்த நிலங்கள் பயிரிடத் தகுதியற்ற நிலங்கள் என்ற ஒரு வரையறை இன்னும் வரையறுக்கப்படாத காரணத்தினால் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் மூன்று ஏக்கர் என்று வைத்திருக்கக்கூடிய சிறுசிறு விவசாயிகளைக்கூட ஆசை வார்த்தைகள் காட்டி, அல்லது பயமுறுத்தி கடந்த ஆட்சிக் காலத்திலே ஆயிரக்கணக்கான நிலங்கள் 'மேக்ஸ்வொர்த்' 'அனுபவ்' என்ற நிறுவனங்களால் தேக்கு மரங்களையும், பாக்கு மரங்களையும் விளைவிக்கக்கூடிய பூமிகளாக மாற்றப்பட்டு, சாதாரண ஏழை விவசாயிகூட, கூலி விவசாயியாக மாற்றப்பட்ட அவலநிலையைச் சுட்டிக்காட்ட இந்த நேரத்திலே கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, இந்த அரசானது, அந்த மக்கள் மீது பற்றுக்கொண்டு, பாசம்கொண்டு அப்படி மோசடி செய்து வாங்கப்பட்ட அனைத்து நிலங்களையும் உடனடியாக அரசுடைமையாக்கி அந்த நிலங்களை எல்லாம் அந்த மக்களுக்கே மீண்டும் எடுத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, பல ஆண்டுகளாகவே சொல்லி வரக்கூடிய நிலச்சீர்திருத்தம் என்பது இன்னும் ஏட்டளவிலேயேதான் இருந்துகொண்டு இருக்கின்றது. ஒரு குடும்பத்திற்கு, 5 நபர்கொண்ட ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர் உச்சவரம்பு என்று உருவாக்கப்பட்டு அதுகூட இன்றுவரை நடைமுறைப் படுத்தப்படாமல் மீண்டும் அந்த நிலங்களெல்லாம் அந்தக் குடும்பங்களை சுற்றிச்சுற்றியே வந்துகொண்டிருக்கின்றன. நாயினுடைய பெயரால், நரியினுடைய பெயரால், ஆடுமாடுகளுடைய பெயரால்கூட மேய்ச்சல் நிலங்கள் என்றெல்லாம் கூட எழுதி வைக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு அவலநிலையை இந்த மாமன்றத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே இந்த நாட்டிலே ஒரு பெரிய சமுதாய மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்றால், உண்மையிலேயே ஏழை எளியவர்கள் இணைந்து ஒரு சமுதாய, ஒரு

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1997 மார்ச் 21

சோஷலிச வாழ்வு உருவாக வேண்டுமென்றால், தந்தை பெரியார் கண்ட கனவு நனவாக வேண்டுமென்றால், இங்கே ஒரு நிலச்சீர்திருத்தம் என்பது உண்மையான மனப்பாங்கோடு உருவாக்கப்பட வேண்டும். எனவே, 15 ஏக்கர் என்பதை மாற்றி யார் விவசாயத்திலே நேரடியாக ஈடுபடுகின்றார்களோ, அவர்களுக்கு மட்டுமே நிலம். நிலத்திலே உழாதவர்களுக்கு நிலமே கிடையாது. உழுதுண்டோர், உழுவித்துண்டோர் என்ற இரண்டு வகையை ஒழித்துவிட்டு உழுதுண்போர்களுக்கு மட்டுமே நிலம் என்ற ஒரு நிலையைக் கொண்டுவருகின்ற காலம் எந்தக்காலமோ, அந்தக்காலம்தான் உண்மையாக சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும் நிலவக்கூடிய காலகட்டமாக இருக்க முடியும். எனவே, அப்படிப்பட்ட காலத்தை இந்த ஆட்சி உருவாக்கும், உருவாக்க வேண்டும் என்று நான் நம்புகின்றேன். அதற்காக இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, நிலங்களுக்கெல்லாம் சொந்தக்காரர்களாக இந்த மண்ணை வளப்படுத்திய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆங்கிலேயர்களால் நிலம் கொடுக்கப்பட்டது. அவற்றிற்கு 'கன்டிஷனல் அசைன்மென்ட்' என்று பெயர். ஆனால் அந்த நிலங்களையெல்லாம் ஆசை வார்த்தைகள் காட்டி, பயமுறுத்தப்பட்டு அதிகாரிகளே அந்த நிலங்களையெல்லாம் பறித்துக்கொண்டு, செங்கற்பட்டிலே காரணை என்ற இடத்தில் 674 ஏக்கர், ஒருசில அதிபதிகளே வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டினுடைய ஒரு உயர் போலீஸ் அதிகாரியாக இருந்தவரே ஏறக்குறைய 100 ஏக்கர் நிலத்தை வைத்திருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நாம் காண்கின்றோம். வட நாட்டிலேயிருந்து வந்த ஒரு சேட், 'கௌதம் சேட்' என்று சொல்லக்கூடியவர் ஏறக்குறைய 250 ஏக்கர் நிலத்தை வைத்திருக்கிறார். தமிழ் மண்ணுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு, தமிழனுடைய ஆட்சி நடந்துகொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், தமிழனுக்குச் சொந்தமான நிலம் அதுவும் 'கன்டிஷனல் அசைன்மென்ட்' அந்த நிலத்தை யாரும் விற்பதற்கும் உரிமை கிடையாது, மற்றவர்கள், தாழ்த்தப்பட்டவர்களைத் தவிர யாரும் வாங்கவும் கூடாது என்றிருக்கக்கூடியதை எல்லாம் மாற்றி, இப்படி வடநாட்டிலேயிருந்து வந்திருக்கக்கூடிய ஒரு சேட் அந்த நிலத்தை வைத்திருப்பதை எப்படி ஏற்றுக்கொள்ளப்போகின்றோம் என்று எனக்குத் தெரியவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலே காரணையில் என்று இருக்கக்கூடிய நிலங்களை மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கக்கூடிய பஞ்சமி நிலங்களையெல்லாம் எடுத்துத் தரப்போவதாக



1997 மார்ச் 21] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்தத் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதையாவது நடைமுறைப்படுத்த எல்லாவிதமான பஞ்சமி நிலங்களையும் எடுத்துத் தருவதற்கு ஒரு கால அவகாசம் கொடுத்து அல்லது ஒரு மூன்று மாதத்தில், ஆறு மாதத்தில் எடுத்துக் கொடுக்கவேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

முற்பகல் 11-35

அடுத்து கிராமப்புறங்களில் உள்ள நிலை எல்லோருக்கும், இங்கே மாமன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் தெரிந்த விஷயம், யதார்த்தமான விஷயம், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் மயானங்கள் இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை அல்லது மயானங்கள் இருக்கக்கூடிய பகுதிக்கு செல்லக்கூடிய பாதைகளை எல்லாம் வேறுவிதமாக விளைநிலங்கள் என்று அழைத்துக் கொண்டு, அவர்களுக்கு வழி விடாமல், இதனால் ஜாதி மோதல்கள் வரக்கூடிய சூழ்நிலை எல்லாம் இருக்கிறது என்பதை, இந்த யதார்த்த உண்மையை மாமன்றத்தில் இருக்கக்கூடியவர்கள் அறிவார்கள். எனவே நம்முடைய காலத்திலாவது இதற்கு தீவிரமாக முயற்சியெடுத்து, தாழ்த்தப்பட்ட, மிகமிகப் பிற்பட்ட மக்களுக்கு அவர்கள் இறந்த பிறகு தங்கள் பிணத்தை புதைப்பதற்குக் கூட அறுகதை இல்லாமல், சண்டை போடக்கூடிய சூழ்நிலை இல்லாமல் இருக்கக்கூடிய நிலையை உருவாக்கி, அதற்கு ஒரு சுமூகமானத் தீர்வைக் காண்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கக்கூடிய பட்டா என்பது கிடைக்காமல் பட்டாவிற்காக அவர்கள் ஆண்டுக்கணக்கில், ஒரு ஆண்டல்ல, 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று தாலுக்கா அலுவலகம், ஆர்.டி.ஓ. அலுவலகம், கலெக்டர் அலுவலகம் என்று திங்கட்கிழமைதோறும் அலைந்து கொண்டிருக்கிற அவலநிலையைக் காண்கிறோம். எனவே, அந்த நிலையை மாற்றி, ஒரு ஆண்டு காலத்திற்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் யாருமே பட்டா இல்லாதவர்கள் இல்லையென்ற நிலையை உருவாக்குவதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டும். ஏனென்றால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுப்பதற்கு எடுக்கப்பட்ட நிலங்களின் மீது இன்றைக்கு ஏறக்குறைய 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் தேங்கிக்

கிடக்கிற நிலையிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. எனவே, அரசு தலையிட்டு, உடனடியாக அந்த வழக்குகளை எல்லாம் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தாழ்த்தப்பட்ட ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு பொங்கல் நேரத்தில் இலவச வேட்டி, சேலை கொடுக்கப்படுகிறது. ஆனால் ஒரு வருந்தத்தக்க நிகழ்ச்சியை சொல்லிக்காட்ட ஆசைப்படுகிறேன். இலட்சக் கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த இலவச வேட்டி, சேலை கொடுப்பதாக இந்த ஆண்டு கூட அறிவித்துவிட்டு, கணவன், மனைவிக்கு இலவச வேட்டியும், சேலையும் கொடுப்பதற்கு பதிலாக, ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேட்டி அல்லது சேலை என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறைகேடு எப்படி நடந்தது? அல்லது அது எப்படி கவனிக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. எனவே அதைச் சீர் செய்வதற்கு தக்க நடவடிக்கையெடுக்க வேண்டுகிறேன்.

அதுமட்டுமல்ல, ஒரு கிராமத்தில் 300 பேர், 400 பேர் விவசாயத் தொழிலாளர்கள் இருந்தால், 10 பேர்களுக்கு மட்டும் கொடுத்து விட்டு, மீதி இருப்பவர்களுக்கு அப்புறம் என்று சொல்லி அதிகாரிகள் சென்று இருக்கிறார்கள். எனவே, இதுபோன்ற முறைகேடுகளைக் களைவதற்கு அரசு தக்க நடவடிக்கையெடுக்க வேண்டும். நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக விவசாயத் தொழிலாளர்களாக இருந்து வரக்கூடியவர்கள், ஒரு பொங்கலுக்கு, தீபாவளிக்குக் கூட நல்ல வேட்டி, சேலை கட்டுவதற்கு அவர்களால் முடியவில்லை. எனவே, அவர்களுக்கு கொடுக்கக்கூடிய இலவச வேட்டியும் சேலையும் தரமானதாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். இனிமேல் எதிர்காலத்தில் பொங்கலுக்கு மட்டுமல்ல, அவர்களுக்கு தீபாவளிக்கும் கொடுக்க வேண்டும், ஆடிக்கும் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. ஆவுடையப்பன்):** உங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** முடித்து விடுகிறேன். சாதிச் சான்றிதழ் பெறுவதற்கு இன்னும் பல ஆண்டுகள் அலைகிற அவல நிலை இருக்கிறது. அதைப்போல ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் என்று சொல்லக்கூடிய



காட்டுநாயக்கர்களுக்கு கடந்த ஒரு ஆண்டு காலமாக அந்தச் சான்றிதழ் வழங்கப்படாமல் தடை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களுக்கு, உரியவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவேண்டும். போலிச் சான்றிதழ் வழங்காமலும் இருக்க வேண்டும். ஆனால் உரியவர்களுக்கு சான்றிதழ் வழங்காமல் இருக்கக்கூடாது. அந்த அடிப்படையில் அவர்களுக்கு சான்றிதழ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதைப்போல ஏறத்தாழ 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட தண்டல்காரர்கள் இருக்கிறார்கள். அதிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 18 சதவீதம் என்றால் ஏறக்குறைய 6,000 பேர்களுக்கு மேல் வந்திருக்க வேண்டும். ஆனால் இருக்கக்கூடியவர்கள் 1,000 பேர்கள் கூட இல்லாமல் இருக்கக்கூடிய நிலையை நான் காண்கிறேன். எனவே, அந்தக் குறையைப் போக்குவதற்கு தக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முக்கியமான ஒன்று. விளாத்திக்குளம் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள், மிக மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய பகுதியாக கல்லூரணி என்ற கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தில் 474 ஏக்கர் நிலம் அந்த கிராமத்தினுடைய பொதுச் சொத்தாக இருந்தது. அந்த 474 ஏக்கரையும் ஒரு தனியார் ஆக்கிரமித்து வைத்திருக்கிறார். அதையும் எடுத்து அந்த மக்களுக்குக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையில் நான் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. ஆவுடையப்பன்):** திரு. என். தங்கவேல்.

**திரு. என். தங்கவேல்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முதலிலே உங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சங்கத்தமிழ் தந்த தங்கத் தலைவர், குறளோவியம் தந்த கோமான், கோடிக்கணக்கான உள்ளங்களிலே குடியிருக்கும் சீமான், தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள் 12-வது நிதிநிலை அறிக்கையை மாமன்றத்திலே தாக்கல் செய்திருக்கிறார்கள். அத்தகைய நிதிநிலை அறிக்கையைப் பார்த்து இன்று நாடே போற்றுகிறது. நாட்டிலுள்ள ஏடுகள் அனைத்துமே

போற்றிப் புகழ்கின்றன. இப்படிப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கையை இதுவரை இந்திய உப கண்டத்திலே யாரும் தாக்கல் செய்யவில்லை. ஏழை எளிய மக்களெல்லாம் மனம் குளிரும்படியான ஒரு நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே தாக்கல் செய்தார்கள் என்ற பெருமையோடு, பூரிப்போடு, நாட்டுமக்கள் பேசுகிறார்கள், நல்லவர்கள் பேசுகிறார்கள். இதையும் குறை சொல்பவர்கள்— குறைமதி படைத்தவர்கள்தான் குறை சொல்வார்களே தவிர மற்றவர்கள் சொல்ல மாட்டார்கள். காரணம் நிறைகுடம் தளும்பாது, குறைகுடம் தளும்பும் என்று சான்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலையிலே இந்த நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திற்குத் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் என்னுடைய வணக்கத்தையும் பாராட்டுதலையும் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் வருவாய்த்துறை மானியக் கோரிக்கையிலே பங்குபெறும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பினைப் பெறுகின்றபோது இந்த நாட்டிலே முதலாவதாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய நீலகிரி மாவட்டம் மிகப் பெரிய ஒரு மாவட்டமாகும். பார்வைக்குச் சிறியதாக இருந்தாலும் அங்குள்ள மக்கள் அதிகமாகும். 1989-ம் ஆண்டு சட்டமன்றத்திலே நீலகிரி மாவட்டம் நிருவாகம் என்ற தலைப்பிலே நான் பேசுகின்ற போது, நீலகிரி மாவட்டத்தில் உதகை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, மஞ்ஜூரை ஒரு வட்டமாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதேபோன்று கூடலூரிலே, ஒரே தாலுக்காவிற்கு ஒரு ஆர்.டி.ஓ. இருக்கிறார்கள். அப்படியென்றால் அங்கே மக்கள்தொகை அதிகமாக இருக்கிறது என்று பொருள். அந்தக் கூடலூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து பந்தலூரை ஒரு வட்டமாக அமைக்க வேண்டுமென்று நான் அன்று கோரிக்கை வைத்தேன். இன்றைய வருவாய்த்துறை மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது இந்தக் கோரிக்கையை நான் வைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் நீலகிரி மாவட்டத்தில்-உதகையை இரண்டாகப் பிரித்து மஞ்ஜூரை ஒரு வட்டமாகவும் கூடலூரை இரண்டாகப் பிரித்து பந்தலூரை ஒரு வட்டமாகவும் ஆக்க வேண்டுமென்று நான் அவர்களை மிக அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய தலைவரவர்கள் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் முக்கியமாக பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து



இருக்கிறார்கள். முன்பு முதல்வராக இருந்தபோது, முதன் முதலாக நிதிநிலை அறிக்கையிலே 30 சதவிகித இட ஒதுக்கீடு கொடுத்தது தலைவர்தான்.

அதேபோன்று, பெண்களுக்கு சொத்திலே சமபங்கு வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தவரும் அவர்தான். 1973-ம் ஆண்டு 2,800 பெண்களைக் காவலர்களாக நியமித்தார்கள். இன்றைய இந்த நிதிநிலை அறிக்கையிலே, 124 கோடி ரூபாயிலே ஒரு இலட்சம் பேருக்கு சுயவேலை செய்வதற்கு வழி செய்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. இவ்வாண்டிலே 5,000 பெண்களைக் காவலர்களாக நியமிக்கவிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், நம்முடைய தலைவரவர்கள் பெண்களுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே 17,500 பெண்களை மக்கள் நலப் பணியாளர்களாக நியமிக்க இருக்கிறார்கள். ஐந்து இலட்சம் பேருக்கு மேலே வேலைவாய்ப்பிற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறார்கள். இதையெல்லாம் எண்ணிப்பார்க்கிறபோது தாய்க்குலம் எல்லாம் மிகவும் பாராட்டுகிறார்கள்.

அடுத்து என்னுடைய நீலகிரி தொகுதியைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், அங்கு மிக முக்கியமாக 10 ஆயிரம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டியதிருக்கிறது. காரணம் அங்கே இலங்கையிலிருந்து ஏராளமான பேர்கள் வந்திருக்கிறார்கள். இதற்கு 27-10-92ல் முன்னாள் அரசு ஒரு தடையாணையை விதித்தது. அந்தத் தடையாணையை நீக்கி இந்த பத்தாயிரம் மக்களுக்கும் இந்த ஆண்டிலேயே பட்டா வழங்க வேண்டும். காரணம் அங்குள்ள மக்கள் எல்லாம் ஒவ்வொரு இடத்திலே குடியிருக்கிறார்கள். அங்கிருக்கும் மக்களுக்கு அந்தந்த இடத்திலேயே பட்டா வழங்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். எனவே நீலகிரி மாவட்டத்திலே இருக்கிற மூன்று சட்டமன்ற உறுப்பினர்களும் வேண்டுகோளாக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலேயும் வைத்திருப்பது ஏழை மக்களுக்கு, எளிய மக்களுக்கு, இலங்கையிருந்து வந்தவர்களுக்கு, வீடற்றவர்களுக்கெல்லாம் நம்முடைய தானைத் தலைவர் முதல்வர் அவர்களுடைய ஆட்சியிலே 2 சென்ட் நிலம் கூட வீடு கட்டுவதற்கு இல்லை என்கிற ஏக்கம் யாருக்கும் வரக்கூடாது, அந்த ஏக்கத்தை நீக்குவதற்கு எல்லோருக்கும் நிலப்பட்டா வழங்கவேண்டும்,

[திரு. என். தங்கவேல்] [1997 மார்ச் 21

வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே மிக அன்போடு நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குன்னூரிலே ஒரு அரசு கலைக்கல்லூரி வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் மூலம் கேட்டுக் கொண்டேன். அந்தக் கல்லூரி பற்றி பரிசீலிக்கப்படுமென்று தலைவர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அடுத்து சுயநிதிக் கல்லூரி வைக்கலாம் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கான முயற்சியிலே நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சுயநிதிக் கல்லூரியைத் துவங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறபோது அதற்கு தலைவர் அவர்கள் ஒப்புதல் கொடுத்து, அதைத் துவக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அடுத்து கோத்தகிரி ஒரு தாலுக்கா அந்தஸ்தில் உள்ளது. அந்தத் தாலூக்காவிலே தீயணைப்பு நிலையம் இல்லை. ஆகவே, தீயணைப்பு நிலையத்தை அங்கே அமைக்க வேண்டும் என்று உங்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 1989 ஆம் ஆண்டு கோத்தகிரிக்கு கோர்ட் வேண்டும் என்று நான் பேசினேன். கோர்ட்டைக் கொடுத்துவிட்டீர்கள். ஆனால் அந்த கோர்ட் வட்டாட்சியர் அலுவலகத்திலேயே வாடகைக்கு இருந்து வருகிறது. கோத்தகிரி பேரூராட்சி மன்றம் 50 சென்ட் நிலத்தைக் கொடுத்திருக்கிறது. அந்த நிலத்திலே கோர்ட்டிற்குத் தேவையான கட்டித்தைக் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து கோத்தகிரி பகுதியிலே கொடநாடு என்ற இடத்திலே எலக்ட்ரானிக் தொழிற்சாலையை உருவாக்க வேண்டும் என்று சொன்னேன். அதற்கு தலைவர் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள், 1989 ஆம் ஆண்டு நான் பேரவை உறுப்பினராக இருந்தபோது, அங்கே உள்ள மக்களை வைத்து, அங்கேயுள்ள பணம் படைத்த சீமான்களை வைத்து தனியார்த் துறையிலே நடத்துவதாக இருந்தால், அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும் என்று சொன்னார்கள். அந்த கொடநாடு எஸ்டேட் பகுதியில் உள்ள வாக்காளர்களைச் சந்தித்து— நன்றி சொல்ல நான் சென்றபோது அந்தக் கொடநாடு எஸ்டேட்டை



1997 மார்ச் 21] [திரு. என். தங்கவேல்]

முன்னாள் முதல்வர் அவர்கள் வாங்கியிருக்கிறார்கள் என்றும், அங்கே போவதற்கு தடம் இல்லை என்றும் சொன்னார்கள். நான் வழிவிடாவிட்டால் பாருங்கள் என்று சொல்லிவிட்டு, அந்த மக்களுக்கு நன்றி சொல்லிவிட்டு வந்தேன். அப்போது ஒன்றியச் செயலாளரிடத்திலே, இந்த கொடநாடு எஸ்டேட்டை நம்முடைய தமிழக அரசினுடைய தேயிலைத் தோட்டத்தோடு, 'டான்-டீ'யோடு இணைக்க வேண்டும் என்று நான் அன்று கூறிவிட்டு வந்தேன். ஆகவே, அதை 'டான்-டீ'யோடு இணைக்க வேண்டும். ஏன் என்று சொன்னால், 5 ஆண்டுக்காலத்தில் - ஒரு அமைச்சருக்கு எவ்வளவு சம்பளம் என்பதை நீங்கள் - அறிவீர்கள். கோடிக்கணக்கான ரூபாய்களை கொள்ளை அடித்து, அந்த கொடநாடு எஸ்டேட்டை வாங்கிவிட்டார்கள். இதெல்லாம் மக்களுடைய வரிப்பணம். எனவே, அரசாங்கத்தினுடைய தேயிலைத் தோட்டமாகிய டான்-டீயோடு இணைக்க வேண்டும் என்று உங்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய வருவாய்த் துறையை எடுத்துக் கொள்வோமானால், கிராம நிர்வாக அலுவலர்கள் எல்லாம் மக்கள் எந்த ஒரு சான்றிதழ் கேட்கச் சென்றாலும் காலதாமதம் செய்கிறார்கள். அங்கே ஊழலுக்கு வழிவகுப்பதற்கு ஒரு ஆரம்ப கட்டமாக அது இருக்கிறது. அவர்கள் கூட இன்றையதினம் என்னிடத்திலே ஒரு அறிக்கை கொடுத்தார்கள். எங்களுக்கு புரமோஷன் கிடைக்கவேண்டும். பதவி உயர்வு கிடைக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் என்னுடைய நண்பர்கள் எல்லாம் நாட்டிலே நடைபெறுகின்ற, அவர்கள் செய்கின்ற முறைகேடுகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, இதனை வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கவனித்து, அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து போக்குவரத்து வசதியின்றி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3,600 பேருந்துகள் புதிதாக வாங்கப்படும் என்று சொன்னார்கள். மக்கள் போக்குவரத்து வசதியின்றி கஷ்டப்படுவதை நீக்குவதற்கு 3,600 பேருந்துகளை வாங்குவதைக் கண்டு, மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். ஏன் என்று சொன்னால், நீலகிரி மாவட்டத்திலும், தமிழகத்திலும் எல்லாப் பேருந்துகளும் சரியில்லை என்று எல்லோரும் சொல்கிறார்கள். எல்லாப் பேரவை உறுப்பினர்களும் சொல்கிறார்கள். ஆகவே, இந்த 3,600 பேருந்துகள் வருகின்றபோது எல்லா மக்களுக்கும் பயன்படுகிற

வகையில், எல்லோரும் மகிழ்ச்சி அடைகின்ற வகையில், அந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன்' என்று அண்ணா சொன்னார். அறிஞர் அண்ணா சொன்னதை இதயத்திலே நிறுத்தி, நம்முடைய தலைவர் அவர்கள் செய்திருக்கிறார்கள். இருந்தாலும் எந்த ஒரு தலைவருக்கும் இல்லாத ஒரு சிறப்பு நம்முடைய தானைத் தலைவர், நம்முடைய முதல்வர் அவர்களுக்கு உண்டு. காரணம் நாடு சுதந்திரம் பெற்று 25ஆம் ஆண்டு வெள்ளி விழா கொண்டாடுகின்றபோது, இங்கே முதல்வராக காட்சி அளித்தார்கள், முதல்வராக இருந்து கொண்டாடினார்கள். அடுத்து பொன்விழாவும் நம்முடைய தலைவர் தலைமையிலேதான் நடைபெற்றது. அதேபோன்று வைரவிழாவும் நம்முடைய தலைவர் தலைமையிலே, முதல்வராக, இருக்கின்ற நம்முடைய தலைவர் தலைமையிலே, முதல்வராக இருக்கின்றபோதுதான் நடைபெறவிருக்கிறது. பவளவிழாவும் முதல்வர் அவர்களுடைய தலைமையிலேதான் நடக்கவிருக்கிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது, உலகத்திலே எந்தத் தலைவனுக்கும் இல்லாத ஒரு சிறப்பு, நமது தலைவருக்கு இருக்கிறது. ஒரு சரித்திர நாயகன் தமிழகத்திலே தோன்றியிருக்கிறார். 60 ஆண்டுக்காலம் அரசியலிலே ஈடுபட்டு, மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் தலைவருக்கு இப்படிப்பட்ட பாக்கியம் கிடைத்திருக்கிறது. தமிழகச் சட்டமன்றத்திலே வெள்ளிவிழா கொண்டாடுகிறபோது முதல்வராக இருந்தார்கள் பொன்விழா கொண்டாடுகிறபோதும், வைர விழா கொண்டாடுகிறபோதும், பவள விழா கொண்டாடுகிறபோதும், முதல்வராக இருக்கவிருக்கிறார்கள். இப்படி ஒரு சரித்திரம் படைத்த, சரித்திர நாயகன் தலைமையிலே நாங்கள் எல்லாம் இயங்கி வருவது எங்களுக்கு எல்லாம் பெருமை என்பதைக் கூறி பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. ஆவுடையப்பன்) :**அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராஜ ரெட்டி.

முற்பகல் 11-50

***Thiru S. Raja Reddy:** Hon. Speaker Sir, I would like to express my views on behalf of the Communist party of India on the Demands





for Grants relating to the Revenue Department. Revenue Department is the oldest Department and the classification of land is the oldest and it is the legacy of the British rule.

Thousands of acres of land have been acquired for the industrial units, housing boards and other public purposes. But, at the same time, thousands of people are there without a piece of land to build a house. For giving house-sites and pattas, a time-frame should be given. The pattas are given but the land is not shown. In urban areas, the pattas are not given because they are occupied by the landlords and are being cultivated by the landlords. A target is being fixed for giving pattas and just to fulfil the target, pattas are given but the land is not shown to the patta holders. Temple lands are acquired for housing board tenements, hospitals and other public purposes. But when it comes to the landless poor, various laws come in the way. Similarly, temple lands can be acquired and given to the cultivating tenants and the compensation can be fixed for the lands acquired and the money accumulated may be deposited in banks to be used for temple purposes.

In 1989-90, during the D.M.K. rule, the name of the benami landholders were read in the Assembly by the Hon. Chief Minister. The land should be acquired and distributed by the Government to the landless poor.

In my constituency, nearly 500 acres of surplus land were acquired in 1982 in Achipalam Zamindhar Nellumar Agraharam. But so far, pattas are not given and the surplus land is being handed over to the social Forestry Department for developing the forests. Hundreds of acres of waste land are available to develop the forests. But it is not used. Cultivable lands should be distributed to thousands of landless people.

D-Cards are also issued. But the D-Cards are issued in fictitious names and they are irregular. While issuing pattas, the land should be surveyed and the pattas should be given to the tenants possession and are cultivating. Cultivable lands are assignd to the landless poor in

all districts including Dharmapuri District. But in Hosur and Thenkanikottai taluks, assignments were not given and it is unjust. Thousands of landless poor are dependant on the poramboke lands. So, I request the Hon. Minister to give pattas for the waste land and issue them to the landless poor. Thousands of acres of poramboke lands are occupied by estate owners like V.G.P., Maxworth and other big companies. They don't need pattas and they are enjoying the adjacent lands. They cannot be evicted. But when it comes to the landless poor they are mercilessly evicted from the poramboke lands. So, I request the Hon. Minister not to evict the landless poor from the poramboke lands. They should be issued pattas.

Regarding Revenue Courts, actually they are against the tenants and it is used only for evicting the tenants from the lands, who have been cultivating for years. I request the Hon. Minister to abolish the Revenue Courts altogether.

I request that the representatives of agricultural labourers should be included in the Committee to be constituted for the welfare of the agricultural labourers.

In flood affected areas collection of loans was postponed, but the land revenue and irrigation tax are being collected. I request the Hon. Minister to stop the collection of the land revenue. Postponement of collection of loans will serve no purpose. The loans borrowed by the farmers should be waived altogether.

In Southern District, because of the drought situation prevailing there, thousands of people are migrating to the neighbouring districts. I request you to stop this migration. Drought relief measures should be taken up immediately. Districts were bifurcated and trifurcated. But, it never benefited the people because after bifurcation or trifurcation, employees were not appointed.

முற்பகல் 11-55

Mass Contanct Programme is a good programme. But, it is being used as a reception for District Collectors. The petitions given by the people in those Mass contact programmes should be disposed of and answered immediately.



There is a Supreme Court judgment to close the prawn farms in the coastal areas. But the prawn farms have not been closed so far. The cases filed against the farmers who protested against the prawn farms should be withdrawn.

Village Assistants have been working for many years and they have been doing 40 different types of work. Their basic pay is Rs. 600/- The basic pay of the Village Assistants should be raised to Rs.750/- If they die in service, their legal heirs should be given appointment on compassionate ground. Qualified Village Assistants should be promoted as is being done in Panchayat Unions.

The lands acquired for the Adi-Dravidas to build houses are locked in court battles. I wish to mention one incident. In 1955, Gazette notification was issued. But, even after 42 years, because of a stay on the lands acquired by the Government, they are still locked in court battles. So, I request the Hon. Law Minister, the Adi-Dravidar Welfare Minister and the Revenue Minister to see that the stay on the acquired lands vacated immediately so that the Adi-Dravidas could be given lands to build houses.

While issuing different certificates in Taluk offices like Income Certificate, Community certificate and legal heir certificate, people are subjected to different hardships. They are made to come everyday for 15 days or 20 days and the certificates are not issued properly. I request the Hon. Minister to see that those certificates are issued on an emergent basis so that the people are rendered justice.

Before concluding, I wish to point out that false cases are filed by the Forest department officials against the S.T. people living in hill areas. The Forest department officials evict the S.T. people from the houses built by them. I request the Hon. Minister to consider the issue sympathetically and render justice.

Thank you for giving me this opportunity.

[1997 மார்ச் 21

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. ஆவுடையப்பன்):** திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை எண் 1, 40 45-ன் மீது இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக என்னுடைய சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகின்றேன். அரசினுடைய தரிசு நிலங்கள் தமிழகத்திலே ஏராளமாக இருக்கின்றன. அந்த அடிப்படையிலே, என்னுடைய தொகுதியான அரவக்குறிச்சி தொகுதியிலே, ஏழையெளிய பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதியிலே ஒவ்வொரு ஆண்டும், அவர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு பட்டாக்கள் வழங்கப்படுகின்ற இடங்களிலேதான் அவர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்ற திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டு, அது நல்லமுறையில் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. அதற்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற பட்டாக்களைப் பொறுத்தவரையிலே, என்னுடைய தொகுதியிலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட மக்கள் ஏராளமாக வாழ்கின்றார்கள். அவர்களுக்கு வீட்டுமனைகள் இன்னும் ஏராளமாக வழங்க வேண்டியிருக்கின்றன. அதற்காக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, தரிசு நிலங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பட்டா போட்டுக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களிலே பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளார்கள். அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ள சில நில உரிமையாளர்கள் அந்த நிலங்களை அவர்களுக்குக் கொடுப்பதில் விருப்பம் இல்லாமல் இருக்கிறார்கள். இது சம்பந்தமாக, சிலநேரங்களில் அங்கே இருதரப்பினருக்கும் இடையே சில பிரச்சினைகள் ஏற்படுகிற சூழ்நிலை உள்ளது. அதுபோன்ற நேரங்களில் peace committee என்ற ஒரு அமைதிக் குழுவை ஏற்படுத்தி நம்முடைய மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இருதரப்பினரையும் அழைத்துப் பேசி அவர்களுக்கு உரிய மாற்று இடங்களை ஒதுக்கீடு செய்து கொடுக்கின்றார்கள். அப்படியிருந்தும் சில இடங்களிலே சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதுபோன்று நில உரிமையாளர்கள் தாங்கள் வைத்துள்ள இடங்களை அவர்களுக்கு வழங்குவதிலே - மாற்று இடங்கள் வாங்கிக் கொடுப்பதற்கு முன்வருகின்ற நேரத்திலே - அந்த இடங்களைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு அந்த இடங்களிலே



1997 மார்ச் 21] [திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்]

பட்டா வழங்குவதற்கு வருவாய்த் துறை மூலமாக - டி.ஆர்.ஓ. மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அவர்களுக்கு நீங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அதுபோன்று அரசின் தரிசு நிலங்கள் சில இடங்களிலே இருக்கின்றன. சில இடங்களிலே, இல்லாத இடங்களிலே பட்டா நிலங்களை நில உரிமையாளர்கள் - அங்கே வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற காரணத்தினால் மழையை நம்பியிருக்கின்ற காரணத்தினால்— அந்த இடங்களிலே அவர்கள் காலதாமதப்படுத்தி பயிர் செய்கின்ற நேரங்களிலே காலியாக இருக்கின்ற இடங்களை ஆக்கிரமிப்பு செய்து கொள்கின்றார்கள். அவ்வாறு செய்து கொள்கின்ற இடங்களிலேதான் இது போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே நில உரிமையாளர்கள் வெளியூரிலே இருக்கின்றவர்கள் உள்ளூருக்கு வருகின்றபோது அந்த இடங்களை ஆக்கிரமிப்பு செய்ததைப் பார்த்து கேட்கின்ற நேரத்தில் பல பிரச்சினைகள் ஏற்பட்டு இருதரப்பாருக்கும் சில வகுப்புக் கலவரங்கள் உருவாகின்ற சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினால் அதற்கான மாற்று இடங்களை, நில உரிமையாளர்கள் வாங்கிக் கொடுக்கின்ற நேரத்திலே அதைப் பெற்றுக் கொண்டு அந்த இடத்திலே வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குரிய முயற்சியை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமாய் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய அரவக்குறிச்சி தொகுதியிலே மழை பொய்த்திருக்கின்ற காரணத்தினால் அதை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே கேட்டுக் கொண்டேன். அதற்கிணங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரவக்குறிச்சியை பின்தங்கிய பகுதியாக அறிவித்திருக்கிறார்கள்.

அதேபோல என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பரமத்தி, சின்னதாராபுரம் பகுதியிலேயும் மழை பொய்த்திருக்கின்ற காரணத்தினால் விவசாயப் பயிர்கள் எல்லாம் அங்கே வானம் பார்த்த பூமியாக மழையை நம்பியிருக்கிற காரணத்தினால் - அரவக்குறிச்சி தொகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவித்ததைப் போல - பரமத்தி, சின்னதாராபுரம் பகுதியையும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று என்னுடைய பகுதியிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட, நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு வழங்குவது போன்று பின்தங்கிய சமுதாய மக்களாக இருக்கின்ற இஸ்லாமியப் பெருங்குடி மக்களுக்கும் ஓரளவு 5% அல்லது 10 சதவிகிதமாவது வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி அவர்களுக்கும் நீங்கள் ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் தாய் உள்ளத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற நேரத்திலே சிறுபான்மை சமுதாயத்திற்கும் நீங்கள் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க வேண்டுமாய் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரிடத்திலே கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று சாலைகளைப் பராமரிப்பதற்காக அதிக நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கரூர் - தீரன் சின்னமலை மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கின்ற தொய்வுகளைச் சரி செய்து கொடுப்பதற்காக நல்ல நிதியை ஒதுக்கித் தருமாறு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு ஒன்றைப் பணிவாக சமப்ர்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சிறுபான்மை மக்களுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1989-91 ஆம் ஆண்டிலே ஹஜ் கமிட்டிக்காக ஒரு இடத்தை ஒதுக்கீடு செய்து அந்த இடத்திலே கட்டிடம் கட்டிக் கொடுப்பதாக அறிவித்திருந்தார்கள். கடந்த எம்.ஜி.ஆருடைய ஆட்சிக் காலத்திலேயே இங்கே இருக்கக்கூடிய நேரு ஸ்டேடியம் அருகிலே ஒரு இடத்தை ஒதுக்கீடு செய்து அந்த இடத்திலே கட்டிடம் கட்டுவதற்காக நில ஒதுக்கீடு செய்து கொடுக்கின்ற நேரத்திலே மற்ற துறையைச் சார்ந்தவர்கள் அங்கு ஒரு இந்துக் கோயில் இருக்கின்ற காரணத்தினால் அதை ஆட்சேபித்து தடுத்து நிறுத்திவிட்டார்கள். மீண்டும் ஆட்சிபொறுப்பு ஏற்ற அ.இ.அ.தி.மு.க. ஹஜ் கமிட்டிக்காக இடம் ஒதுக்கீடு செய்வதாகச் சொன்னார்களே தவிர, செய்து கொடுக்க முன்வரவில்லை. ஆகவே கருணை உள்ளத்தோடு, தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இஸ்லாமிய சமுதாயத்தின் மேல் பற்றும் பாசமும் கொண்டிருக்கின்ற காரணத்தினால் இந்த நிதியாண்டிலாவது கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குரிய இடம் இப்போது மதரசா-ஏ-ஆஜம் என்ற இடத்தில் இருக்கின்றது. அந்த இடத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.





அந்த இடத்தினுடைய கோப்புகள் அறநிலையத்துறை, நிலவருவாய்த்துறை, கல்வித்துறை ஆகிய மூன்று துறைகளிலே சுற்றிக் கொண்டிருக்கிறது. ஆகவே இதில் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி அந்த இடத்தை ஒதுக்கீடு செய்து கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புனித ஹஜ் பயணிகள் இப்போது தனியாரால் கட்டப்பட்ட இடத்திலே தங்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசு மூலமாக ஒதுக்கப்பட்ட இடத்திலே கட்டிக் கொடுப்பார்களானால் பல்லாயிரக்கணக்கான ஹாஜ்கள் சென்று அந்த இடத்திலே தங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று வக்ஃப் வாரியத்திற்காக ஒரு இடத்தை ஒதுக்கீடு செய்து கொடுப்பதாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1989-91ஆம் ஆண்டிலே நிதிநிலை அறிக்கையின் போது எடுத்து வைத்திருந்தார்கள். இந்த நிதியாண்டிலேயும் அந்தத் திட்டம் இங்கே எடுத்துச் சொல்லப்படவில்லை. தற்போது வாடகைக் கட்டிடத்திலே வக்ஃப் வாரியம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே அதை நினைவுபடுத்தி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் அதற்கும் ஒரு இடத்தை ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12.05

இந்த ஹஜ் கமிட்டிக்கு ஒரு புதிய கமிட்டியை உருவாக்கி அந்த கமிட்டியில் இஸ்லாமிய மக்களை எல்லாம் இடம்பெறச் செய்திருக்கிறீர்கள். அதோடு மேலும் வலிவு ஊட்டுகின்ற முறையில் இஸ்லாமிய சமுதாயத்திற்கு பொலிவு ஊட்டுகின்ற முறையிலே ஹஜ் பயணிகள் செல்வதற்கு உயர் அதிகாரிகளைக் கொண்ட உயர்மட்டக் குழுவில் மாண்புமிகு அந்தப் பகுதியில் உள்ள இஸ்லாமிய சமுதாயத்தினுடைய வழிக்காட்டலாக உள்ள கலீமுல்லா கான், ஐ.பி.எஸ், என்ற ஒரு காவல் துறை அதிகாரியை வெளி மாநிலங்களுக்குச் சென்று வர ஒரு கைடாக ஒரு காவல் துறை அதிகாரியை இந்த ஹஜ்களோடு அவர்களுக்குத் துணையாக அனுப்பி வைத்ததற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதேபோல் இஸ்லாமிய சமுதாயத்தின் மீது நல்ல ஒரு கனிவோடு சேர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற தமிழக அரசுக்கு இஸ்லாமிய சமுதாய மக்களின் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு சேலம் மாவட்டத்தில் ஏற்காடு பகுதியில் வாழக்கூடிய என்னுடைய பகுதியில் இருக்கக்கூடிய அருமை ஆதிதிராவிடர்கள் பிற்படுத்தப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு கடந்த கால வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. உரிய பட்டாக்கள் கையில் இருக்கின்றன. ஆனால் உரிய இடம் அங்கே கொடுக்கப்படவில்லை. அப்படி அந்த இடம் பஞ்சாயி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குச் சம்பந்தப்பட்ட அந்த சர்வே நம்பர் 7 என்ற இடத்திலே இப்போது அரிசனங்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் குடியிருந்து கொண்டு இருக்கிறார்கள். அந்த இடத்தை நீங்கள் அருள்கூர்ந்து பார்வையிட்டு சுற்றுப்புறங்களில் அரசு புறம்போக்கு நிலங்கள் இல்லாத காரணத்தால் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சம்பந்தப்பட்ட 197 ஏக்கர் நிலம் அந்த இடத்தில் இருக்கிறது. அதில் ஒரு 10 ஏக்கரை ஒதுக்கீடு செய்து பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் வாழ்ந்து குடிசைப் போட்டுக்கொண்டிருக்கக்கூடிய இடத்திற்கு உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அங்கே ஏற்காட்டில் நடைபெற இருக்கின்ற மலர் விழா, கோடை விழா நேரத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் வருகை தந்து மரியாதைக்குரிய எங்களுடைய சேலம் மாவட்டத்தினுடைய சிங்கமாகத் திகழக்கூடிய மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தலைமையில் பட்டாக்களை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அந்தப் பகுதியில் 69 கிராமங்களில் வீட்டுமனை பட்டாக்கள் பெற்ற மலைவாழ் மக்களுக்கும் காலனி வீடுகளை கட்டிக் கொடுத்து இருக்கிறீர்கள். ஆனால் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஏழை, எளிய ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற பகுதியில் இருக்கக்கூடிய அந்த மக்களுக்கு இதுவரை ஒரு காலனி வீடு கூட ஏற்காடு பகுதியில் கட்டிக் கொடுக்கப்படவில்லை என்பதை மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கழக அரசு பொறுப்பு ஏற்று இருக்கின்ற இந்த நேரத்திலாவது ஏற்காடு நகரத்திலேயும், செம்மனந்தம், மஞ்சக்குட்டை, கிளியூர், நாகலகோடு போன்ற பகுதிகளில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிலங்களில் குடியிருந்துகொண்டு இருக்கிற நில உரிமையாளர்களுக்கு நீங்கள் பட்டா அளித்து காலனி வீடுகளை இந்த நிதி ஆண்டில் மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள்





கட்டிக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோல் இலங்கையிலிருந்து அகதிகளாக வருகை தந்தவர்கள் அந்தப் பகுதியில் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் காலனி வீடுகள் இல்லாமல் அவர்கள் அரசு புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே எஸ்டேட் உரிமையாளர்கள் சேர்ந்தாற்போல் இடங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளதோடு, பினாமி பெயரில் பட்டா போட்டு, புறம்போக்கு நிலங்களில் பி.மெமோ போட்டு ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் அப்புறப்படுத்தி உண்மையிலேயே ஏழை எளிய மக்கள், தோட்டத் தொழிலாளர்களாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பின் தங்கிய மக்களுக்கு நீங்கள் அந்த இடங்களை பட்டா செய்து கொடுத்து அந்த ஏழை எளிய மக்களுக்கும் காலனி வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பின் தங்கிய மக்கள், ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற பகுதிக்கு நீங்கள் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக வழங்குகின்ற நிலத்தை ஒதுக்கீடு செய்து கொடுப்பீர்களானால் மலைவாழ் மக்கள் துறையின் மூலமாகவும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மூலமாகவும், நாங்கள் வாதாடி, போராடி அவர்களுக்கு உரிய இடத்தை கட்டிக் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி அரிய வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. இரா. ஆவுடையப்பன்) :** அடுத்து திரு. ப. பாலசுப்பிரமணியன்.

***திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மையினை விளைவிக்கக்கூடிய பல்வேறு நலத் திட்டங்களை உள்ளடக்கிய நிதிநிலை அறிக்கையினை நமது கருணை உள்ளம் கொண்ட தலைவர் தமிழக முதல்வர் அவர்களால் தாக்கல் செய்து இருப்பதைத் தொடர்ந்து இன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கும் மானியக் கோரிக்கையினை வரவேற்று, பாராட்டி சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்படும் நலத் திட்டங்களை, உதவிகளை மக்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் பெரும் பொறுப்பு வருவாய்த் துறைக்குத்தான். வட்ட ஆட்சியர் அலுவலங்களில் பணியாளர்களையும் அதே அளவில் கிராம அதிகாரிகளையும், வருவாய்த் துறை ஆய்வாளர்களையும், நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12.10

ஜாதிச் சான்றிதழை, மனுச் செய்த மூன்று நாட்களிலே வழங்கிட உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது, ஜாதிச் சான்றிதழ் வழங்க மிகுந்த காலதாமதம் செய்கிறார்கள்.

ஓய்வூதியம், முதியோர் உதவித் தொகை, விதவை உதவித் தொகை மனுக்களை விரைவாக விசாரணை செய்து உதவிகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காலியாக உள்ள புறம்போக்கு நிலங்களை வீடு இல்லாத தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்கு வழங்கிட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டா வழங்குவதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள நிலங்களைப் பற்றி நீதிமன்றங்களிலே நிலுவையிலே உள்ள வழக்குகளை விரைவாக முடித்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நில உச்சவரம்புச் சட்டத்தினை தீவிரமாக அமல் நடத்தி அதிகப்படியான நிலங்களைக் கைப்பற்றி நிலமற்றவர்களுக்கு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதியில் கீழ்க்கண்ட கோரிக்கைகளை அருள்கூர்ந்து தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்களும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டுக்கோட்டையிலே நீண்ட நாட்களாக உள்ள கோரிக்கையான பெண்கள் கல்லூரியை அமைத்திட வேண்டும்.

பட்டுக்கோட்டை நகரம் வளர்ந்து வரும் நகரம். நெரிசல் காரணமாக, புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பட்டுக்கோட்டை நகரில் மேலும் ஒரு புறநகர் காவல் நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அதிராம்பட்டினம், மதுக்கூர் காவல் நிலையங்கள் வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. சொந்தக் கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதியில், அதிராம்பட்டினம் பயணிகள் விடுதி இடிந்து விட்டது. புதிய கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதி கடைமடைப் பகுதி. மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரை செய்த பம்பிங் ஸ்கீம் நீரேற்று நிலையத்தை இந்த ஆண்டுத் திட்டத்திலே நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை பகுதியில் தென்னை, கரும்பு போன்றவைகள் அதிகப்படியான விளைச்சல் உள்ள பகுதியாக இருப்பதால் ஒரு கரும்பாலை அமைத்துத்தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பட்டுக்கோட்டையில் தொழிற்பேட்டை அமைத்துத் தரவும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்டபொழுது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் நேரடியாக எல்லாப் பகுதிகளுக்கும் சென்று, நிவாரண வேலைகளைத் துரிதப்படுத்திய அவருக்குப் பட்டுக்கோட்டை தொகுதியின் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. ஆவுடையப்பன்):** திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது என்னைப் பேச அனுமதித்தமைக்காக நான் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மழை, வெள்ளத்திலே நமது சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில்-என்னுடைய தொகுதி பெரிய தொகுதி - அதில்

சென்னை மாவட்டமும் வருகிறது. செங்கல்பட்டு மாவட்டமும் வருகின்றது-வருவாய்த் துறை அதிகாரிகளும், தாசில்தார்களும், வி.ஏ.ஓ.க்களும், ஆர்.ஐ.களும் இரவு பகல் பாராது நல்லமுறையிலே பணியாற்றி மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை முறையோடு வழங்கினார்கள். அதற்காக நான், தமிழ் மாநிலக் காங்கிரஸின் சார்பிலே எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக மதுரவாயல் பகுதியிலே மட்டும் ஏறத்தாழ 1,360 பேர்களுக்கு 5 கிலோ அரிசி, 500 ரூபாய், ஒரு புடவை, ஒரு வேட்டி போன்ற பொருட்களை வழங்கினோம். ஆனால் இன்னும் 160 பேர்களுக்கு வழங்காமல் இருக்கிறது. அதுபோன்று என்னுடைய தொகுதியைச் சார்ந்த பல பகுதிகளிலே இன்னும் வழங்காமல் இருப்பதனால், அந்தப் பகுதியின் உள்ளே செல்ல முடியாத ஒரு சூழ்நிலை எங்களுக்கு இருக்கின்றது. போனவுடன் அங்கே இருக்கின்ற ஏழை மக்கள், அங்கே இருக்கின்ற சாதாரண குடிசையிலே வாழ்கின்ற மக்கள் எங்களுக்கு வர வேண்டிய நிவாரண உதவி என்னவாயிற்று என்று கேட்கிறார்கள். ஏப்ரல் ஆகி விட்டால் தர மாட்டீர்களோ என்ற ஒரு அச்சம் அவர்களுக்கு இருக்கின்றது. அந்த அச்சத்தைப் போக்குகின்ற வகையிலே இந்த நிவாரணத் தொகைகள் உடனடியாக அவர்களுக்குச் சேர வேண்டிய, உடனடியாகக் கிடைக்க வேண்டிய ஒரு நிலையை நீங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாவட்டம் அந்தக் காலத்திலேயிருந்து 5 தாலுக்காக்களாக, 5 தாசில்தார்கள் உள்ள வட்டங்களாக இருக்கின்றன. காவல் துறையில் ஏற்கனவே 15 காவல் நிலையங்கள் இருந்த இடத்திலே இப்பொழுது 75-க்கும் மேற்பட்ட காவல் நிலையங்களை உருவாக்கி விட்டார்கள். முன்பிருந்ததைவிட ஜனத்தொகை இப்பொழுது 5 மடங்கு கூடியும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் அந்த 5 வருவாய் வட்ட அலுவலகங்களை வைத்துக் கொண்டு செயல்படுவது என்பது சிரமமாக இருக்கும். ஆகவே, எங்களுடைய பகுதியிலே இருக்கின்ற மக்கள் அந்தந்த வட்டங்களிலே சென்று வேலைகளைச் செய்து கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. ஆகவே, வருவாய் வட்டங்களை, தாசில்தார்கள் அலுவலகங்களை நீங்கள் அதிகமாக்க வேண்டும். ஏற்கனவே சென்னை மாவட்டத்தில் 5 இருக்கின்றன; குறைந்தபட்சம் அதனை 15 ஆக்க வேண்டும்.



மூன்று வருவாய் வட்டங்களுக்கு ஒரு ஆர்.டி.ஓ.-வை நியமிக்க வேண்டும். எவ்வாறு புறநகர்ப் பகுதியிலே மூன்று தாசில்தார் அலுவலகங்களுக்கு ஒரு ஆர்.டி.ஓ. ஆபீஸ் இருக்கின்றதோ அதுபோல மூன்று வட்டங்களுக்கு ஒரு ஆர்.டி.ஓ. அலுவலகத்தை சென்னையிலே நியமிக்க வேண்டும். என் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்திருக்கிறீர்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், திருவள்ளூர் கலெக்ட்ரேட் முறையாக அமைக்கப்பெறவில்லை. அந்தக் கலெக்டர் அம்மையாருக்கு இன்னும் முறையான பி.ஏ. மற்றும் அதிகாரிகள் தரப்படவில்லை. அவர் என்னிடத்திலே தகவல் சொன்னார்கள். ஆகவே, முறையாக அவர்களுக்கு அத்தனை வசதிகளும் செய்து தர வேண்டும்.

பிற்பகல் 12-15

அம்பத்தூரிலே வருவாய் வட்ட தாசில்தார் அலுவலகம் அமைத்திருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதே நேரத்திலே என்னுடைய தொகுதி மிகப் பெரிய தொகுதி. செங்குன்றம் (ரெட்ஹில்ஸ்) பகுதியிலே தாசில்தார் அலுவலகத்தை நீங்கள் திறக்க வேண்டும். காரணம், மோரை மற்றும் அதன் பக்கத்திலே இருக்கின்ற பல கிராமங்கள் 30 கிலோ மீட்டர், 40 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்றன. அவர்கள் அம்பத்தூருக்கு வந்து செல்வது கடுமையான ஒரு காரியம். செங்குன்றம் வரை நிறைய பேருந்துகள் இருக்கின்றன. ஆகவே, செங்குன்றத்திலே இன்னொரு வட்ட அலுவலகத்தை நீங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, தாசில்தார் அலுவலகங்களில் வழங்கக்கூடிய சர்ட்டிபிகேட், சால்வன்சி சர்ட்டிபிகேட்டில் ஒரு வீடு, ஒரு ஏக்கர் நிலம் வைத்திருந்தால் 15 இலட்சம் ரூபாய்க்கு சால்வன்சி சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்கள். இந்த நிலைகள் மாற வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்திலே பார்த்தீர்களானால் என்னுடைய அம்பத்தூர் முனிசிபாலிடி பகுதியிலே ஏறத்தாழ 250 பேர் சால்வன்சி சர்ட்டிபிகேட் பெற்றுக்கொண்டு கான்டிரக்டர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சால்வன்சி சர்ட்டிபிகேட்டுகளைப் பார்த்தபோது ஒவ்வொன்றும் 10 இலட்சம், 15 இலட்சம் என்று, இலட்சங்களுக்குக் குறைவேயில்லை. ஒன்றுமே இல்லாத, வசதி வாய்ப்பு இல்லாதவர்களுக்கு 10 இலட்சம், 15 இலட்சம் என்று போலியான, போகசான சால்வன்சி சர்ட்டிபிகேட்டுகள் தந்து அவர்கள் அந்தக்

காண்டிராக்ட்டுகளைப் பெற்றிருந்தார்கள். ஆகவே, சால்வன்சி சர்ட்டிபிகேட் கொடுக்கும்போது, முறையான ஆய்வு நடத்தி, அவர்கள் தகுதியானவர்களா என்று ஆய்வு நடத்தித் தர வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், வி.ஏ.ஓ.வைக் கடந்த ஆட்சிக் காலத்திலே நினைத்தால் மாற்றிவிடுவார்கள். அதுபோல ஒரு நிலையிருக்குமானால் வி.ஏ.ஓ. ஒரு ஏரியாவுக்கு வந்து, அந்த ஏரியாவை அனலைஸ் பண்ணி என்னென்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு 3 முதல் 6 மாத காலமாகிறது. ஆனால், 6 மாதத்தில் ஒரு வருடத்தில் மாற்றி விடுவதினால் அவர்களுடைய பணிகளைத் தொடர்ந்து பண்ணுவதற்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, குறைந்தபட்சம் 2 ஆண்டுகளாவது ஒரு இடத்திலே இருக்கக்கூடிய சூழ்நிலையை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, ரிட்டயர்மென்ட் பெனிபிட். பல அதிகாரிகள் வேலையிலிருந்து வீட்டுக்கு பணிமூப்பின் அடிப்படையிலே சென்றுவிட்டார்கள். என்னுடைய நண்பர் 1990-ஆம் ஆண்டு பணிமூப்பு அடைந்திருக்கிறார். இதுவரையிலே அவருக்கு வழங்கப்பட வேண்டிய வீட்டுமனைப் பட்டாக்களும், டாக்குமென்ட்டுகளும், இதர ஆவணங்களும் கொடுக்கப்படாத நிலையிருக்கிறது. அவருடைய அத்தனை கடன்களையும் பிடித்தாகிவிட்டது. ஒருவர் பணிமூப்பின் அடிப்படையிலே ரிட்டயர் ஆகிச் சென்ற பின்பு குறைந்தபட்சம் 60 நாட்களுக்குள் அவருக்குச் சேர வேண்டிய அத்தனையும் கிடைப்பதற்கு நீங்கள் தயவுசெய்து நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மிகப் பெரிய தொகுதி. அங்கே சாலைகள், கல்விச் சாலைகள், பராமரிப்பு, மின்சாரம், சத்துணவு, இதற்கெல்லாம் நிதியாதாரம் வேண்டும். அதுவும் வில்லிவாக்கம் தொகுதியிலே நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக நீர்ப்பிடிப்புகள் பகுதியிலே, கடந்த ஆட்சியிலே முக்கியப் பொறுப்பிலே இருந்தவர்கள், அப்பகுதிகளை பிளாட் போட்டு விற்றுவிட்டார்கள். நீர்ப்பிடிப்புகளே இல்லாத ஒரு சூழ்நிலையிருக்கிறது. செங்குன்றத்திலே இருக்கின்ற ரெட்ஹில்ஸ் ஏரியிலே ஒரு புளு கல் ஒன்றை நட்டிருக்கிறார்கள். அந்த புளு கல் என்பது தண்ணீர் இதுவரையிலேதான் தேங்கி நிற்கும், அதற்கு மேல் வராது என்ற ஒரு நிலை. ஆனால், அதற்கு மேலே ஒரு கிலோ மீட்டர் வரை





தண்ணீர் வந்தது. ஆகவே, இருந்த வீடுகள் இடிந்து விழுகின்ற நிலைமை ஏற்பட்டது. அங்கே கொடுத்த நிவாரணத் தொகை மிகக் குறைவாக இருந்தது. வருங்காலங்களிலே அந்த நிவாரணத் தொகையை ரூ.2 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் அளவிற்கு, ஒரு சுவர் இடிந்துவிழுந்தால் குறைந்தபட்சம் 2 ஆயிரம் ரூபாய் நீங்கள் தரக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பல ஆண்டுகளாக கிராமங்களிலே வாழ்கின்ற மக்கள் கிராம நத்தத்திலே வாழ்கின்றார்கள். ஆனால், இதுவரையிலே அவர்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை. ஆனால், அந்த நிலங்களை இன்னொருவருக்கு விற்கும்போது, பதிவுத் துறை அலுவலகங்களுக்குச் செல்கிறார்கள். அங்கே பட்டா மாற்றுவதற்காக ஒரு காகிதம் தருகிறார்கள். ஆனால், முறைப்படி மாற்றப்படுவதில்லை. ஏற்கெனவே, கடந்த ஆட்சிக் காலத்திலே அதிகாரிகளைப் போய்ப் பார்த்து அவர்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்தால்தான் பட்டா மாறுதல் தந்தார்களே, அதுபோன்ற சூழ்நிலை இப்போதும் இருக்குமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்க வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

போரூர் ராமதீஸ்வரர் கோவிலிலே 34 ஏக்கர் நிலம், 1969-லே 240 பேருக்கு குத்தகைக்கு விடப்பட்டது. அந்த 240 பேரும் சேர்ந்து ஏறத்தாழ 5 ஆயிரம் ரூபாய், குத்தகைக்கு அளித்தாலும்கூட, அவர்கள் அரசுக்குக் குத்தகைப் பணம் தருவதில்லை. இன்று ஒரு கிரவுண்ட் அங்கே 5 இலட்சம் ரூபாய் அளவிற்குப் போகிறது. அதே 240 பேருக்கு அந்த இடங்களை நீங்களை வீட்டுமனைப் பட்டாக்களாக வழங்கி, இன்று அரசு என்ன ரேட் போடுகிறார்களோ, அந்த ரேட்டுக்கு வழங்கினாலே அரசுக்கு நிறைய வருமானம் வரும். அந்தக் கோவிலுக்கு நிறைய வருமானம் வரும். ஆகவே, அதைச் செய்ய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

Ramavaram Neighbourhood Scheme—என்ற பெயரிலே ஏறத்தாழ 1,000 ஏக்கருக்கு மேற்பட்ட இடத்தைக் கையகப்படுத்தி, அங்கே சிறு வீட்டுமனைப்பட்டாக்களைத் தந்திருக்கிறீர்கள். அங்கேயும் அதே போன்ற பொல்யூஷன் ப்ராப்ளம் வருகிறது. அங்கே கையகப்படுத்தப்பட்ட இடங்கள் குறித்து, பலர் கோர்ட்டுவரை சென்று தடையாணை பெற்றிருக்கிறார்கள். காரணம், அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை

தரப்படவில்லை. இன்று என்ன விலை இருக்கின்றதோ, அந்த விலையை, ஒரு கமிட்டி அமைத்து நிர்ணயம் செய்து, அதன் மூலமாக 4 இலட்சம் ரூபாய் ஒரு கிரவுண்டின் விலை என்றால், அந்த 4 இலட்சம் ரூபாயைத் தந்தால்தான் அவர்கள் வழக்கு மன்றங்களுக்குச் செல்ல மாட்டார்களே தவிர, நீங்கள் 50,000 ரூபாயும், 25,000 ரூபாயும் கொடுத்தால் அவரவர்கள் ஸ்டே வாங்கிக் கொண்டுவிடுகிறார்கள். எனவே இந்த மாதிரியான ஒரு சூழ்நிலையைத் தவிர்க்க நம்முடைய அரசு உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

போரூர் ஏரியிலே பல நூறு ஏக்கர் நிலப்பகுதியை தெலுங்கு கங்கைத் திட்டத்திலே ஆழப்படுத்தப்போவதாக கதிரவன் பத்திரிகையிலே ஒரு பெரிய செய்தியே வந்தது. அந்த போரூர் ஏரித் திட்டத்தின் பல நூறு ஏக்கர் நிலங்களை கடந்த ஆட்சிக்காலத்திலே, இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த, பொறுப்பிலே இருந்தவர்களால் பிளாட் போட்டு விற்கப்பட்டுவிட்டது. அந்த ஆக்கிரமிப்புக்களை எல்லாம் அகற்றி முறைப்படி அங்கே தண்ணீரைத் தேக்கி வைக்கக்கூடிய சூழ்நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வருவாய்த் துறை அதிகாரிகள் அதற்கான நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வடார்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், நீலகண்டராயன்பேட்டைக் காலனியிலே அரசு ஊழியர்கள் 60 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஏறத்தாழ பல ஆண்டுகளாக வசித்து வருகின்றார்கள். அரசாணை எண் 960-ன் கீழ் 2.45 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு பட்டா வழங்க உத்தரவிடப்பட்டது. அங்கேயிருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகர் ஒருவர், அந்த ஆதிதிராவிட மக்களுக்கு நிலம் கிடைக்கக்கூடாது என்பதற்காக நீதிமன்றம் வரை சென்று ஸ்டே வாங்கி விட்டமையால், இன்னும் அந்த மக்கள் பட்டா பெற முடியாமலும், அங்கே வீட்டைக் கட்ட முடியாமலும் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு உரிய நல்ல நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, சேலம் மாவட்டத்தில், தலைவாசல் மற்றும் காட்டுக்கோட்டை ஆகிய இரண்டு ஊர்களையும் ஆத்தூர்



தாலுக்காவிலேயே தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையாகும். அதையும் நிறைவேற்ற வேண்டுகிறேன்.

பெரியார் மாவட்டத்தில், குறிப்பாக பவானி வட்டத்தில், மிக அதிகமான விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து தண்ணீர் தீர்வை, தண்டத் தீர்வை போடும்போது தண்ணீரை பைப் லைன் மூலமாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு போகும்போது, அரசு அதிகாரிகள் குறிப்பாக தாசில்தார்கள் 10,000 ரூபாய் 20,000 ரூபாய் என்று பைன் போடுகிறார்கள். அதையும் தடுக்கிற நல்ல முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, தாசில்தார்கள், ஆர்.ஐ.-க்கள், வி.ஏ.ஒ-க்கள் குறைந்தபட்சம் இரண்டு வருடங்களாவது ஒரு இடத்திலேயே இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும். என்னுடைய அம்பத்தூர் பகுதியிலே நிறைய நிர்வாகப் பிரச்சினைகள் இருக்கின்றன. திருவள்ளூர் கலெக்ட்ரேட் புதிதாக ஆரம்பித்திருக்கிறீர்கள். அதனுடைய தொடர்ச்சியாக, நிச்சயமாக மீண்டும் செங்குன்றத்தில் தாசில்தார் அலுவலகம் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், புறம்போக்கு நிலங்களை நிறைய அங்கே ஆக்கிரமிப்பு செய்கின்றார்கள். ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஒரு செண்ட், இரண்டு செண்ட் நிலம் தாருங்கள், உண்மையிலேயே அவன் நிலமில்லாதவனாக இருந்தால், அவனுக்கு 4 செண்ட், 5 செண்ட் தேவையில்லை, இரண்டு செண்ட் கொடுத்தால் போதும். நான்கூட, கோயம்பேடுப் பகுதியிலே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடன் சென்றபோது, அங்கே இருக்கிற 300 குடிசைவாசிகளுக்காக நான் ரெப்ரசண்ட் பண்ணியபோது, அமைச்சர், “என்ன ஆரூண், ஒரு கிரவுண்ட் வேண்டுமா?” என்றார். நான் ஒரு கிரவுண்ட் வேண்டாம், ஒரு கிரவுண்ட் என்றால், அது போகஸ் ஆகப்போய்விடும், ஒரு செண்ட் போதும், 22-க்கு 20 கொடுங்கள் போதும் என்றேன். காரணம் முறையான ஆட்களுக்கு நிச்சயமாகப் போய் சேரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. செங்குன்றம் பகுதியிலே மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களை வைத்து, இரண்டு வாரங்களுக்கு முன்பு 670 பட்டாக்களை வழங்கினோம். மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பு ஆயிரம் பட்டாக்களை வழங்கினோம். மக்கள் இந்த அரசினிடத்திலே பெரிதும் எதிர்பார்க்கின்றார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்திலே நிறைய ஏழைகள் பயன்பெறுவார்கள். இரத்தினச்

சுருக்கமான பதிலைச் சொல்கின்ற மாண்புமிகு அமைச்சர் நாஞ்சிலார் அவர்களுடைய கருணைப் பார்வையிலே இவைகள் எல்லாம் வரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு, வாய்ப்பினைத் தந்ததற்காக நன்றி கூறி, உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. ஆவுடையப்பன்):** திரு. நெல்லிக்குப்பம் அ. மணி.

**திரு. நெல்லிக்குப்பம் அ. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மற்றும் வருவாய் நிர்வாகம், மக்களின் துயர்துடைப்புப் பணி ஆகிய பணிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரியிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்கும் இந்த நேரத்தில், தமிழகம் என்ற ஆட்சிக்குடும்பத்தில் வருவாயை ஈட்டுகின்ற பிள்ளையாக விளங்குகின்ற நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு வீட்டில் எப்படி சம்பாதிக்கின்ற பிள்ளையை செல்லப் பிள்ளையாக நடத்துகின்றார்களோ, அப்படி செல்லப் பிள்ளையாக விளங்கும் நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கேட்கும்போதெல்லாம் "கேட்டதைவிட அதிகமாகக் கொடுப்பதற்கு இந்த அரசு என்றும் தாய் தயாராக இருக்கிறது, நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம், 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற சொல்லுக்கேற்ப, "நீங்கள் கேளுங்கள்" என்று விளக்குவார். எனவே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வருவாய்த்துறையில் இடையில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. அப்பொழுது முன்பு எங்களுடைய மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக இருந்த திரு. கெய்வார் அவர்கள் அந்த போர்டினுடைய முதல் தலைவராக விளங்கினார் என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். அப்படி ரெவின்யூ போர்டாக இருந்ததை மாற்றி, பல மாற்றங்களை, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்திலும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் நாம் கண்டிருக்கிறோம். இன்று இந்தத் துறையோடு பல துறைகளை இணைத்து, 'வருவாய்த்துறை' என்று பெயர் வைத்து பல மாற்றங்களை நம்முடைய தலைவர் அவர்கள் கண்டிருக்கிறார்கள்.





இயற்கையின் சீற்றங்கள் பற்றி நினைக்கின்றபோது, என்னுடைய தென்னார்க்காடு மாவட்டத்தில் பெரிய புயலாலும், வெள்ளத்தாலும் மக்கள் பெரிதும் துயரப்பட்டதை நாமெல்லாம் கண்டிருக்கிறோம். அந்தத் துயர் துடைப்புப் பணியைப் போக்குவதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரவு பகல் பாராமல், கண்ணுறங்காமல், அந்த மாவட்டத்தினுடைய மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த்துறை அதிகாரிகள் போன்றவர்களையெல்லாம் உடனடியாகத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அந்த மாவட்டத்தில் இருக்கின்ற மக்களைக் காப்பாற்றுகின்ற வகையில் பல திட்டங்களைத் தீட்டித் தந்தார்கள். அந்த வகையில், புயல்-வெள்ள நிவாரணப் பணிகளை முடுக்கிவிட, நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மூலமாக அங்கே கூட்டங்களை நடத்தி, அங்கிருக்கிற அதிகாரிகளையெல்லாம் அழைத்து துயர் துடைப்புப் பணியை சிறப்பான முறையில் நடத்திட ஏற்பாடு செய்தார்கள். நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், அங்கு மக்கள், வெள்ளப் பெருக்கில் மிகவும் பாதிக்கப்பட்டிருந்ததைக் கண்டு, அவர்களைக் காப்பாற்றும் வகையில், அமைச்சர் அவர்களே கட்டுமரத்தில் சென்று அந்தப் பகுதி மக்களுக்கு உணவுப் பொருட்களை அளித்து அவர்களுடைய பசிப்பிணியைப் போக்கினார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வகையிலே எங்களுடைய மாவட்டம் நம்முடைய தலைவர் அவர்களின் பின்னால் என்றென்றும் செயல்படும் என்பதை யாரும் மறுத்துக் கூற முடியாது.

சேலம் மாவட்டத்திலிருந்தும், தர்மபுரி மாவட்டத்திலிருந்தும், மலைப்பகுதியிலிருந்து பெருக்கெடுத்து வரும் நீர் எங்கள் பகுதியில் ஓடுகின்ற, தென்னார்க்காடு மாவட்டத்தின் ஆறுகளான, கெடிலம், பெண்ணையாறு, மணிமுத்தா நதி, மற்றும் சங்கராபரணி ஆகிய ஆறுகளில் வந்து சேர்ந்து அந்தப் பகுதி வழியாகக் கடலில் கலக்கின்றது. இதனால் ஏற்படும் சீற்றத்தினால், மக்களைப் பாதிக்கின்ற துன்பங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. நெல்லிக்குப்பம் அ. மணி] [1997 மார்ச் 21

அடுத்து, எங்களுடைய தொகுதியில் பெண்ணையாற்றின் சீற்றம் அங்கிருக்கிற மக்களை மிக மிகப் பாழ்படுத்திவிடுகிறது. அதைப் போலவே, பெண்ணையாற்றின் சீற்றத்தினால் விழுப்புரம் பகுதியாகிய நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியும், பக்கத்தில் இருக்கிற நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அழகுவேலு அவர்கள் தொகுதியும், எங்களுடைய கடலூர் தொகுதியும் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகள் கரையோரம் அமைந்த தொகுதிகளாக இருக்கின்றன.

எனவே, அடிக்கடி ஏற்படுகின்ற இந்த வெள்ளச் சீற்றத்தினால் நாங்கள் மிகவும் தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதனால், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக, சென்னை-திருச்சி சாலைக்குப் பக்கத்திலே இருக்கின்ற பெண்ணையாற்றில், கீழ்ப்புறத்திலேயுள்ள அந்தப் பாலத்திலேயிருந்து அல்லிப்பட்டு வரையில், 12 கிலோமீட்டர் தூரத்திற்கு கரையை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12·30

அதேபோல, நெல்லிக்குப்பத்திற்கு அருகில், சென்னை-திருச்சி சாலையில் அமைந்திருக்கின்ற பாலத்திலிருந்து கிருஷ்ணாபுரம் வரைக்கும் கரையைக் கட்டித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, வெள்ளப் பெருக்கினால் நிலங்களில் மண் மேடிட்டு இருக்கின்றது. அந்த மண் மேடுகளையெல்லாம் போக்க வேண்டும். மலட்டாற்றுக்கருகில் மண் மேடிட்டிருக்கின்ற காரணத்தினால், தண்ணீர் ஊற்றுகள் அடைபட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக, அங்குள்ள விவசாயிகளுடைய கோரிக்கையினை நிறைவேற்றித் தரும் வகையில் அங்குள்ள மண் மேடுகளை நீக்கித்தர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் எங்களுடைய மாவட்டத்திற்கு ஒரு குடிநீர்த் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அது



1997 மார்ச் 21] [திரு. நெல்லிக்குப்பம் அ. மணி]

என்னவென்றால், நெய்வேலியில் அமைந்துள்ள சுரங்கத்தில் நிலக்கரி வெட்டி எடுக்கப்படும் பொழுது, பெருமளவு தண்ணீர் வெளியே இறைக்கப்படுகின்றது. அதனால், எங்கள் பகுதிகளில், தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள குடிநீர் ஊற்றுகளெல்லாம் வறண்டு, குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீர் மட்டம் 600 அடி, 700 அடி ஆழத்திற்குச் சென்றுவிட்டது. இந்த நிலையை மாற்றுவதற்காக, நம்முடைய முதல்வர் அவர்கள், வீராணம் குடிநீர்த் திட்டம் என்று உருவாக்கி, அதற்கு 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அந்தத் திட்டத்தைச் சிறப்பாகத் தந்திருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய மாவட்ட மக்களின் சார்பாக நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, இந்த அளவிற்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. ஆவுடையப்பன்):** அடுத்து, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

“ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை”

என்பது வள்ளுவம். அந்த அடிப்படையிலே இன்றைக்கு மிக இன்றியமையாத துறைக்கு மிகச் சிறப்பானதொரு அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய நில நிர்வாக அமைப்பு முறையானது, தொன்று தொட்டு, வளம் பெறும் சிறப்பு மிக்க துறை என்பதை நாம் வரலாற்றிலேயிருந்து அறிகிறோம். இராஜராஜ சோழன் காலமான 1001-ஆம் ஆண்டிலிருந்து, இந்த நில அளவை முறையானது இருந்து வருகிறது. இது மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலேயும் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. ஆகவே, இது ஒரு பழமையான துறையாக, நம்முடைய நாட்டிலே பழக்கத்திலேயிருந்து வருகின்ற ஒரு துறையாக இருந்து வருகின்றது.

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1997 மார்ச் 21

இன்னும் சொல்லப்போனால், இந்த நில அளவை செய்கின்ற முறைகளைப் பார்க்கின்றபோது, இமயத்தின் உச்சியை எட்டிய டென்சிங் அவர்கள், எவரெஸ்ட் என்கிற பெயரை வைக்கின்ற போது, நில அளவருடைய பெயரைத்தான், எவரெஸ்ட் என்ற நில அளவருடைய பெயரைத்தான், இமய மலையினுடைய உச்சிப் பகுதிக்கு வைத்தார்கள் என்பதையும் நாம் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்க வேண்டும்.

சங்க காலத்திலேகூட, பாணர்கள் இருந்ததைப்போல் அளவர்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் செப்புகிறது. இன்னும் கூடச் சொல்லப் போனால், வாமன அவதாரம் எடுத்ததாகச் சொல்லப்படுகின்ற புராணகாலத்திலேகூட நிலத்தையும், வானத்தையும் அளந்ததாகச் சொல்லப்படுகின்ற செய்திகளை நாம் பார்க்கின்றோம். ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற நில அளவை முறைகளையும், வருவாய்த் துறை முறைகளையும், ஆங்கிலேயர்களுடைய ஆட்சிக் காலத்தில் நமக்கு ஆவணங்களாக வழங்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையையும் நாம் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்கு இருக்கிற நில அளவை ஆவண முறைகளிலே, குறிப்பாக நாயர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும், நம்பூதிரிகளாக இருக்கக்கூடியவர்களும் வழங்கிய அந்த மூலப் பதிவேடுகள்தான், இன்றைக்குப் பலபேருக்கும் மூல ஆவணங்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதையும் நாம் இந்த நேரத்திலே நன்றியோடு நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 12-35

இந்த சிறப்பு வாய்ந்த மானியக் கோரிக்கையிலே, நாங்கள் அரசாங்கத்திற்குச் சில கோரிக்கைகளை, சில செய்திகளை முன்வைக்க விரும்புகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் இவை பலமுறை கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. நிலங்களினுடைய பரப்பளவை 10 வகையான முறைகளிலே கையாள்கிறோம்; கண்டு அறிகிறோம். ஆசிரியர் பயிற்சிக்கேகூட தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்படுகிறபோது, இந்த நில அளவை செய்யக்கூடிய முறைகளுக்கும் ஒரு தொழில்நுட்ப துறையைப் போல இதனைக் கருதி, இதற்கும் அங்கீகாரம் வழங்கிடல் வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வேண்டுகோளாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



1997 மார்ச் 21] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

அதேபோல, நில அளவைத் துறையிலே 13 ஆண்டுகளாக, தொகுப்பூதியம் பெற்றுக்கொண்டிருக்கிற பணியாளர்கள், பிற துறைகளிலே, காலிப் பணியிடங்களுக்கு நிரப்பப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்ததனுடைய விளைவாக, சுமார் 650 பேர்கள் இன்றைக்குப் பிற துறைகளிலே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு மறுபடியும் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகளிலே, தட்டச்சுப் பயில வேண்டுமென்று சொல்லி, அவர்களுக்கு ஒரு நிபந்தனையை விதித்தார்கள். அந்த 650 பேர்களிலே, பல பேர்களுக்கு 40 அல்லது 50 வயதுகள் எல்லாம்கூட ஆகிவிட்டன. இந்தச் சூழ்நிலையிலே, அந்த நிபந்தனை, அதாவது தட்டச்சுப் பயிலவேண்டும் என்று சொல்லக்கூடிய அந்த நிபந்தனையானது, அவர்களுக்குப் பெரிதும் இடர்ப்பாடாக இருக்கிறது என்பதை, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்த இடர்ப்பாட்டை, நிபந்தனையை நீக்கி, அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதேபோன்று, இன்றைக்கு வருவாய்த் துறையிலே நில அளவைத் துறையானது இணைக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே— இது குறிப்பாக ஒரு தனித் துறையாகவே செயல்பட வேண்டும்; அப்போதுதான் பல பிரச்சினைகள், நிலம் வைத்திருப்பவர்கள், பொதுமக்களுக்கான பல பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வு ஏற்படமுடியும். இது ஒரு தாய் அமைப்பாக இருக்கக்கூடிய ஒரு துறை. இந்தத் துறையிலே இருந்துதான் பல துறைகள் பிரிந்திருப்பதாக நாம் அறிகிறோம். அப்படி இருக்கிறபோது, இன்றைக்கு நில அளவை என்று சொல்லக்கூடிய அந்தத் துறையைத் தனித் துறையாக, வருவாய்த் துறையிலிருந்து பிரித்து, அப்படி அது தனித் துறையாக இயங்குமானால், மிகச் சிறப்பாக இருக்கும். அதற்கு முதற்கட்டமாக, ஒரு வட்டத்திற்கு ஒரு தனி நில அளவை ஆய்வாளர் அலுவலகமாவது தொடங்கப்பெற, அரசு ஆவன செய்திடல் வேண்டும். இன்றைக்கு, நில வருவாய்த் துறை அதிகாரிகள், வெள்ள நிவாரணம், வறட்சி நிவாரணம் போன்றவற்றை வழங்குவது அல்லது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு செய்வது, இப்படிப்பட்ட பல்வேறு பணிகளுக்கு ஈடுபடுத்தப்படுகிற காரணத்தினாலே, அவர்களாலே, இந்த நில அளவை முறைகளைச் சரிவர செய்ய முடியவில்லை என்கிற ஒரு குறைபாடு இருக்கிறது. ஆகவே, ஒரு வட்டத்திற்கு ஒரு தனி நில அளவை

ஆய்வாளர் அலுவலகத்தை அரசு தொடங்கி, பொதுமக்களுக்கும், அதே நேரத்தில் நிலம் வைத்திருப்பவர்களுக்கும் ஒரு வசதிவாய்ப்பினைச் செய்து தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, இந்த நிலப் பிரச்சினை தொடர்பான வழக்குகள் வருகிறபோது, உடனடியாகத் தீர்வு காண முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மனைநில பராமரிப்பு குறுவட்ட நில அலுவலர் என்ற அளவில் கூடுதலாக ஒரு வட்ட வரைஞரையும், தற்போதுள்ள நில அளவர்களையும் கொண்ட, வரைவாளர்களையும் கொண்டு, வட்டத்திற்கு 3 முதல் 5 அதிகாரிகள் இருக்கிறமாதிரி, அந்த முறைகளை மாற்றித் தரவேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல், முன்பெல்லாம் பட்டா பதிவேட்டுத் திட்டம் என்ற ஒரு முறை கொண்டு வரப்பட்டது. அது 50 வட்டங்களிலே மட்டும் அமலாக்கப்படும் என்று சொல்லப்பட்டு, அது அரைகுறையாகவே முடிந்தது. பிற மாவட்டங்களிலே இந்தப் பணியானது தொடங்கப் பெறவில்லை. எனவே, மீண்டும் அந்தப் பணியை நில அளவைப் பதிவேடுகள் துறையிலே ஒப்படைக்கவும் அதற்குத் தேவையான பணியிடங்களை நிரப்பி அந்தப் பணியை அனைத்துப் பகுதிகளுக்கும் நிறைவேற்றித் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்திடல் வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பிறந்த ஊர் திருக்குவளை; அந்தக் திருக்குவளையிலிருந்து ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. இந்தக் கோரிக்கையானது, ஒரு நியாயமான கோரிக்கை என்பதையும் நான் இந்த நேரத்திலே இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு, ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டமானது பிரிக்கப்பட்டதன் காரணமாக, நாகை காயிதே மில்லத் மாவட்டத்திலேயுள்ள தலைஞாயிறு ஒன்றியமானது, வேதாரண்யம் தாலுகாவிலே இணைக்கப்பட்டதால், சுமார் 15 பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த 40 கிராமங்களிலுள்ள மக்கள், வேதாரண்யம் செல்ல, 50 அல்லது 60 கிலோ மீட்டர் தூரத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது.





இதனாலே பல இடர்பாடுகள் உள்ளன. மேலும், பள்ளி மாணவ, மாணவிகள் சான்றிதழ் வாங்க முடியாத ஒரு சூழ்நிலையெல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. இந்த தலைஞாயிறு ஒன்றியம் மட்டுமல்லாமல், கீழையூர் ஒன்றியமும், அதேபோல், நாகப்பட்டினம் வருவாய் வட்டத்திலே இருந்ததை, கீவளூர் வருவாய் வட்டத்திலே இணைத்தால், சுமார் 24 பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த பொதுமக்கள் அந்தத் தாலுக்கா செல்ல வேண்டுமானால், அவர்களுடைய மாவட்டத் தலைநகரான நாகப்பட்டினத்தைத் தாண்டி, கீவளூர் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே அந்த 2 ஒன்றிய மக்களுடைய நல்வாழ்வையும் அவர்களுடைய பிரச்சினையையும் கருத்திலே கொண்டு தலைஞாயிறு ஒன்றியத்தையும், கீவளூர் ஒன்றியத்தையும் இணைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய பிறந்த ஊராக திருக்குவளை இருக்கின்ற காரணத்தினால் அந்தத் திருக்குவளையைத் தனி வட்டமாக அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்திடல் வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அதேபோல கடந்த 17-ஆம் தேதி எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்த மாநில பொறுப்பாளர் திரு. பழனிசாமி அவர்களும், சிவகாமி வின்சென்ட் அவர்களும் ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். 7 ஆண்டு காலமாக அந்தப் பிரச்சினைக்காக அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், ஆவடி, பருத்திப்பட்டு கிராமத்திலே உரிக்கார நாயக்கர் சமுதாய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. அதாவது அந்த வருவாய்த் துறை அதிகாரிகளுடைய முன்னிலையிலே 13-7-90 அன்று ஒரு சமாதானக் கூட்டம் நடத்தப்பட்டு அதன் மூலமாக அந்தத் தீர்வு காணப்பட்டு ஏறத்தாழ 53 பேர்களுக்கு 1 ஏக்கர் 20 சென்ட் நிலமானது ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இதிலே 41 பேர்களுக்கு மட்டுமே நிலம் வழங்கப்பட்டு, மீதமுள்ள 12 பேர்களுக்கு இன்றைய வரையிலே அந்த இடமானது ஒதுக்கப்படவில்லை. ஆனால் இடம் காலியாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது என்னவென்று சொன்னால் உரிக்கார நாயக்கர் சமுதாயமானது அந்தப் பகுதியிலே சான்றிதழ்களைப் பெறுவதற்குக்கூட

பல சங்கடங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக நான் இந்த நேரத்திலே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னால் உரிக்காரநாயக்கர் சமுதாய மக்கள் அந்தச் சான்றிதழ் பெறவேண்டுமென்று சொன்னால் அவர்கள் மலைவாழ் இனத்தினுடைய பட்டியலிலே வருகிற காரணத்தினாலே கோட்டாட்சியரிடம் அனுமதி பெற வேண்டிய நிலை இருக்கிறது. அப்படி இருப்பதால் அந்தக் கோட்டாட்சியர் அவ்வளவு எளிதில் அந்தச் சான்றிதழ்களை வழங்கிவிடுவதில்லை. இதனாலே கடந்த ஆண்டு ஆவடிப் பகுதியிலே ஒரு பிரச்சினை வந்தது. மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தும் உரிய நேரத்திலே கோட்டாட்சியர் அந்தச் சான்றிதழ் வழங்காத காரணத்தினாலே அந்த மருத்துவக் கல்லூரியிலே கவிதா என்ற அந்த மாணவி சேரமுடியாத ஒரு சூழ்நிலை இருந்ததை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்த மாணவிக்கு உரிய நேரத்திலே அந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்குமேயானால் அந்த மருத்துவக் கல்லூரியிலே அந்த மாணவி சேர்ந்து பயில ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். பொதுவாக போலிச் சான்றிதழை யாரும் பெற்றுவிடக்கூடாது என்பதிலே அரசாங்கம் கருத்தாக இருக்க வேண்டும் என்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதேநேரத்திலே அந்த உரிக்காரநாயக்கர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் போய், சான்றிதழ் கேட்டால், உன்னைப் பார்த்தால் அந்த மலைவாழ் இனத்தின் சாதிமாதிரி தெரியவில்லை என்றெல்லாம் பேசுகிறார்கள். நான் உதாரணத்திற்காகக் கேட்கிறேன். இன்றைக்கு எஸ்.டி. என்று சொல்லக்கூடிய அந்த மலைவாழ் இனத்தினுடைய பிரிவிலிருந்துகூட பல அதிகாரிகள், உயர் அதிகாரிகளாக, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வருகிறார்கள். அப்படி வரக்கூடிய அந்த அதிகாரிகள் அவர்களுடைய பதவிக்கேற்ப அவர்களுடைய நடை, உடை, பாவனைகளை மாற்றிக்கொள்கிறார்கள். அவர்கள் மலைவாழ் இனத்தவர்கள் என்பதால் பழங்குடி மக்களைப் போல இலைகளையும், தழைகளையும் அணிந்து கொண்டிருக்க வேண்டும் என்று யாரும் வற்புறுத்தவதில்லை. அதைப்போல இந்த உரிக்காரநாயக்கர் சமுதாய மக்கள் பிற சமுதாய மக்களோடு கலந்து வாழ்கிற நாகரீகச் சூழ்நிலையில் இருக்கிறபோது அவர்களை ஏதோ தோற்றத்தில் இப்படி இருக்க வேண்டும், அப்படி இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டு அதிகாரிகளாக இருக்கக்கூடியவர்கள் அவர்களை மிகக் கொடுமையாக இழுத்தடிக்கிறார்கள், சான்றிதழ்கள் வழங்குவதில்லை. அதனால் இந்த உரிக்காரநாயக்கர் சமுதாயமானது பல பாதிப்புகளைச் சந்தித்துக்



கொண்டு வருகிறது. ஒதுக்கப்பட்ட நிலம்கூட அவர்களுக்கு வீடுகட்ட வழங்கப்படாமல் இன்றைக்கு 12 பேர்கள் வீதியிலே வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். வருவாய்த் துறை அலுவலகத்தின் முன்னாலே அந்தப் போராட்டதை அவர்கள் நடத்தினார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தச் சாதிச் சான்றிதழ் பெறுவதிலே அந்த உரிக்காரநாயக்கர் மக்களுக்கு உள்ள சிக்கலை தீர்த்து வைக்க வேண்டும் என்றும், அதே நேரத்திலே ஆவடிப் பகுதியிலே பருத்திப்பட்டு கிராமத்திலே இருக்கும் உரிக்காரநாயக்கர் சமுதாய மக்களில் இன்னும் வழங்கப்படாமல் உள்ள அந்த 12 பேர்களுக்கும் இடம் ஒதுக்கித் தந்திடல் வேண்டுமென்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு 1982-லேயிருந்து நியமனம் செய்யப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் பலர் பதவி உயர்வு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையைப் பரிசிலித்து அவர்களை பிற துறைகளிலோ அல்லது வருவாய்த் துறையிலோ பதவி உயர்வு தந்து பயன்படுத்திக்கொள்வதற்கு ஆவன செய்ய முன்வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான ஆண்டிமடத்தில் செந்துறை வட்டத்திலே நக்கம்பாடி மற்றும் நின்னியூர் கிராம மக்கள் ஜாகாவாரி புறம்போக்கு நிலத்திலே 27 வருடங்களாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு இதுவரையிலே பட்டா வழங்கப்படவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் தமிழகத்திலே பல இடங்களில் இருக்கின்றன. குறிப்பாக நகரப் பகுதியிலே உள்ள புறம்போக்கு பகுதியிலே வீடு கட்டிக் கொண்டிருப்பவர்கள் மின்இணைப்பு பெறுவது போன்றவற்றில் பல சங்கடங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி இந்த அவையிலே பலமுறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே நகர்ப் பகுதியிலே இருக்கக்கூடிய அந்த மக்களுக்கும், புறம்போக்கு பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கும் பட்டா வழங்கப்படுமானால், மின் இணைப்பையோ அல்லது மற்ற வசதிகளையோ அவர்கள் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையைப் பரிசிலிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1997 மார்ச் 21
பிற்பகல் 12-45

ஆண்டிமடம் தொகுதியில் உள்ள தவாகம், ஐயூர், அழகாபுரம், மருதூர், மாத்தூர் ஆகிய ஊர்களிலே இருக்கக் கூடிய கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு அலுவலகம் இல்லாமல் அவர்களுடைய பணிகளில் பல தடைகள் ஏற்பட்டுள்ளன. அவற்றையும் அரசு கவனத்தில்கொண்டு ஆவன செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆட்சி, தாழ்த்தப்பட்ட மலைவாழின மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பாதுகாவல் அரணாக இருக்கக்கூடிய ஆட்சியாக இருக்கின்ற காரணத்தாலே, என்னுடைய தொகுதியிலே — இன்றைக்கு, இவ்வளவு காலத்திற்குப் பின்னாலே இருக்கின்ற நிலையை நான் உதாரணத்திற்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள இடையக்குறிச்சி, திராவிடநல்லூர், மின்னலூர் ஆகிய கிராமங்களில் இருளர் பழங்குடியின மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதிகாரிகளிடமும், என்னிடமும் பலமுறை மனு கொடுத்துவிட்டார்கள். எனக்கு முன்னால் இருந்த சட்டமன்ற உறுப்பினரிடமும் மனு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் அவர்களுடைய கோரிக்கை நிறைவேறவில்லை. வீட்டு மனை பட்டா கிடைக்காமல் அவர்கள் வருத்தப்பட்டுக்கொண்டும், வேதனைப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். எனவே, இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து உதவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே அடிக்கடி வெள்ளாற்றில் வெள்ளம் வருகிறபோது மிகக் கொடுமையான பாதிப்பு ஏற்படுகிறது. ஏறத்தாழ பல ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, செந்துறை ஒன்றியம், சன்னியாசி நல்லூர், அங்கனூர், முல்லையூர் ஆகிய பகுதிகளில் வெள்ளாற்றின் கரையிலே வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்துக் கொடுத்தால் பல ஆயிரம் ஏக்கர் நிலங்களில் விளையும் பயிர்கள் பாதுகாக்கப்படும் என்ற காரணத்தாலே அதைச் செய்துதர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்தச் செய்தியை இந்த நேரத்தில் கொண்டுவருகிறேன்.(மணியடிக்கப்பெற்றது)

இன்றைக்கு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியின் கீழ் இருக்கக்கூடிய துறைகளிலே மிகச் சிறப்பு வாய்ந்த தாய்த்துறையாக இருக்கும் இந்த வருவாய்த் துறையின் அமைச்சராக



1997 மார்ச் 21] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]
இருக்கக்கூடிய மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் நான் எடுத்து வைத்திருக்கின்ற கோரிக்கைகளில் மிக முக்கியமானதாக இருக்கக்கூடிய திருக்குவளை பகுதியைத் தனி வட்டமாக, தலைஞாயிறு ஒன்றியத்தையும் இன்னொரு ஒன்றியத்தையும் இணைத்து ஒரு தனி வட்டமாக நீங்கள் அறிவித்தால் நலமாக இருக்கும் என்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

## 5. பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை

### சென்னை பொது மருத்துவமனை இருதய சிகிச்சைப் பிரிவுக்கு 'கேத் லாப்' வாங்கவிருப்பதில் கையாளவிருக்கும் நடைமுறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டப்பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை சட்டப்பேரவைக்கு அளித்திட அனுமதி வேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையை அவைக்கு அளிக்கின்றேன். இதய சிகிச்சைக்காக 'கேத் லாப்' வாங்குவதில் தவறு நிகழ்ந்துள்ளது என திரு. சுந்தரம் அவர்கள் நேற்று சட்டசபையில் பேசினார். சென்னை பொது மருத்துவமனையில் உள்ள 'கேத் லாப்' பழுதடைந்து போனதன் காரணமாக, புதிய 'கேத் லாப்' ஒன்றை வாங்க இந்த அரசு உத்தரவிட்டது. அதற்கான திறந்த ஒப்பந்தப் புள்ளிகள் 'ஓப்பன் டெண்டர்கள்' கோரப்பட்டு அவற்றைப் பரிசீலனை செய்ய சென்னை பொது மருத்துவமனை முதல்வர் தலைமையில் ஒரு வல்லுனர் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் மிகச் சிறந்த நேர்மையான கார்டியாலஜிஸ்ட்டும், ரேடியாலஜிஸ்ட்டும் உறுப்பினர்களாக இருக்கின்றனர். நிதித்துறையின் கூடுதல் செயலாளரும், மக்கள் நல்வாழ்வுத் துறையின் கூடுதல் செயலாளரும் இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர். இவர்கள் ஒப்பந்தப் புள்ளிகளைப் பெற்று நிறுவனங்களுடைய டெண்டர்களை ஆராய்ந்து 'பிலிப்ஸ்' நிறுவனம் வழங்கும் 'கேத் லாப்' ஆனது மிகவும் நவீனமானதும், தரமானதும் தகுதி பெற்ற ஒப்பந்தங்களில் விலை குறைவானதுமாகும் என்று இக்குழு அரசிற்குப் பரிந்துரை செய்தது. பிலிப்ஸ் நிறுவனம் முதலில் டெண்டர் போட்ட 422 கோடி ரூபாய் என்பதை, மீண்டும் இவர்களோடு

[ திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 மார்ச் 21

பேச்சுவார்த்தை நடத்தியபோது 3.26 கோடி ரூபாய்க்குக் கொடுக்க ஒத்துக்கொண்டார்கள். இந்தக் குழு இதுகுறித்து ஒரு அறிக்கையை அனுப்பியுள்ளது. இதனை அரசு பரிசீலனை செய்து வருகிறது. இதுவரை இன்னும் இறுதி முடிவுகளைப் பிறப்பிக்கவில்லை.

இந்தப் பிலிப்ஸ் நிறுவனத்திடமிருந்து புது டெல்லியிலுள்ள ஆல் இந்தியா மெடிக்கல் இன்ஸ்ட்டிட்யூட் வாங்கிய 'கேத் லாப்' வை விட, 25 இலட்ச ரூபாய் கூடுதலாகக் தந்து தமிழக அரசு வாங்குவதாகப் புகார் கூறப்பட்டது. இது உண்மையல்ல.

ஆல் இந்தியா இன்ஸ்ட்டியூட்டுடன் தொடர்பு கொண்டு—அவர்கள் வாங்கிய கேத் லாப்பிற்குக் கொடுத்த தொகையுடன் ஒப்பிடும்போது—நாம் கூடுதலாக 17 உபகரணங்களைக் கேட்டிருக்கிறோம். ஆல் இண்டியா இன்ஸ்டிடியூட்டிற்கு பிலிப்ஸ் நிறுவனம் ஐந்தாண்டுகளுக்கு பராமரிப்பதற்கு ஒத்துக்கொண்டுள்ளது. அதற்கு மாறாக சென்னை பொது மருத்துவமனைக்கு வாங்கும் கேத் லாப்பிற்கு நான்காண்டுகளுக்குப் பராமரிப்பதற்கு ஒத்துக் கொண்டுள்ளது. இருந்தாலும் அரசு முடிவெடுக்கும்போது, ஆல் இண்டியா இன்ஸ்ட்டிடியூட்டிற்கு, எத்தனை ஆண்டுகளுக்கு பராமரிப்புக்காக ஒப்புதல் தந்துள்ளார்களோ, அதைப் போலவே சென்னை பொது மருத்துவமனைக்கும் தர வேண்டுமென இந்த அரசு அந்த நிறுவனத்திடம் வலியுறுத்தும்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் குறிப்பிட்ட இந்தப் பிரச்சினையில் பிலிப்ஸ் கம்பெனி தான் மிகக் குறைந்த தொகைக்கு டெண்டர் கேட்டது என்ற போதிலும், அதைவிட அடுத்து அதிகமாக டெண்டர் கேட்ட கம்பெனி 4 கோடியே 43 லட்சத்து 16 ஆயிரத்து 950 ரூபாய்க்கு விண்ணப்பித்திருந்தது. பிலிப்ஸ் கம்பெனி 4 கோடியே 22 லட்சத்து 74 ஆயிரத்து 796 ரூபாய்க்கு டெண்டர் கோரியிருந்தது. எப்போதும் அரசு மிகக் குறைந்த டெண்டர் கேட்டவரிடம்தான் முறைப்படி அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவது வழக்கம். இந்த வகையில் பிலிப்ஸ் கம்பெனியோடு பேச்சுவார்த்தை நடத்தி 4.22 கோடி ரூபாயிலிருந்து 3.26 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் பெற்றுள்ளது. இதனால் சென்னை பொது மருத்துவமனைக்கு ஆல் இந்தியா இன்ஸ்ட்டிட்யூட்டிற்கு அளித்த விலையை விட 51 இலட்சம் ரூபாய் குறைவாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் பராமரிப்பு குறித்து



1997 மார்ச் 21] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நாம் விதித்துள்ள நிபந்தனைக்கு பிலிப்ஸ் நிறுவனம் ஒப்புதல் தந்தால் தான் இதுகுறித்து இந்த அரசு முடிவெடுக்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் குறிப்பிட்டதைப்போல் இந்த ஆட்சியில் கேத் லாப் வாங்குவதில் எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் வணக்கம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு கிடையாது, உட்காருங்கள் என்றால் உட்காருங்கள்.

## மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 1 - நில வருவாய்த் துறை—தொடர்ச்சி**

**(ஆ) கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு—தொடர்ச்சி**

**(இ) கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—தொடர்ச்சி**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெங்கடசாமி அவர்களை முன்பே அழைத்தபோது, அவர் இருக்கையில் இல்லை. இப்போது இருப்பதால், திரு. வெங்கடசாமி அவர்களை அழைக்கிறேன். இனிமேல் பெயரைக் கொடுத்துவிட்டு வெளியே போகக்கூடாது. திரு.பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Thank you sir. In support of the cut motion given by me to the Revenue demand, I would like to offer a few remarks regarding the Revenue Department which is the parent department of all Departments in the State. The Revenue Department has to face various calamities like cyclone and drought and they have been efficiently tackled by the Hon. Chief Minister and the departmental people which is really appreciable.

I understand from the policy note that the drought relief works have been taken up in about 19 districts and remission of land revenue, local cess and surcharge has been ordered upto a value of nearly Rs.22.30 crores.

Regarding Patta Pass Book Scheme, it is really an appreciable one. It has been stated that the Patta Pass Book Scheme would enable the financial institutions, the co-operative banks and commercial banks to sanction loans for agriculturists without insisting on Encumbrance Certificates. But this is being implemented only in some districts. Dharmapuri district has not been included in the list. I request the Hon. Revenue Minister to see that the Patta Pass Book containing all the particulars of the individuals may be given early in other districts also.

Regarding the allotment of house sites to the poor people, the Government of India headed by Hon. Prime Minister Deve Gowdaji has already given in its policy statement as per the manifesto, that all the poor people who do not have house sites would be given houses by 2000 A.D. I request the Hon. Minister for Revenue to allot more houses to such people here. There are a lot of people who have constructed houses on poromboke lands not only in the Villages but also in the Towns, Municipalities and even in the Corporation of Chennai. I came to understand that there was a ban for issuing house site pattas in the Municipal areas. I request you to release it. What is the mistake that they have done. They are poor people and how can we deny pattas to such people living in the towns? I therefore request the Hon. Minister to see that it is also included. I see that a Committee has been constituted to regularise encroachment and to issue pattas. In such cases the pattas have to be issued in the urban areas and the rural areas as well. For example, in Hosur itself nearly 10000 houses have been constructed on promboke lands. Even in our villages there are nearly 5000 such houses. They have no patta now. This Committee should examine and see that the house site pattas are given equally in the Villages, Municipalities and Corporations. There should not be any distinction because poor people live in all places.

You have stated that encroachements in objectional poromboke lands are to be looked into. In Tamil Nadu almost all the tanks have been encroached upon by rich people. Almost all the revenue tanks have been silted because they are doing cultivation there. So I request the Hon. Minister to see that the encroachments in all the tanks are evicted mercilessly.



பிற்பகல் 12.55

The next point is tenancy. In my own village, I know a tenant who was cultivating for about 20 years. But when he went to the tenancy court, his case was negatived by the Officers. The officers are not taking this seriously. I know one gentleman by name Ramakrishnan. He was living there for about 30 years and he has constructed a house. But the department says that he is not a tenant. How is it possible? His name is found in the Voters' list and he has constructed a house. But there is no use. I request the Hon. Minister to see that this kind of things are avoided in future.

Regarding the drought relief measures, i.e., Drought Prone Area Programme, I request that permanent drought relief work should be started in Dharmapuri District. The other schemes, such as sanction of Rs.15,000 to the accident victims, sanction of Rs.7500/- as financial assistance under the Tamil Nadu Family Distress Relief Scheme and sanction of Rs.1000/- per head of sheep and goat in a fire accident are very good. I request the Hon. Minister that at least an additional thousand rupees should be given in this case, because thousand rupees is not sufficient to construct even a small hut.

Hosur is a fast developing town. Lot of industrial units have come there. About 150 years ago Hosur was the headquarters of Salem District. I request the Hon. Minister to see that Hosur is made the headquarters by dividing Dhamapuri District because lot of industries have come there.

Manu Needhi Thittam is really doing well. If we go to the office of the Tahsildar, the same attention must be given. I request the Hon. Minister to see that instructions are issued to the Tahsildars. Just now, our Hon. Member, Thiru Deeran was telling how a certificate was denied to a girl, resulting in the loss of M.B.B.S. seat. The Tahsildars are delaying matters. I request the Hon. Minister to see that a time frame is fixed. Otherwise, if you give petitions and getting certificates after two or three months there is no use. So, I request that if any petition is given to any department, they must fix up a time limit within

which they must pass orders. Otherwise it will lead to corruption. So, I request the Hon. Minister to see that this aspect is properly attended to.

The Farmers Association in Salem have represented to me that Thalaivasal and another taluk should be included in Athur instead of in Kangavalli. I request the Hon. Minister to see that those taluks are included in Athur itself.

In Kolli Hills, I came to understand that pattas have not been issued to the Scheduled Tribes. I request the Hon. Minister to examine this and do the needful.

I really appreciate the Hon. Minister for his words that the Revenue Department is a parent department to all other departments. The Revenue administration should be toned up as is being done in the Manu Needhi Thittam. Even the Officers who are working in the office must attend to the people who go there, for the redressal of their grievances.

With these words, I conclude my speech.

*பிற்பகல 1.00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி. திருஞானசம்பந்தம், திரு. என். பாண்டுரங்கன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு.என். தங்கவேல், திரு. இராஜரெட்டி, திரு. ப. பாலசுப்பிரமணியன், திரு.எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், திரு. அ. மணி, திரு. பி. வெங்கடசாமி, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், மற்றும் திரு. ஜே. எம். ஆரூண் ஆக மொத்தம் 11 பேர் (குறுக்கீடு) வெங்கடசாமி, ஒசூர்தானே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். கேட்பதில்லையா..... (சிரிப்பு) இனி ஒரு முறை தெரிவிக்க விரும்புகிறேன், திரு. பி. வெங்கடசாமி, ஓசூர் தொகுதி அவர்களும், கருத்துக்களை கடமையுணர்ச்சியோடும், பொறுப்புணர்ச்சியோடும், தெளிவாகவும்,



விளக்கமாகவும், பயன்படத்தக்க வகையில் பேசியிருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய அருமை நண்பர் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்திருக்கிற இராசேந்திரன் என்கிற தீரன் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார். அந்தக் கோரிக்கை, கலைஞர் பிறந்த மண்ணான திருக்குவளையை ஒரு வட்டமாக ஆக்க வேண்டுமென்றும், அது கலைஞருக்கும், இன்றைய முதலமைச்சருக்கும் தமிழ்நாடு செய்கின்ற பெரிய மரியாதை என்றும், ஆக அதை நீங்கள் அறிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். ஆக திருக்குவளை தனி வட்டமாக ஆகிறது என்பதை இந்தக் கூட்டத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் திருக்குவளையைத் தனி வட்டமாக அறிவிக்கலாம். திருவாரூர் தாலுக்காவிலே, (ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தில்) திருக்குவளையை இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே முடிவு எடுத்துச் சொன்னதற்குப் பிறகு மாற்றுவதற்கு இல்லை. (சிரிப்பு) வேண்டுமென்றால் பரிசீலிக்கலாம். பரிசீலிப்போம். அதற்குப் பிறகு நமது சுப்பராயன் அவர்கள் ஒன்றைத் தந்திருக்கிறார்கள். திருப்பூர் துணை மின் நிலையம் கட்டுவதற்கு திருப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் காலியாகக் கிடக்கிற 50 சென்ட் வருவாய்த் துறை நிலத்தை, மின்வாரியம் கோரியுள்ளது. அதை வழங்கும் அறிவிப்பு ஏதேனும் வெளியீடு வருமா என்று கேட்டார். எனது பக்கத்திலே இருக்கிற மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்களைக் கேட்டேன், தாராளமாக ஒத்துக்கொள்ளுங்கள் என்றார். ஆகவே பேராசிரியர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில், கலைஞர் அவர்கள் கருணை காட்டுவார்கள் என்ற நம்பிக்கையில், நான் அதை ஏற்றுக்கொள்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேசிய அத்துணை பேரும் குறிப்பிட்ட சில கருத்துகளைச் சொன்னார்கள். அதற்குப் பதிலளிக்கும் வகையில் கொஞ்சம் அதிகமாக இருந்தாலும் பொறுமையோடு கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்போது மணி 1.03 ஆகிறது.

மாநில நிர்வாகம் செம்மையாக நடைபெறுவதற்கும், பொதுமக்களின் இன்னல்களையும் குறைகளையும் களைவதற்கும், சமுதாய மாற்றத்திற்கும், சமூக நீதி காப்பதிலும் வருவாய்த் துறை எவ்வளவு சீரிய முறையில் பணியாற்றி வருகிறது என்ற கருத்தை மிக விளக்கமாகச் சென்ற ஆண்டு, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது உரையாற்றும்போது நான் குறிப்பிட்டிருக்கிறேன். உடுக்கை இழந்தவன் கைபோல், மக்களின் துயர் துடைக்கும் பணிகளில் முன்நின்று செயல்படுவது வருவாய்த் துறை. ஆகவேதான் அதற்குத் தாய்த் துறை என்று பெயர். தாயன்போடு காரியங்களைச் செய்வதில் வருவாய்த் துறை எப்போதும் சளைக்காது என்பதையும் இந்த நேரத்தில் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மக்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கு எந்த ஒரு கட்டத்திலும் வருவாய்த் துறையின் சேவை இன்றியமையாததாகும்.

"Men may come and men may go, But I go on for ever``

என்று நதி கூறுவதாக லார்டு டெனிசன் என்ற கவிஞன் கூறினான். அதுபோல எத்துணை துறைகள் புதிதாக உருவானாலும், தொடர்ந்தாலும், முன்னோடித் துறையான வருவாய்த் துறை மக்கள் சேவையில் தொடர்ந்து இயங்கும்.

பிற்பகல் 1-05

இத்துறையின் பணிகள் விரிவாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலும், சாதனை அறிக்கையிலும் எடுத்துரைக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, குறிப்பாகச் சிலவற்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 1996 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் பெய்த பெருமழை மற்றும் வெள்ளத்தினால் தமிழ்நாட்டின் கடற்கரை ஓர மாவட்டங்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாயின. வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மைய அரசின் நிதி உதவியை இவ்வரசு கோரியது. ஆனால் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு நிவாரணம் உடனடியாகச் சேர வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டு இருந்தது. எனவே மைய அரசின் நிதி உதவி உடன் கிடைக்காத நிலையில் 195 கோடி அனுமதித்து நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் இயங்க வைத்தது நமது மாண்புமிகு முதல்வர் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய அரசு செய்யாத அளவிற்கு, மிகுவாகவும், முறையாகவும் முழுமையாகவும் இந்த நிவாரணப் பணிகள் செய்யப்பட்டன. இயற்கை இடர்ப்பாடுகள்,



குறிப்பாக வெள்ளம், பெருமழை ஏற்படுகின்ற காலங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு முதலில் விரைந்து சென்று பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு இட்டுச் செல்வது முதல் நிவாரணப் பணிகளை முழுமையாக நிறைவேற்றுவது வரை பணியாற்றுவது வருவாய்த் துறையாகும். இப்பணியில் இரவு பகல் என்று பாராது ஈடுபட்டு பொது மக்களுக்குச் சீரிய முறையில் தொண்டாற்றிய வருவாய்த் துறை அலுவலர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் வெள்ள நிவாரணப் பணிகளில் தவறுகள் நடந்ததாகத் தெரிய வந்தாலோ, முறைகேடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டாலோ அவற்றின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள இந்த அரசு தயக்கம் காட்டாது; காட்டவே காட்டாது. குறிப்பாக எம்.ஜி.ஆர்., தஞ்சாவூர், திருவாரூர் - ஏ.டி. பன்னீர் செல்வம், நாகை-காயிதே மில்லத் மற்றும் தென் ஆற்காடு-வள்ளலார் ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளான குடிசைகளுக்கு நிவாரணத் தொகை வழங்குவதில் முறைகேடுகள் குறித்து அரசின் கவனத்திற்கு வந்தன. அவற்றின் மீது விரிவாக விசாரணை மேற்கொள்ளவும், அரசுக்கு அறிக்கை அனுப்பவும் விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார். தென் ஆற்காடு-வள்ளலார் மாவட்டத்தில் நிவாரணத் தொகை வழங்கியதில் காணப்பட்ட முறைகேடுகளுக்காக 4 கிராம நிர்வாக அதிகாரிகள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். கடமையை சரிவர ஆற்றாமைக்காக துணை ஆட்சியர் பதவியில் உள்ள அலுவலர் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

தற்போது தென் மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட உடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் வறட்சிப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டு உள்ளார்கள். அவர்கள் அறிக்கை பெறப்பட்டு, அதனடிப்படையில் தென் மாவட்டங்களில் வறட்சிப் பணிகளை மேற்கொள்ள 42 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; செய்தவர் மாண்புமிகு முதல்வர் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன்.

மக்களின் பொதுவான, ஆனால் முக்கியமான தேவை இருப்பிடம். அமைச்சர்கள் அல்லது அதிகாரிகள் கிராமங்களுக்கு முகாம் சென்றால் மக்களது கோரிக்கையில் அதிகம் இடம்பெறுவது பட்டா வேண்டும்

என்பதுதான். நான் அதை அனுபவித்துக் கொண்டு இருக்கிறேன். பொதுத் தேவைக்கு வேண்டாத, சமுதாயத் தேவைக்கு என்று ஒதுக்கப்படாத அரசு நிலங்கள் வீட்டுமனை, விவசாயம் போன்ற பயன்களுக்காக மக்களுக்கு ஒப்படை செய்யப்படுகின்றன. ஆனால், ஏரி, குட்டை, கண்மாய், சந்தை, மேய்க்கால் என்று வகைப்படுத்தப்பட்ட நிலங்கள் சமுதாய நலனுக்குத் தேவையானது. இத்தகைய நிலங்களில் வீடு கட்டி குடிசை போட்டு அல்லது வேறு முறையில் ஆக்கிரமிப்பு செய்தால், அது ஆட்சேபணைக்கு உரியது. இவ்வகை நிலங்களில் பட்டா கேட்டு வரும் கோரிக்கைகள் பொதுவாக ஏற்கப்படுவதில்லை. ஆயினும், ஆட்சேபணைக்குரிய இடங்களில் ஏழை எளியவர்கள் பல ஆண்டுகளாகக் குடி இருந்தால் அவர்கள் மீது பரிவு காட்டி ஆக்கிரமிப்புகளிலிருந்து அவர்களை வெளியேற்றுவது இல்லை. இருப்பினும் உண்மை நிலையில், ஒப்படை செய்வதால் அந்த வகைப்பாட்டு நிலங்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என்று பொதுமக்கள் கூறி வருகிறார்கள். ஏழைகளின் துயர் தீர்ப்பதில் அக்கறை உள்ள அரசு இந்த அரசு. ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கையை உண்மையாகவே கடைப்பிடிக்கும் இந்த அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஒரு குழுவினை அமைத்து உள்ளது. இக்குழு ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்கள் பற்றி உண்மை நிலையைக் கண்டறிந்து இந்த நிலங்களில் ஒப்படை செய்வது குறித்து தகுந்த பரிந்துரையைச் செய்யும். குழுவின் அறிக்கை ஒரு ஆண்டுக்குள் அரசுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் வசதிபடைத்த, பெரும் செல்வாக்குள்ள பெரிய மனிதர்கள், அரசு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தால் அவற்றை அகற்றுவதில் இந்த அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கும். எடுத்துக்காட்டாக அண்ணா மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மையனூர், சிறுதாவூர் மற்றும் கருங்குழிப்பள்ளம் ஆகிய கிராமங்களில் சுமார் 30 ஏக்கர் அரசு நிலங்கள் சுற்றி வளைக்கப்பட்டு, (குறுக்கீடு) - பெயர் சொல்ல விரும்பவில்லை - சுற்றி வளைக்கப்பட்டு, முள் வேலி அமைத்து, இரும்பு கதவுகள் அமைத்து வளைத்துப் போடப்பட்டன. இந்த ஆக்கிரமிப்புகள் வெகுவாக அகற்றப்பட்டன. அரசு நிலங்கள் மீட்கப்பட்டன. எஞ்சியுள்ள பணி தொடரும்.

பிற்பகல் 1-10

இதேபோல, நடைமுறைகளைப் பின்பற்றாமல், முறைகேடாக நில ஒப்படை செய்த ஆணைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதிரிவாக்கம்,



வேதகாபுரம் ஆகிய கிராமங்களில் 'மெடோ அக்ரோ ஃபார்ம்' என்ற நிறுவனத்திற்கு 220.22 ஏக்கர் நிலம் முந்தைய ஆட்சியால் வழங்கப்பட்டது. இதிலும் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. இந்த ஒப்படை ரத்து செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சமுதாயப் பொருள் வளங்கள் பொது நலனுக்குப் பயன்படும் வகையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்றும், செல்வமும் உற்பத்திச் சாதனங்களும் சிலரிடம் மட்டும் குவிந்து விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், இந்திய அரசியல் அமைப்பில் 39 (பி) பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேளாண்மை நிலங்கள் சிலரது வசம் குவிவதன் மூலம் வேளாண்மை நில உடைமைகளிலும், சமூகப் பொருளாதார நிலைமைகளிலும் ஏற்றத் தாழ்வுகள் நிலவுகின்றன. இவற்றைப் போக்குவதற்காக 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த, நில உச்சவரம்பு நிர்ணயம் செய்தல் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம், 6-4-1960 லிருந்து செயலுக்கு வந்தது. தற்போது 5 அல்லது அதற்குக் குறைவான நபர்கள் கொண்ட குடும்பத்திற்கு உச்சரவரம்பு 10 தர ஏக்கர், குடும்பத்தின் மொத்த உச்சவரம்பு 30 தர ஏக்கர். இந்த உச்சவரம்புக்கு மேல் கைப்பற்றியுள்ள நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு நிலமற்ற ஏழைகளுக்கு வினியோகிக்கப்படுகின்றன. ஒரு நபருக்கு 3 ஏக்கர் புஞ்சை அல்லது ஒன்றரை ஏக்கர் நஞ்சை என்ற அளவில், இந்த ஒதுக்கீடு அமைகிறது. இந்தச் சட்டத்தை அமல்படுத்தியதிலிருந்து 31-12-1996 வரை 1.94 லட்சம் ஏக்கர் மிகை நிலமாக அறிவிக்கப்பட்டது. இதுவரை 1.64 லட்சம் ஏக்கர் நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயனடைந்தோர் 1.36 லட்சம் பேர். 1996-97 ஆம் ஆண்டில் ஒப்படை இலக்கு 2,500 ஏக்கர். ஆனால் 28-2-1997 முடிய 3,124 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

இந்த நேரத்தில் ஒருசெய்தியை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். 6-4-1960 முதல் நிலச் சீர்திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தாலும், சர்க்கரை ஆலைகளுக்குச் சொந்தமான நிலங்கள் இச்சட்டத்திற்குள் வரவில்லை. தமிழ்நாடு 41/71-ன்படி 15-1-1972 முதல்தான் அந்த நிலங்கள் நிலச்சீர்திருத்தச் சட்டத்திற்குள் வந்தன. இந்தவகை மிகை நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான ஈட்டுத்தொகை ஆண்டு வருமானக் கணக்கில் இரண்டு மடங்கு என்ற

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1997 மார்ச் 21

அளவில் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் ஆண்டுவருமானக் கணக்கில் 9 மடங்கு என்ற அளவில் ஈட்டுத்தொகை கோரி திரு ஆரூரான் சர்க்கரை ஆலை நிறுவனம் உயர்நீதிமன்றத்தில் வழக்காடி வெற்றி பெற்றது. இந்த உயர்நீதிமன்ற ஆணைக்கெதிராக உச்ச நீதிமன்றத்தில் 1980 ஆம் ஆண்டு வழக்குத் தொடர்ந்தது. 16 ஆண்டுகளுக்குப் பின்னால், 31-10-1996 அன்று உச்ச நீதிமன்றம் — மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன் — அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்து (மேசையைத் தட்டும் ஒலி) அரசு இயற்றிய சட்டங்களுக்கு ஏற்பளித்துள்ளது.

பயிரிடும் குத்தகைதாரர் நலனில் இந்த அரசு எப்போதும் பரிவு காட்டி வருகிறது. வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட ஏழை குத்தகை விவசாயிகளின் இன்னல்களைத் துடைப்பதற்காகத் தமிழ்நாடு பயிரிடு குத்தகை வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்கிற சட்டமுன்வடிவு இம்மான்றத்தில் 31-1-1997 அன்று நிறைவேற்றப்பட்டது. இதன்படி 30-6-1997 பசலி ஆண்டு முடிய நிலுவையிலுள்ள குத்தகையை வசூல் செய்வது இரண்டு ஆண்டுகளுக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தள்ளிவைப்பு காலத்தில் குத்தகை பாக்கிக்காக குத்தகைதாரர்களைக் குத்தகை நிலத்திலேயிருந்து வெளியேற்ற முடியாது. மாண்புமிகு அமைச்சர் கோ.சி.மணி அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன்.

கவிஞர் இக்பால் அவர்களின் கவிதை ஒன்றை இந்த நேரத்திலே உங்களுக்குச் சுட்டிக்காட்டுவது எனது கடமை. நானும் ஒரு கவிஞன். கலைஞரின் வாரிசு. ஆகையினாலே அந்தக் கவிதையைப் படிக்கிறேன்.

*"Go and awaken the poor*

*and dispossess of this Universe*

*and shape the world of the rich men's*

*Raze their palaces to their foundation;*

*let the frail sparrow hurt itself against the eagle*

*and the fervour of self-confidence warm up the blood of the slaves*

*The day of the sovereignty of the masses is approaching fast*

*demolish the old relics wherever you find them"*



1997 மார்ச் 21] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

தமிழாக்கம். 'செல். ஏழைகளையும், உலகில் எதுவும் அற்றவர்களையும் சென்று எழுப்பு. கொள்ளையடித்து பெரும் கோடீசுவரர்கள் ஆகிவிட்ட நபர்களின் அரண்மனைகளை அடியோடு பெயர்த்துவிடு. சின்னஞ்சிறு குருவி, வல்லூறை எதிர்த்துத் தன்னைக் காயப்படுத்திக்கொள்ளட்டும். அடிமைகளின் இரத்தத்தில் தன்னம்பிக்கை என்னும் உணர்வு சூடேற்றட்டும். மக்களது இறையாண்மை வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, எங்கெல்லாம், எங்கெங்கு பழைமை தென்படுகிறதோ, அவற்றைத் தூளாக்குங்கள்' என்பது கவிஞர் இக்பால் அவர்களின் அற்புதமான கவிதை. நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். மக்கள் தேவைகளை உணர்ந்து Demolish the old relies wherever you find them ஏற்றுக்கொள்வீர்கள். ஆனால், Raze their palaces to their foundation அரண்மனையிலே வாழுகின்ற அவர்களது அரண்மனைகளை அடித்துத் தூள் தூளாக்குங்கள். இது அவரது உணர்வைக் காட்டுகிறதே தவிர, தூளாக்க அவர் சொல்லவில்லை என்பதையும், அவர் நம்மிடையே இப்போது இல்லாவிட்டால், அவர் சார்பாக நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் தேவைகளை உணர்ந்து, அவர்களது நலன்களையும், நல்வாழ்க்கையையும் பேணிக் காப்பதற்கு இயன்ற அனைத்தையும் வருவாய்த் துறை செய்யும். அதற்கு இந்த அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் கொஞ்சம் பொறுத்தே தீரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அறிவிப்பு வெளிவருகிறது.

1996-97-ஆம் ஆண்டிற்கான வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது உரையாற்றுகையில் 15 திட்டங்களை இந்தப் பேரவையில் நான் அறிவித்தேன்.

முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஓய்வூதியம் அளிப்பது; வருவாய்க் கணக்குகளை மேலும் ஆறு மாவட்டங்களில் கணிப்பொறி மயமாக்குவது; நில அளவைத் துறை அலுவலர்களுக்கு நிர்வாகப் பயிற்சி அளித்தல். அவர்களுக்கு விண்கோள் மூலம் தொலை தூரத்தை அளந்து நிலப்படம் வரைவதை அறிய தொழில் நுட்பப் பயிற்சி அளித்தல்; நகர்ப்புற நில உச்சவரம்பு வழக்குகளையும் நிலச்சீர்திருத்த தனி மேல்முறையீட்டு தீர்ப்பாணையத்திற்கு மாற்றுதல்; வெள்ள நிவாரணப் பணிகளுக்கு 20.60 கோடி ரூபாய் ஒதுக்குதல்; ஜமாபந்திக்கு செக் மெமோவில் மாற்றங்களைக் கொண்டு வருதல்; அரசு நிலங்களில்

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1997 மார்ச் 21

ஏற்படும் ஆக்கிரமணங்களைப் பார்வையிட்டு ஒப்படை செய்வதை ஆய்வு செய்ய ஒரு குழு அமைத்தல்; ஆகியவை குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன என்பதைத் தெரிவிப்பதில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவை மீது தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் அவைகள் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1.20

நீர்நிலைப் புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு போன்ற வகைப்பாடு உள்ள நிலங்கள் சமூக நலனுக்குத் தேவையானவை. இவற்றை ஆக்கிரமிப்பு செய்தால் அது ஆட்சேபகரமானதாகக் கருதப்படும். இருப்பினும் பொது மக்களது கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு இந்த ஆக்கிரமிப்புகள் உண்மையில் ஆட்சேபகரமானவையா, இந்த நிலங்கள் பொது நலனுக்குத் தேவையா என்பது பற்றி ஆய்வு செய்ய ஒரு குழுவினை அரசு அமைத்துள்ளது.

அந்தக் குழுவில் தற்போது இடம் பெற்றுள்ளோர் வருமாறு:

| | |
|---|---|
| சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் .. | தலைவர் |
| நிலவரி மற்றும் நில அளவைத் துறை ஆணையர் மற்றும் இயக்குநர் .. | உறுப்பினர் |
| இணை ஆணையர் - நில நிர்வாகம் .. | உறுப்பினர் |
| தொடர்புடைய மாவட்ட வருவாய் அலுவலர் .. | உறுப்பினர் - செயலர். |

சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி சட்டமன்ற உறுப்பினர்களையும் இக்குழுவில் இடம்பெறச் செய்யலாம் என்று அரசு கருதியுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி இதற்கான ஆணை விரைவில் வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



1997 மார்ச் 21] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

பொது மக்களின் குறைகளையும், இன்னல்களையும் போக்குவதற்கு ஆவன செய்ய வேண்டியது ஒரு நிர்வாகியின் கடமையாகும். தாயின் கருணையுடன் மக்கள் குறைகளைக் களையும் இவ்வரசு நில அளவைத் துறையில் 1983 ஆம் ஆண்டு முதல் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்திற்காக Updating Registry Scheme—நில அளவர்/வரைவாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், பிரிவு எழுத்தர் உள்ளிட்ட பல பதவிகளில் தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்ட பணியாளர்களின் முறைகளையும் பரிசீலித்தது.

1987-இல் இத்திட்டம் முடிவுறும் தறுவாயில் அவர்களுக்கு நிரந்தரப் பணி வாய்ப்பு அளிக்கும் பொருட்டு பல ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. படிப்படியாக, இவர்களுக்குப் பல துறைகளில் பணி வழங்கப்பட்டாலும் தற்போது 1,175 பேர்கள் தொகுப்பூதியப் பணியாளர்களாகவே இருந்து வருகின்றனர். இவர்களது அதிகபட்ச தொகுப்பூதியம் மாதம் ரூ.800/- மட்டும் ஆகும். அவர்களது பொருளாதார நிலை, வயது மற்றும் நீண்டகால அனுபவத்தைக் கருத்திற்கொண்டு அவர்களை முறையான சம்பள ஏற்றமுறை—Regular Scale of Pay-பணியிடங்களில் பணியமர்த்த அரசு கருதியுள்ளது.

நில அளவை மற்றும் அனைத்துத் துறைகளிலும் அவர்களை நியமிப்பதற்காக மிகைப் பணியிடங்கள் - Supernumerary Posts-தோற்றுவித்து அப்பணியிடங்களில், கல்வித் தகுதிக்கேற்ப எல்லாத் தொகுப்பூதியப் பணியாளர்களையும் நியமனம் செய்யலாம் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதற்கான ஆணை விரைவில் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக வருவாய்த் துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. புதிய தொழிற்சாலைக்கு தேவைப்படும் நிலங்களை மிகவும் துரிதமாகக் கையகப்படுத்திக் கொடுக்கிறது. தொழில் விரிவாக்கத்திற்காக உபரி நிலங்கள் வைத்துள்ள தொழிற்சாலைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. அரசு ஒதுக்கிய நிலங்கள் அல்லது அரசால் கையகப்படுத்தி வழங்கப்பட்ட நிலங்களை வைத்திருக்கும் தொழிற்சாலைகளின் உபரி நிலங்களுக்கு, நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ், அரசு அனுமதியின்றி விற்கப்படக் கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு நிரந்தரமாக விதிவிலக்கு அளிக்கலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

அதேபோல் அரசோ அல்லது அரசைச் சார்ந்த தொழில் வளர்ச்சி அமைப்புகளோ தொழிற்சாலைகளுக்காக ஒதுக்கீடு செய்துள்ள நிலங்களுக்குத் தமிழ் நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து முழுமையாக விதி விலக்கு அளிக்கலாம் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏனைய தொழில் நிறுவனங்களுக்குத் தங்கள் தொழில் விரிவாக்கத்தைத் திட்டமிட்டும், முறையாகவும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக தங்களது நிலங்களைக் கைமாற்றம் செய்யக்கூடாது என்ற அடிப்படையில் ஒவ்வொரு முறையும் 10 வருடங்களுக்கு நிலச் சீர்திருத்த மற்றும் நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டங்களிலிருந்து விதிவிலக்கு அளிக்கலாம் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இச்செய்தி தமிழகத்திலுள்ள தொழிலதிபர்களுக்கும், தொழில் முனைவர்களுக்கும் மிக மகிழ்ச்சியான செய்தியாக அமையும் என நம்புகிறேன்.

பிற்பகல் 1-25

மாநகரங்களில் பொதுமக்கள் பலர் வீடு கட்டுவதற்காக நிலம் வாங்கும்போது, அவை நகர்ப்புற உச்சவரம்பு மிகை பெற்ற நிலங்கள் என்பதை அறியாமல் வாங்கியுள்ளனர். விதிகளின்படி இத்தகைய விற்பனைகளை ஏற்க இயலாது. அவற்றை அரசு கையகப்படுத்த வேண்டுமானால் இவ்வாறு நிலத்தை வாங்கியோர் பொதுவாக ஏழை மற்றும் நடுத்தரப் பிரிவினராய் இருப்பர். பொதுமக்களுக்கு விவரம் தெரியாததால் ஏற்பட்ட இன்னலைப்போக்க அரசு கருதியது. ஆகவே ஒன்றரை கிரவுண்ட் வரை வீடு கட்டுவதற்காக வாங்கப்பட்ட நிலங்களுக்கு கிரவுண்ட் ஒன்றுக்கு குறிப்பிட்ட தொகையை வசூலித்து மனைகளை வாங்கிய மக்களுக்கு ஒப்படை செய்யலாம் என்று அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கான ஆணை விரைவில் வெளியிடப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் மிகை நிலமாக நிர்ணயிக்கப்பட்ட நிலங்களின் விவரம் குறித்த அறிக்கை தமிழ்நாடு அரசிதழில் மட்டும் வெளியிடப்படுகிறது. பொதுமக்களின் தகவலுக்காக மேற்படி விவரங்களை முக்கியமான நாளிதழ்களிலும் வெளியிடுவது குறித்து அரசு பரிசீலிக்கும்.





தற்போது நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் பொதுத் தேவைகளுக்கோ, தொழிற்சாலைக்ளுக்கோ தேவைப்படாமலும், தனி நபர்களது பயன்களுக்கு மட்டுமே பயன்படக்கூடிய அளவில் குறைந்த பரப்பளவாக இருக்குமேயானால், பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள பொதுமக்களுக்கு முன்னுரிமை கொடுத்து ஒரு நபருக்கு அரை கிரவுண்ட் என்ற அளவில் ஒரு தொகையை வசூலித்து ஒதுக்கலாமா என்பது குறித்தும், மேற்படி நிலத்திற்கான மதிப்பினைப் பொருளாதாரத்தில் பின்தங்கிய இவர்களிடமிருந்து தவணை முறையில் பெற்றுக்கொள்ளலாமா என்பது குறித்தும் அரசு ஆய்வு செய்யும்.

மத்திய அரசு மற்றும் மாநில அரசுத் துறைகள், பெருமைக்குரிய முக்கிய திட்டங்களை சென்னை நகர்ப்புறத்தில் நிறுவுவதற்கு ஏதுவாக சென்னை பெருநகருக்கு அருகாமையில் உள்ள பள்ளிக்கரணை மற்றும் ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமங்களிலுள்ள அரசு நிலங்களில் அமைப்பு ரீதியான வளாகங்கள் -Institutional Complex- அமைக்கலாம் என்று அரசு பரிசீலனை செய்து வருகிறது. அண்மையில் மத்திய கடல் ஆராய்ச்சித் துறையின்கீழ் தேசிய கடல் ஆராய்ச்சி நிறுவனம் அமைப்பதற்காக பள்ளிக்கரணை கிராமத்தில் 50 ஏக்கர் நிலம் அரசு வழங்கியுள்ளது. இம்மாதிரி நிறுவனங்கள் நகரத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

பல மாவட்டங்களிலிருந்து பத்திரிக்கையாளர்கள், பணிபுரிபவர்கள் -Journalists and Reporters- தங்களது குடியிருப்புத் தேவைகளுக்கு அரசு நிலம் ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று கோரி வருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி அவர்களது கோரிக்கை பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நில அளவைத் துறை - நில அளவை வரைபடங்களை நவீன 'ஸ்கேனிங்' (Scanning) முறையில் பதிவு செய்யக் கருதப்பட்டுள்ளது. அதற்குரிய உபகரணங்கள் வாங்கவும், சென்னை மத்திய நில அளவை அலுவலகத்திற்குப் புதிய கட்டிடங்கள் வாங்குவதற்கும், 10-வது நிதிக்குழு ஒதுக்கியுள்ள ரூ. 6.30 கோடி பயன்படுத்தப்பட்டு இதன் மூலம் நில அளவை ஆவணங்கள் நவீனமயமாக்கப்படும்.

தீவிர நில உட்பிரிவுத் திட்டம் -Intensive sub Division scheme- வரும் ஆண்டில் எஞ்சியுள்ள 15 வட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு

[ திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1997 மார்ச் 21

முடிக்கப்படும். அதேபோல் நத்தம் நில அளவைத் திட்டம் எஞ்சியுள்ள 52 வட்டங்களிலும் இவ்வாண்டு முடிக்கப்படும்.

கணிப்பொறிகள் தற்பொழுது காலத்தின் கட்டாயமாகி விட்டன. நிருவாக மேம்பாட்டிற்கு இவை மிகவும் இன்றியமையாதது. இவற்றை நிருவாகத்தில் அறிமுகப்படுத்துவதின் மூலம் பணியாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுமோ என்ற அச்சம் யாருக்கும் வரத் தேவையில்லை. மாறாக, அவர்களுக்குக் கணிப்பொறிகளில் பயிற்சி கொடுத்து அவர்களைக் கணிப்பொறிகளுக்குப் பரிச்சயப்படுத்துவதன் மூலம் நிர்வாகத்திறன் மேம்பட வழி ஏற்படும். ஆகவே, வருவாய்த்துறையில் எந்த அளவிற்குக் கணிப்பொறியை ஈடுபடுத்தி நிருவாகத் திறனை மேம்படுத்த இயலும் என்பதை நிதிநிலைகளைக் கருத்திற்கொண்டு ஆராயப்படும்.

அதேபோல் தற்போது பவானி சாகரில் அலுவலர்களுக்கு நிருவாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. வருவாய்த் துறையில் புதியதாகப் பணி ஏற்கும் அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பொருட்கள் குறித்து அறிந்து உடனடியாகச் செயலாற்ற உதவியாக நிருவாகப் பயிற்சியை பவானிசாகரில் முடித்தவுடன் அவர்களுக்கு நில ஒப்படை.........

பிற்பகல் 1.30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** நில ஒப்படை, நில கையகப்படுத்துதல், நில உரிமை மாற்றம், நிலச் சீர்திருத்தம், நில ஆக்கிரமிப்பு போன்ற வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட பொருள்கள் மீது ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குத் தனிப் பயிற்சி தருவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

வருவாய்த் துறை நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக வருவாய்த் துறை அலுவலர்களுக்கு - தமிழ்க்குடிமகன் அவர்களின் பாஷையில் சொல்லவேண்டுமானால் - ஈப்புகள் வழங்கப்படுகின்றன. 12 மாவட்டங்களில் உள்ள வட்டாட்சியர்கள், கோட்டாட்சியர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர்களுக்குப் புதிதாக 18 ஈப்புகள் 2 சீருந்துகள் (cars) வழங்கப்பட உள்ளன. இதற்கு அரசுக்கு ஆகும் கூடுதல் செலவு 60 லட்சத்திற்கு மேலாகும்.



1997 மார்ச் 21] [ திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

மேலும் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்காக 25 ஈப்புகள் வழங்கப்பட உள்ளன. இதற்கு 75 இலட்சம் ரூபாய் செலவாகும். இந்த ஈப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரைவில் வழங்கப்பட உள்ளன. இதன்மூலம் வருவாய்த்துறையின் பணி மேலும் சிறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வருவாய்த்துறை, நில கையெடுப்பு, நில ஒப்படை, நில உரிமை மாற்றம், நில ஆக்கிரமிப்புச் சட்டம் ஆகிய பலவற்றை நிர்வகித்து வருகிறது. இவை குறித்து தனித்தனி சட்ட விதிகள் நடைமுறையில் உள்ளன. ஒவ்வொரு வருவாய்த்துறை அலுவலகத்திற்கும் இப்பொருள் குறித்த நிலைக் கோப்புகள் -Stock files- முறைப்படுத்தி, அச்சிட்டு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே வருவாய்த்துறை தொடர்பான அனைத்துப் பொருள் குறித்தும் நாளது வரையிலான நடைமுறை ஆணைகளை -Upto date Instruction- ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு அலுவலகத்திற்கும் வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

வெள்ளம் மற்றும் பெருமழை, வறட்சி என்ற இருவகைகளில் இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. வெள்ள நிவாரணப் பணிகளுக்கென கையேடுகள் -Flood Relief Manual- உள்ளது. ஆனால் வறட்சி நிலையை எதிர்கொள்ள நடைமுறை நூல் ஏதும் இல்லை. வறட்சி நிலையைச் சமாளிக்க ஒருசெயல் திட்டம் -Action Plan- உருவாக்க இந்தக் கையேடுகள் உதவும். ஆகவே, ஒரு குழு அமைத்து, வறட்சி நிவாரண நடைமுறை நூல் -Drought manual- உருவாக்க அரசு ஆணையிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

வருவாய்த் துறை பல சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இவற்றில் தற்போதைய சூழ்நிலையில் காலத்திற்கு ஏற்புடையதாக இல்லாத மற்றும் திருத்தம் அல்லது மாற்றம் தேவைப்படுவதாக உள்ள சட்டங்கள் குறித்து வருவாய்த் துறை ஆணையர்களுடன் ஆய்வு செய்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து தக்க மாற்றங்களையும், திருத்தங்களையும் செய்ய அரசு கருதியுள்ளது.

மாவட்ட ஆட்சியர் பணிகள் பலதிறப்பட்டன. எல்லாத் துறைகளின் செயல்பாடுகள் குறித்து அவர் மேற்பார்வையிட வேண்டியுள்ளது. அவர்களுக்கு உதவி செய்ய உயர்நிலை அலுவலர்கள் இருந்தாலும்,

நீதிமன்ற வழக்குகளை உரிய வகையில் நடத்திச் செல்வதற்கும் சட்ட விதிகளையும், முறைகளையும் எடுத்துரைத்து ஆலோசனை வழங்கவும் சட்ட அறிவுத் திறன் இந்த அலுவலர்களுக்கு இருக்க வாய்ப்புகள் இல்லை. ஆகவே, அரசு தொடர்பான வழக்குகள் சரிவர எடுத்து இயம்பப்பட இயலாத சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள் ஆராயப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்கள் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். மேலான கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்களது உணர்வுகள் மதிக்கப்படும். கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைப் பணிவன்போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் பல உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள் திரு. ஞானசேகரன் போன்றவர்கள் கொடுத்து உள்ளார்கள். அவற்றை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இத்தோடு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் இங்கே எழுப்பப்பட்ட பல்வேறு கருத்துக்களுக்கு உரிய பதில்களை வழங்கியிருக்கிறார்கள். இங்கே இந்த அவைக்கு ஒரு தவறான தகவலை அலுவலகத்தின் சார்பாகத் தந்துவிடக் கூடாது என்பதற்காகவும், தந்த தகவலை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதற்காகவும், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98 வருவாய்த் துறை என்பதில் 8-வது பத்தியில் 9-ஆம் பக்கத்தில் உள்ள அந்தக் குறிப்பைப் பற்றித்தான் * குறிப்பிட விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தம் என்பது தலைப்பு. வேளாண்மை நிலங்கள், சிலரது வசம் குவிந்து அதன் மூலம் வேளாண்மை நில உடைமைகளில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி, அந்நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்ட

* (இணைப்பில்) பக்கங்கள் 151-152-ஐக் காண்க.



எண் 58 ஆண்டு 1961-ல் இயற்றப்பட்டது. இச்சட்டம், 6-4-1960-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. தற்பொழுது 5 அல்லது அதற்குக் குறைவான நபர்கள் கொண்ட குடும்பத்திற்கு உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று அதிலே போடப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-35

தற்பொழுது என்பது எதைக் குறிக்க வேண்டுமென்றால் 1970-ஆம் ஆண்டு - 15-2-1970-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலேதான் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டுவரப்பட்டது. அலுவலர்கள், அதிகாரிகளைப் பற்றி எல்லாம் இங்கே உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். அந்தப் பேச்சுக்கு எவ்வளவு பொருத்தமாகச் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம், எடுத்துக்காட்டு என்றுதான் நான் சொல்லவிரும்புகிறேன். இந்த 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் கொண்டுவரப்பட்ட காரணத்தினாலேதான் 1,74,819 ஏக்கர் எடுக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் பல்லாயிரக் கணக்கான நிலமற்ற விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். எடுக்கப்பட்ட ஏக்கர் 1,74,819. அப்போதே கழக ஆட்சி இருந்தபோதே 1976-ஆம் ஆண்டு நான் தந்த கணக்கே சுமார் 50,000 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள் என்பது கணக்காகும். எனவே, இந்த குறிப்பில் இந்த 1970-ஆம் ஆண்டே இடம் பெறவில்லை. இடம் பெறாதது மாத்திரமல்ல. நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குகிற வகையிலே இந்தச் சட்டம் 61-வது ஆண்டுச் சட்டம் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அப்போது எந்த நிலமும் எடுக்கப்படவும் இல்லை, யாருக்கும் வழங்கப்படவும் இல்லை, உபரி எதுவும் இல்லை. 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று சட்டம் கொண்டுவந்தபோது, அதை மாற்றத்தான் நான் அண்ணாவினுடைய மறைவிற்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் உடனடியாக இந்த 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் சட்டம் கொண்டுவரப்பட்டது. அது இந்த வருவாய்த் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே இடம் பெறாதது மாத்திரமல்ல, தாறுமாறாக, அலங்கோலமாக இடம் பெற்றிருக்கிறது. அதைத் திருத்திக் கொள்ள வேண்டும் - என்னுடைய பேச்சை அடிப்படையாக வைத்து, என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தை

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1997 மார்ச் 21

அப்படியே ஏற்று திருத்திக் கொள்ளப்படும் என்பதை இந்தப் பேரவையில் தெரிவிப்பதோடு, குறிப்பேட்டில் இதைப் பதித்துக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(அ) கோரிக்கை எண் 1 - நில வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.



1997 மார்ச் 21]

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.13,58,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஆ) கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 40--இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பரர்யன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.



**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 66,87,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் " என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1-40

**(இ) கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 45- இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 101,23,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



*அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (24-3-1997) அன்று காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை, பிற்பகல் 1.41 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

115. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இருபத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

116. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

78. மானியக் கோரிக்கை எண் 1 - நிலவரி, மானியக் கோரிக்கை எண் 40 - இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் மானியக் கோரிக்கை எண் 45-இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

79. வருவாய்த் துறையின் சாதனை அறிக்கை 1997-98 (தமிழ், ஆங்கிலம்).

# இணைப்பு

(335-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## வருவாய்த் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98

### 1. முன்னுரை

வருவாய்த் துறை அனைத்து நிருவாகத் துறைகளுக்கும் மூத்த துறையாகும். மேலும் பல புதிய துறைகள் இத்துறையிலிருந்து பிரிந்து சென்றவையே. நிர்வாகத்தின் முதுகெலும்பாக விளங்கி கட்டுக்கோப்பான சமுதாய முன்னேற்றத்திற்குப் பெருந் துணையாக இருப்பது வருவாய்த் துறையே ஆகும்.

நிலம் தொடர்புடைய அனைத்து செயல்களுக்கும் வருவாய்த் துறை பொறுப்பாகும். நில எடுப்பு, நில ஒப்படை, நில உரிமை மாற்றம், நில வருவாய் ஆவணங்கள் பராமரித்தல், மேம்படுத்துதல், நிலப்பட்டாக்கள் வழங்குதல், நிலச்சீர்திருத்தம், நில உச்சவரம்பு, நகர்ப்புற நிலவரி, வேளாண்மை வருமான வரி ஆகிய பணிகள் அனைத்தும் வருவாய்த் துறையின் மூலம் செய்யப்படுகின்றன.

இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் இன்னல்களைத் துடைப்பதில் முன்னின்று செயல்படுவதும், இயற்கைச் சீற்றங்கள் குறித்து முன்னதாக அறிவிப்பதும் வருவாய்த் துறையேயாகும். வறட்சிக் காலத்தில் குடிநீர் வழங்குதல் போன்ற இன்றியமையாப் பணிகளையும், புயல், வெள்ள காலத்தில் மக்களைப் பாதுகாப்பான இடத்தில் குடியமர்த்தி அவர்க்ளின் உயிர், உடைமைகளைக் காப்பாற்றி, உணவு, உடை மற்றும் உதவிப்பணம் ஆகியவைக் கொடுத்து அவர்கள் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப உதவி செய்வது வருவாய்த்துறை ஆகும்.

அண்மையில் செய்யப்பட்ட மாவட்ட சீரமைப்புக்குப் பிறகு தற்போது 195 வட்டங்கள் மற்றும் 72 வருவாய் கோட்டங்கள் அடங்கிய 29 மாவட்டங்கள் உள்ளன. மேலே கூறப்பட்ட பணிகள் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் மற்ற அரசு அலுவலர்களின் துணையுடன் நிறைவேற்றப்படுகின்றன.

## 2. நிலவரி

ஒரு நிலத்தின் வகை, மண் வளம் மற்றும் தரத்தைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும் அடிப்படையான வரிவிதிப்பு நில வரியாகும். உள்ளூர் வரி, உள்ளூர் மேல் வரி, கூடுதல் வரி மற்றும் கூடுதல் தண்ணீர் வரி ஆகியவைகள் நில வரியின் உறுப்புகளாகும். 1-7-1967 முதல் அனைத்து புஞ்சை நிலங்களின் மீது விதிக்கப்படும் அடிப்படைத் தீர்வை ரத்து செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று 1-7-1971 முதல் ஐந்து ஏக்கர் மற்றும் அதற்குக் கீழாக நஞ்சை நிலம் வைத்திருப்பவர்களுக்கு அதற்குண்டான மொத்த நஞ்சைத் தீர்வையில், நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளது.

நிலவரி வசூல், சுமுகமான முறையில் செய்யப்படுகிறது. நிலவரி வசூல் செய்யும்பொழுது எவ்வித ஜப்தி நடவடிக்கைகளும் 1989 முதல் மேற்கொள்ளப்படவில்லை. வெள்ளம் மற்றும் புயல் பாதிப்பினால் பயிர்களுக்கு சேதம் விளைந்த காரணத்தால் 1403-ம் பசலி ஆண்டுக்கும் இதே நிலை தொடரப்பட்டது. ஆனால் இந்த செயல்முறை கவனமாக ஆய்வு செய்யப்பட்டபொழுது ரூ. 10,000 மற்றும் அதற்கும் மேற்பட்ட நிலவரி பாக்கியை வைத்துள்ள பெரிய பட்டாதாரர்களிடமிருந்தும், இயற்கை இன்னல்களால் பாதிக்கப்படாமலிருந்தால், அவர்களிடமிருந்தும் பலவந்த முறையில் நிலவரி வசூல் செய்வதில் எவ்வித தயக்கமும் காட்ட வேண்டியதில்லை என்றும் கருதப்பட்டது.

## நிலவரி தள்ளுபடி

### (1) பருவகால நிலவரி தள்ளுபடி

நிலவரி தள்ளுபடி கோரும் விவசாயி, தொடர்புடைய புலங்களைக் குறிப்பிட்டு, உரிய வருவாய் அலுவலருக்கு எழுத்து மூலமாக மனு



அளித்தல் வேண்டும். இம்மனுவின் பேரில், பயிர் தணிக்கை அலுவலரின் அறிக்கையின் பேரில் நிலவரி தள்ளுபடி உரிய வருவாய்த் துறை அலுவலரால் அனுமதிக்கப்படுகிறது. பருவகால நிலவரி தள்ளுபடி இனங்களில், செஸ், கூடுதல் செஸ் போன்றவை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தள்ளுபடி அளிக்கப்படுவதில்லை. பயிர் விளைச்சல் 50% மற்றும் அதற்கு குறைவாக இருக்கும் இனங்களில், நில வருவாய், உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மேல் வரி மற்றும் அரசு கடன் போன்றவற்றில் நிலுவைத் தொகை வசூல் செய்வதும், அடுத்த பசலி ஆண்டுக்கு தள்ளி வைக்கப்படுகிறது.

### (2) அசாதாரண சூழ்நிலைகளில் நிலவரி வசூலிப்பைத் தள்ளிப் போடுதலும் தள்ளுபடி செய்தலும்

அசாதாரண சூழ்நிலைகளில், இயற்கை சீற்றத்தினால் பெரும்பாலான பகுதிகளில் பயிர் விளைச்சல் பாதிக்கும்பொழுது, நிலவரி நிறுத்தி வைப்பு அல்லது நிலவரி தள்ளுபடி அரசால் அனுமதிக்கப்படுகிறது. இதுபோன்ற இனங்களில், நில வருவாய் நிலுவை மற்றும் அரசு கடன்கள் வசூலிப்பதும் அடுத்த பசலி ஆண்டுக்கு தள்ளி வைக்கப்படுகிறது.

வருவாய் நிலை எண் 14-இன் கீழ் 1405 ஆம் பசலிக்கு 19 மாவட்டங்களில், நிலவரி, உள்ளூர்வரி மற்றும் உள்ளூர் மேல்வரி ஆகியவை மொத்தம் ரூ. 22.30 கோடி வரை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

## 3. நில உரிமைப் பதிவேடு திட்டம்

1983 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நில உரிமைப் பதிவேடு சட்டம் நில உடைமைதாரர்களுக்கு, நில உரிமைப் பதிவேடு வழங்குவதற்கு வகை செய்கிறது. நில உடைமைதாரர்களுக்கு இந்த நில உரிமைப் பதிவேடு அவர்களின் நில உரிமைக்கு சான்றாவணமாக உள்ளது. மேலும் கடன் வழங்கும் நிறுவனங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகள், நில உரிமைப் பதிவேடு அடிப்படையில் எவ்வித வில்லங்கச் சான்றிதழ் கோராமல் விவசாயிகளுக்கு கடன் வழங்கவும் உதவுகிறது

2. இத்-திட்டம் (1) வடாற்காடு-அம்பேத்கர் (2) தஞ்சாவூர் (3) திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர் (4) பெரம்பலூர்-திருவள்ளுவர் (5) கரூர்-தீரன்சின்னமலை, (6) கோயம்புத்தூர், (7) மதுரை மற்றும் (8) சிதம்பரனார் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாவட்டங்களில் தமிழ்நாடு நில உரிமைப்

பதிவேடு சட்டத்தின் நிறுத்தி வைக்கப்பட்ட பிரிவுகள் 5, 9 மற்றும் 15, 1-3-1996 முதல் வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் மட்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

3. ஏற்கனவே நில உரிமைப் பதிவேடு திட்டம் செயல்படுத்தப்பட்ட சில மாவட்டங்களில், இது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் நில உரிமைப் பதிவேட்டின் படிவத்திலும், அதை வழங்கும் முறையிலும், சில மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளது.

4. மாற்றங்கள் செய்யப்பட்ட பின்னர், இத்திட்டம் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**4. நிலக்கொள்கை**

**நில மாற்றம்**

வருவாய்த்துறை அரசின் அனைத்து நிலங்களுக்கும், அதன் அனைத்துத் துறை மற்றும் அமைப்புகளிடம் உடைமையிலுள்ள நிலங்களுக்கும் பொறுப்பேற்றிருக்கிறது. மாநில அரசின் வசமுள்ள புறம்போக்கு நிலங்கள் பல்வேறு துறைகளுக்கும், அரசு சார்பு நிறுவனங்களுக்கும், தனியாருக்கும் நில மாற்றம், உரிமை மாற்றம், குத்தகை மற்றும் ஒப்படை மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள் மிகவும் குறைந்துவிட்டன. ஆனால் அவைகளைக் கோரி வரும் கோரிக்கைகள் மிக அதிகமாக உள்ளன. ஆகவே அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களை வழங்குவதில் கவனமும், எச்சரிக்கையும் தேவைப்படுகிறது.

2. வருவாய் நிலையாணை எண் 23(ஏ)-ன்கீழ் மாநில அரசு நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் மைய அரசுக்கு மாற்றம் செய்யப்படுகின்றன. இரயில்வே துறை, தொலை தொடர்புத் துறை, அஞ்சல் துறை, அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையம் போன்றவற்றிற்கு வழங்கப்படும்போது ஒற்றை சந்தை மதிப்பினை நிலக்கிரயமாக வசூலித்துக் கொண்டு நிலமாற்றம் செய்யப்படுகின்றன. இருப்பினும், சென்னையில் மிகு வேக ரயில் திட்டத்திற்கு நிலங்கள் ரயில்வேதுறைக்கு இலவசமாகவே வழங்கப்பட்டுள்ளன.

3. வருவாய் நிலையாணை எண் 23(ஏ)-இன்படி, மாநில அரசின் துறைகளுக்கு இடையே நிலமாற்றம் செய்யப்படுகின்றன.



லாப நோக்குமுள்ள பயன்பாட்டிற்கென நிலம் கேட்கப்படும்போது நிலக்கிரயம் வசூலிக்கப்படுகிறது. பள்ளிக்கூடம், மருத்துவமனை, சுகாதார நிலையம் போன்ற இலாப நோக்கமற்ற பயன்பாட்டிற்கென நிலம் கேட்கப்படும்போது நிலக்கிரயமின்றி நிலமாற்றம் செய்யப்படுகிறது. மாநில அரசின் துறைகளைப் பொறுத்தமட்டில் ஒரு குறிப்பிட்ட நோக்கம் மற்றும் பயன்பாட்டிற்காக அளிக்கப்பட்ட நிலங்கள் அத்துறையினரால் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்றால் அந்நிலங்களை வருவாய்த்துறை திரும்ப எடுத்துக்கொள்ளும்.

**நில உரிமை மாற்றம்**

வருவாய் நிலை ஆணை எண் 24-(ஏ)-ன் கீழ் உள்ளாட்சி நிறுவனங்கள் அல்லது தனியார் நிறுவனங்கள், பள்ளிகள், பேருந்து நிலையம், சந்தை, சாலை, மருத்துவமனை, அலுவலகக் கட்டிடங்கள் போன்ற பொது நோக்கங்களுக்காக அரசு நிலங்கள் நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அத்தகைய நிறுவனங்களுக்கு, நேர்வுக்கேற்றபடி தகுதியின் அடிப்படையில் நிலக்கிரயத்தை வசூலித்தோ அல்லது நிலக்கிரயமின்றியோ நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது.

2. தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கான நிலங்கள், நிலக்கிரயமின்றி வழங்கப்படுகின்றன.

**5. வீட்டுமனை வழங்குதல்**

பொருளாதார நிலையில் நலிவுற்றவர்கள் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு, பொது மக்களுக்கு வீட்டுவசதி அளிக்கும் வகையில் வீடில்லாதவர்களுக்கு நகர்ப்புறங்களிலும், கிராமப் புறங்களிலும் வருவாய் நிலை ஆணை 21இன் கீழ் உள்ள விதிகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகிறது.

2. ஆண்டு வருமானம், ரூ. 12,000-க்கு குறைவாக உள்ள குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. நிலமற்ற ஏழை ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள், போரில் வீர மரணம் அடைந்த அல்லது இயலாமையிலுள்ள இராணுவ வீரர்களின் குடும்பங்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், முன்னாள் படை வீரர்கள், கொத்தடிமைச் சட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்கள், தங்க

கட்டுப்பாடு ஆணையினால் வேலையிழந்த பொற்கொல்லர்கள் முதலியவர்களுக்கு முன்னுரிமையுடன் வீட்டுமனை ஒப்படை வழங்கப்பட்டு வருகிறது. பெண்கள் முன்னேற்றம் மற்றும் நலத்தை ஊக்குவிக்கும் வகையில் தற்போது பொதுவாக இவ்வொப்படைகள் மனைவி/பெண்கள் பெயரில்தான் ஒப்படை செய்யப்படுகின்றன.

3. இது தவிர அரசு புறம்போக்கு நிலங்களில் குடிசை மற்றும் வீடுகள் மூலம் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணையற்ற ஆக்கிரமிப்புகளும் வரன்முறைப்படுத்தப்படுகின்றன. வீட்டு மனை பெற்ற ஒப்படைதாரர்கள் தங்கள் நிலத்தினை தேசிய வங்கிகளில் அடமானம் வைத்து, வீடு கட்டுவதற்குத் தேவையான பணத்தை கடனாகப் பெறுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

4. மேலும், நீர்நிலை புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு, மந்தைவெளி புறம்போக்கு, மயான புறம்போக்கு போன்ற தடை செய்யப்பட்ட அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களையும் ஆட்சேபகரமான புறம்போக்கு இடங்களில் உள்ள ஆக்கிரமணங்களையும் நேரில் ஆய்வு செய்து அந்நிலங்கள் சமுதாய நலன்களுக்கு தேவைப் படாத பட்சத்தில் அந்த ஆக்கிரமணங்களை முறைப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுப்பதற்காக சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

5. ஒவ்வொரு ஆண்டும் இலவச வீட்டுமனை ஒப்படை செய்ய குறியீடு நிர்ணயிக்கப்படுகிறது. 1995-96-ஆம் ஆண்டிற்கு 75,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமெனக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டதில், 1,36,142 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 1996-97-ஆம் ஆண்டிற்கு 1,00,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டதில் பிப்ரவரி 1997 வரை 87,123 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**6. விவசாய நிலம் ஒப்படை செய்தல்**

பயிரிடத்தக்க தரிசு நிலங்கள் தகுதி வாய்ந்த நிலமற்ற ஏழை மக்களுக்கு ஒப்படை செய்யப்படுகின்றன. அவைகள் பொருளாதார அடிப்படையில் இலவசமாகவோ அல்லது நிலக்கிரயத்துடனோ ஒப்படை செய்யப்படுகிறது. ஒரு நபரின் ஆண்டு வருமானம் ரூ.12,000/-மும், அதற்குக் குறைவாக வருமானம் இருப்பின் அவர் குடும்பத்தில் எவ்வளவு நபர்கள் இருப்பினும் அவர் 'ஏழை' எனக் கருதப்படுகிறார்.



2. அரசாணை (நிலை) எண் 275, வருவாய், நாள் 2-4-1994 இல் நிர்ணயித்துள்ள முன்னுரிமைப் பட்டியல் வரிசைப்படி நில ஒப்படை செய்யப்படுகிறது. அவை பின்வருமாறு:—

அ. மரணம் அடைந்த எல்லைப்புற பாதுகாப்புப் படையினர் மற்றும் நாடு சார்ந்த இராணுவ குடும்பத்தினர்

ஆ. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினர்

இ. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்

ஈ. முன்னாள் இராணுவத்தினர்

உ. இராணுவத்தில் பணிபுரிவோர்

ஊ. நிலமற்ற ஏழைகள்

3. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பு அவர் ஏற்கனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும், ஒப்படை பரப்பும் சேர்த்து 3 ஏக்கர் புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் என வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்கள் குறைவாகவும், மதிப்பு வாய்ந்தவையாகவும் உள்ளன. எனவே இம்மாவட்டத்தில் இந்த உயரளவு 1 ஏக்கர் புன்செய் அல்லது 0.50 ஏக்கர் நஞ்சை என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4. ஒப்படை செய்வதற்கு புறம்போக்கு நிலங்கள் குறைவாக உள்ளதாலும், பிற்கால உபயோகத்தை கருத்திற்கொண்டும் அதிக எண்ணிக்கையிலான குடும்பங்கள் பயன்பெறத்தக்க வகையில் வழங்கும் பொருட்டு, ஒப்படை பரப்பு மற்றும் இதர இனங்களைச் சீர்படுத்தும் நிலக்கொள்கைகள் அரசு அளவில் பரிசீலனையில் உள்ளது.

5. சில நிபந்தனைகளின்பேரில் விவசாயத்திற்கு நிலம் ஒப்படை செய்யப்படுகின்றன. அவையாவன: ஒப்படை செய்த நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் அந்த நிலத்தை பயிர் செய்ய வேண்டும். பத்தாண்டுகளுக்குள் அந்நிலத்தை விற்கவோ அல்லது உரிமை மாற்றம் செய்யவோ கூடாது. பத்து ஆண்டுகளுக்குப் பின்னரும் நிலங்களை விற்க அரசின் முன்அனுமதி பெற வேண்டும். ஆதிதிராவிட மக்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் எந்த தருணத்திலும் அவர்களைத் தவிர மற்ற வகுப்பினருக்கு உரிமை மாற்றம் செய்யக்கூடாது. இருப்பினும் நிலத்தை மேம்படுத்த கடன் வாங்கும் பொருட்டு அரசு அங்கீகரிக்கப்பட்ட நிதிநிறுவனங்களில் அவர்கள் அடமானம் வைக்கலாம். ஆனால் நிலத்தை ஒப்படை பெற்றவரோ அல்லது

[1997 மார்ச் 21

அவரது குடும்ப உறுப்பினர்களோ கூலியாட்களைக் கொண்டோதான் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தில் பயிரிடக்கூடாது. மேலும் ஒப்படை பெறும் ஒவ்வொரு நபரும் ஒரு ஏக்கருக்கு 10 பலன் தரும் மரங்கள் நட வேண்டும். ஒப்படை நிபந்தனைகள் மீறப்பட்டால், எவ்வித இழப்பீடும் கொடுக்காமல் நிலத்தை அரசு மீண்டும் எடுத்துக்கொள்ளும்.

6. 1995-96ஆம் ஆண்டிற்கான இலக்கு 6,335 ஏக்கர் என நிர்ணயித்திருந்தும், இவ்வாண்டில் 6,918.59 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் 10,346 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1996-97-ஆம் ஆண்டிற்கான குறியீடு 6,000 ஏக்கரில் ஏப்ரல் '96 முதல் பிப்ரவரி '97 வரை 4838.52 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் வழங்கப்பட்டன. இதனால் 6552 நபர்கள் பயன் பெறுகிறார்கள்.

7. பொதுத் தேவைகளுக்கு உரிய சமுதாய நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் ஏரி, குளங்கள், கால்வாய், ஓடை மற்றும் நீர் பற்றிய நிலங்கள் போன்ற அனைத்து நீர்வழிப் புறம்போக்குகளையும், மாட்டுத்தொழுவம் (மந்தைவெளி)மற்றும் மேய்க்கால் மற்றும் மயானம் புறம்போக்குகளையும் ஒப்படை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

8. இயற்கை சூழல் சமன்பாட்டினைப் பாதுகாப்பதற்கும் நில அரிப்பினைத் தடுக்கவும் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப்பிரதேசங்களிலும் வேளாண்மைக்கென ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. மலைப் பிரதேசங்களில் ஒப்படை செய்வதற்கான தடையை ஆய்வு செய்ய உயர்மட்டக் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

9. அதேபோன்று சென்னை, மதுரை, திருச்சி போன்ற மாநகரங்களைச் சுற்றிலும் நிலத்தேவை அதிகரித்துக்கொண்டே போவதாலும் நியாயமற்ற முறையில் நிலத்தை கைப்பற்றிக் கொண்டிருப்பவர்களிடமிருந்து நிலத்தை பாதுகாக்க வேண்டியும் இந்நகரங்களைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் ஒப்படை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

### 7. ஆட்சேபணைக்குரிய ஆக்கிரமணங்களை அகற்றுதல்:

அரசு நிலங்கள் பரப்பில் குறைந்துகொண்டே வருகின்றன. இருக்கும் நிலங்கள் தகுதியுள்ள ஏழைகளுக்கு ஒப்படை செய்யவும்,



1997 மார்ச் 21]

திட்டப்பணிகளுக்கும், பொது நன்மைக்கும், வருங்கால தலைமுறைக்கும் பயன்படுத்தப்பட வேண்டும்.

2. நீர்வழிப் புறம்போக்குகள், மேய்க்கால் நிலங்கள், கோவில் நிலங்கள், களம் போன்றவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபகரமானவை எனக் கருதப்பட்டு, அவை உடனே அகற்றப்பட வேண்டும். வருவாய்த்துறை பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களும், நகராட்சி, மாநகராட்சி அலுவலர்களும் முறையற்ற ஆக்கிரமிப்புகள் செய்தோரை 1905-ஆம் ஆண்டைய தமிழ்நாடு நில ஆக்கிரமணச் சட்டப்படி முன் அறிவிப்பு அளித்த பின் அகற்ற அதிகாரம் பெற்றுள்ளார்கள்.

3. ஆக்கிரமணம் செய்யும் நபர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை உயர்த்துவதற்கும் அரசு நிலங்களில் ஆக்கிரமிப்புகள் செய்வதை தடுக்கவும் நில ஆக்கிரமிப்பு செய்பவர்களை அத்துமீறி நுழைபவர்களாகக் கருதி, அவர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இந்த சட்டத்தினை தகுந்த முறையில் திருத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

4. அரசு நிலத்தில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றுவதை எதிர்த்து உரிமையியல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் மனுக்களை ஏற்பதை தடுப்பதற்கு ஒரு சட்ட திருத்தம் (சட்டம் 1/96) செய்யப்பட்டுள்ளது. இது மாவட்ட நிர்வாகத்திற்கு ஆட்சேபணையுள்ள ஆக்கிரமிப்புகளை திறம்பட அகற்றுவதற்கு வழிவகை செய்கிறது.

5. வீடுகள் மற்றும் சாகுபடி மூலம் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை குறைக்க அவ்வித இனங்களில் மின் இணைப்பு பெற வழங்கப்படும் தடையில்லா சான்றினை வழங்கக்கூடாது என சார்நிலை அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது. நீர்வழிப் புறம்போக்குகளில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ள ஆதிதிராவிடர்களுக்கு மாற்று வீட்டுமனைகள் வழங்கப்பட்ட பின்னரே ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்றன.

### * 8. நிலச் சீர்திருத்தம்

வேளாண்மை நிலங்கள், சிலரது வசம் குவிந்து அதன் மூலம் வேளாண்மை நில உடைமைகளில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி அந்நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க 1961-ஆம்

* பக்கங்கள் 134-135-ல் மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கத்தை காண்க.

ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம், (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/1961) இயற்றப்பட்டது. இச்சட்டம் 6-4-1960-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. தற்பொழுது 5 அல்லது அதற்கு குறைவான நபர்கள் கொண்ட குடும்பத்திற்கு உச்சவரம்பு 15 தர ஏக்கர் என்றும், குடும்பத்தின் மொத்த உச்சவரம்பு 30 தர ஏக்கர் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, நிலமற்ற ஏழைகளுக்கு 3 ஏக்கர் புன்செய் அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலம் என்ற அளவில், 1965-ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (மிகை நில ஒதுக்கீடு) விதிகளின்கீழ் தகுதியுடையோருக்கு ஒப்படை செய்யப்படுகின்றது.

**நிதியுதவித் திட்டம்**

தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட மிகை நில ஒப்படை பெற்றவருக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தை மைய அரசு ஏற்படுத்தியுள்ளது. மைய அரசு நிதி உதவித்திட்டத்தின்படி, நிதி உதவியாக, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 2,500 வீதம் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்திற்கான செலவினை மத்திய அரசும், மாநில அரசும் சரிசமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின்கீழ் சிறப்புக் கூறாகத் தாழ்த்தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு நிதி உதவி வழங்குவதற்குத் தனியாக வகை செய்யப்பட்டுள்ளது.

**குடிவாரச் சட்டங்கள்**

1. 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1955)-இன்படி எந்த ஒரு பயிரிடும் குத்தகைதாரரும் குத்தகைப் பணத்தைச் சரிவர செலுத்தாத நிலையிலோ, நிலத்திற்கோ அல்லது அதிலுள்ள பயிர்களுக்கோ சேதம் விளைவிக்கின்ற செயல்களைச் செய்தாலோ, நிலத்தைச் சாகுபடி செய்யாமல் இருந்தாலோ, விவசாயத்தைத் தவிர்த்த மற்ற காரியங்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தினாலோ, நில உரிமையாளருக்கு நிலத்தின் உரிமையை மறுக்கும் வகையில் செயல் புரிந்தாலோ தவிர, நிலத்திலிருந்து வெளியேற்றப்பட இயலாது. எந்த நில உடைமையாளரும் (ஆயுதப் படையினரைத் தவிர), மேலே குறிப்பிட்ட காரணங்களின்றி மற்ற காரணங்களுக்காக குத்தகைதாரரிடமிருந்து தங்களுடைய நிலத்தை மீளப் பெற முடியாது.





2. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளித்தல்) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் 31-1-1997அன்று நிறைவேற்றப்பட்டது. இந்த மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் உள்ள பயிரிடு குத்தகையாளர்கள் 1996-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நிலக்கிழாருக்கு கொடுபட வேண்டியதாகவிருந்து சேர்ந்தும், பிறப்பிப்பதற்கு கருதப்பட்டுள்ள இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட தேதியில், இன்னமும் செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ள குத்தகைத் தொகை முழுவதையும் அல்லது 1997-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாளில் முடிவடைகின்ற பசலி ஆண்டிற்கு செலுத்தத்தக்க குத்தகை தொகைகளை அல்லது அவை இரண்டையும் வசூல் செய்வதனை 30-6-1999 வரையிலான கால அளவிற்கு தள்ளி வைப்பதன் மூலம், ஓரளவிற்கு நிவாரணம் வழங்க இச்சட்ட முன்வடிவில் வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தள்ளி வைக்கப்பட்ட கால அளவின்போது மேற்சொன்ன குத்தகை தொகையினைச் செலுத்தாததற்காக அந்த குத்தகையாளர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் இருக்கவும் இச்சட்ட முன்வடிவில் வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் இந்தியக் குடியரசு தலைவரின் இசைவினைப் பெற்றபிறகு, அரசால் அறிவிக்கை வெளியிடப்படும்.

3. 1956-ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிடும் குத்தகைதாரர்கள் (நியாயக் குத்தகை செலுத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1956) குத்தகைதாரர்களால் ஆண்டொன்றுக்கு மொத்த விளைச்சலில் 25 குத்தகைதாரர்களால் ஆண்டொன்றுக்கு மொத்த விளைச்சலில் 25 விழுக்காட்டினைக் குத்தகைத் தொகையாக தனிப்பட்ட நிலச்சொந்தக் காரர்களுக்கு அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களுக்கு அளிக்க வழிவகை செய்கின்றது. அரசுக்கு செலுத்த வேண்டிய நிலவரி மற்றும் நிலத்தின் மீதான இதர இனங்களை நிலத்தின் உரிமையாளர்கள் செலுத்துவர். ஆனால், விவசாயத்திற்கான செலவு முழுவதையும் பயிரிடு குத்தகைதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4. 1961-ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொதுப்பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், (தமிழ்நாடு சட்டம் 57/1961) பொதுப்பொறுப்புக் கழகங்கள் வைத்துள்ள விவசாய நிலங்களின் நிருவாகத்தை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது. எந்த ஒரு பொதுப்பொறுப்புக் கழகமும், தன்னுடைய சொந்தச் சாகுபடிக்கு 20 தர ஏக்கர் வரை நிலத்தினை

வைத்துக்கொள்ளலாம். இதற்கு மேலுள்ள நிலத்தினை உரிமையாகப் பயிரிடும் குத்தகைதாரர்களுக்குக் குத்தகைக்கு விட வேண்டும்.

5. 1969-ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/1969) நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாய பணிகளுக்கு வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது.

6. 1969-ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1969), தமிழ்நாட்டில் நிலச் சொந்தக்காரர்களிடம் அல்லது பொதுப்பொறுப்புக் கழகங்களிடம் உள்ள விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்வதற்காக இச்சட்டம், ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, வட்டாட்சியர் பதிவு அலுவலராவார். அவர், பயிரிடும் குத்தகைதாரர்களின் நிலங்களைப் பாதுகாப்பதற்காகக் குத்தகை உரிமைப் பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும். பதிவு அலுவலர் தன்னிச்சை நடவடிக்கை எடுத்து, குத்தகைதாரர்களைப் பதிவு செய்ய சட்டப்பிரிவு 4-ன்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 5-(ஏ)ன்படி வட்டாட்சியர்களுக்கு உதவி புரிவதற்காக, வட்டார அளவில் அமைக்கப்படும் அலுவல் சார்பற்ற ஆலோசனைக் குழுவில் நிலமற்ற ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர் ஒருவரும், பயிரிடும் குத்தகைதாரர் ஒருவரும் மற்றும் சமூக நல ஊழியர்கள் மூவரும் உறுப்பினர்களாக இருப்பர்.

7. 1971-ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/71) குடியிருப்புகளில் அனுபோகதாரர்களுக்கு உடைமை உரிமை அளிக்கின்றது. அதன்படி, 19-6-1971 அன்று குத்தகைதாரர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில் குடியிருப்பு மனையை அனுபோகத்தில் வைத்திருந்தவர் உரிமையாளராக இருப்பர். இக்குடியிருப்பு, வில்லங்கம் ஏதுமின்றி அவரிடமே நிலை பெற்று இருக்கும்.

8. தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம், 1976 (குடியரசுத் தலைவரின் சட்டம் 38/76)இன் படி, குத்தகைதாரர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற



முறையில் 1-7-1975 அன்று தமிழ்நாட்டில் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள கிராமக் கைவினைஞர்களுக்கு உடைமை உரிமை வழங்க இச்சட்டம் வகை செய்கின்றது.

9. தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த திருத்தச் சட்டம், 1990 (தமிழ்நாடு சட்டம் 39/90) மூலம், குடியிருப்பு அனுபோகத்தில் வைத்துள்ள குடியிருப்புதாரர்களுக்கு 1-4-1990 வரை காலக்கெடுகளை நீட்டி, 1-4-1990 அன்று குடியிருப்பு அனுபோகத்தில் வைத்துள்ள குடியிருப்புதாரர்களுக்கு குடியிருப்பு மீதான உரிமையைப் பெற்று பயன்பெற வகை செய்யப்பட்டுள்ளது.

**நிலத் தீர்ப்பாயங்கள் :**

நிலச்சீர்திருத்த வழக்குகளைத் துரிதப்படுத்தும் பொருட்டு, நிலத்தீர்ப்பாயங்கள் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது மாநிலம் முழுமைக்கும் ஒரு நிலத் தீர்ப்பாயம் தஞ்சாவூரில் இயங்கி வருகின்றது.

2. சென்னையில், தமிழ்நாடு நிலச்சீர்திருத்த தனி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் 1-11-1990 அன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பிலிருந்து நிலச்சீர்திருத்த வழக்குகள் எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ள நீதிப் பேராணை வழக்குகள், உரிமையியல் சீராய்வு மனுக்கள் தமிழ்நாடு நிலச்சீர்திருத்த தனி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

3. தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1994, சட்டமன்றப் பேரவையில் 10-11-1994-ம் நாளன்று நிறைவேற்றப்பட்டது. இச்சட்ட முன்வடிவு மூலச் சட்டத்தின் தொடக்க தேதியன்றோ அல்லது அதற்கு பின்னரோ ஆனால் அறிவிக்கை செய்யப்பட்ட தேதிக்கு முன்னரோ (6-4-1960-லிருந்து 2-10-1962வரை) செய்யப்பட்ட உரிமை மாற்றம் அல்லது பிரிவினை எதுவும் நபருக்கு விதிக்கப்பட்ட நில உச்சவரம்பில் கிடைக்கத்தக்க அளவை மீறி உபரி நிலத்தில் பரப்பளவைக் குறைக்குமானால், அத்தகைய நடவடிக்கை உண்மையாயினும் சரி, அல்லது இல்லையாயினும் சரி, அனுமதிக்கத்தக்க பரப்பளவு மற்றும் உபரி அளவைக் கணக்கிடுகையில் அது செல்லாது விழலாகும் வகையில் 1961-ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் பிரிவு 22-ஐத் திருத்துவதற்கு விழைகிறது. மேலும் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரால்

செய்யப்பட்ட செயல்கள் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் செல்லத்தக்கதாகும் வகையிலும், முன் நேர்வுகள் மீண்டும் ஆய்வு செய்து ஆரம்பிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்ட முன்வடிவு 2-5-1996 அன்று குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெற்று அரசால் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

**வருவாய் நீதிமன்றங்கள் :**

தற்போது மாநிலம் முழுவதும் 11 வருவாய் நீதிமன்றங்கள் கடலூர், மயிலாடுதுறை, மன்னார்குடி, கும்பகோணம், திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி, லால்குடி, சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தனித்துணை ஆட்சியர் அவர்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன. வருவாய் நீதிமன்ற தனித்துணை ஆட்சியர்கள் வட்டாட்சியர்களின் ஆளுகைக்கு எதிராக தொடரப்படும் வழக்கு மனுக்களை விசாரணை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள், தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1956 தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (ஞாயவாரம் வழங்குதல்) சட்டம், 1956 தமிழ்நாடு விவசாய நிலங்கள் (குத்தகை உரிமைப் பதிவுச் சட்டம்), தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாத்தல்) சட்டம் மற்றும் தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் தொடுக்கப்படும் வழக்குகளை விசாரித்து தீர்ப்பளித்து வருகின்றனர். அன்றாடப் பணிகளின் பொருட்டு வருவாய் நீதிமன்ற தனித்துணை ஆட்சியாளர்கள் அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட இடங்களில் வழக்குகளை விசாரிக்க, நீதிமன்றங்களை நடத்துவதற்காகப் பெருவாரியான வட்டங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு பணியிடங்களை ஆய்வு செய்வதற்காக பரவலாக பயணம் செய்ய வேண்டியுள்ளது.

**9. இடைத்தரகர்களை ஒழித்தலும் ரயத்துவாரியாக மாற்றலும்.**

சுதந்திரம் அடைந்த பின்னர், பெருமளவில் வேளாண்மை சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் அரசுக்கும் ரயத்துகளுக்கும் இடையே இருந்த இடைத்தரகர்களை ஒழித்துப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. கீழ்க்கண்ட சட்டங்களின்கீழ் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன :

(அ) தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1948 (தமிழ்நாடு சட்டம் 26/1948).



(ஆ) தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 27/1963).

(இ) தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963).

கீழ்க்கண்ட சட்டங்களின்கீழ் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன:—

(ஈ) தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963).

(உ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969).

(ஊ) தமிழ்நாடு வரியற்ற நிலங்களின் மீது ரயத்துவாரி தீர்வை விதிக்கும் சட்டம், 1973 (தமிழ்நாடு சட்டம் 31/1973).

2. ஜென்மம் நில உடைமைதாரர்கள் சிலர் அவர்கள் கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு 1969-ம் ஆண்டைய தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் பொருந்தாது என சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த நீதிப் பேராணை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அவர்களில் சிலர் உச்சநீதிமன்றத்தில் தொடுத்துள்ள மேல்முறையீடு மனுக்கள் இன்னமும் நிலுவையில் உள்ளன. உச்சநீதிமன்றம் மேல்முறையீடு மனுதாரர்களின் நிலங்களுக்கு தடையாணை வழங்கியுள்ளது. அரசின் மேலாண்மை ஆளுமையை நிலைநிறுத்த வேண்டுமென்பதை கருத்தில் கொண்டு, உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள சிவில் வழக்குகளை விரைவில் முடிக்கக்கோரி பொது மனு ஒன்றும் உச்சநீதிமன்றத்தில் அரசால் தாக்கல் செய்யப்பட்டது. அரசியல் நிர்ணய சட்டத்தின்படி கூடலூர் ஜென்மம் ஒழிப்புச் சட்டம் செல்லத்தக்கதா என்ற வினா எழுப்பப்பட்டுள்ளதால் இது குறித்து விசாரிக்க உச்சநீதிமன்ற அதிக நீதிபதிகள் உள்ளடக்கிய பெஞ்சுக்கு அனுப்ப உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்பை விரைவில் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. நில உடைமைதார்களுக்கு நட்டஈட்டுத் தொகையும் தர்மசத்திரங்கள், கல்வி மற்றும் ஆலய நிறுவனங்களுக்கு தஸ்திக் கொடையும் வழங்க உடைமைகள் ஒழிப்புச் சட்டங்கள் அனைத்திலும் விதிகள்

செய்யப்பட்டுள்ளன. நட்ட ஈட்டுத்தொகையை நடுவர் நீதிமன்றத்தில் வைப்பு செய்து ஒரே தவணையில் நில உடைமைதாரர்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. சமய சார்புடைய நிறுவனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தஸ்திக் கொடை வருவாய்த்துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**10. நகர்ப்புற நில உச்சவரம்பு:**

மாநிலத்தில் உள்ள முக்கிய நகரங்களில், ஒரு சிலரிடம் நகர்ப்புற நிலங்கள் குவிந்து இருப்பதை, பொது நலத்தைக் கருத்தில் கொண்டு தடுக்கவும், நகர்ப்புற நிலங்களை ஒரு சிலர் விற்று ஆதாயம் தேடும் முயற்சியைத் தடுக்கவும், மிகை வெற்று நிலங்களைச் சமமாகப் பகிர்ந்தளிக்கவும், நகர்ப்புறங்களில் உள்ள நிலங்களை வகைப்படுத்தவும், 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டின் 24-வது சட்டம்) இயற்றப்பட்டது. பின்னர், தனி நபர்கள் மற்றும் தொழிற் கூடங்களுக்குச் சில சலுகைகள் வழங்கும் வகையில் இச்சட்டம் 1978 ஆம் ஆண்டு திருத்தப்பட்டது.

2. மேற்படி திருத்திய சட்டத்தின் மூன்று சிறப்புக் கூறுகள் பின்வருமாறு:-

(1) தனிப்பட்ட நபர், ஒரு குடும்பம், ஒரு நிறுவனம் அல்லது ஒரு கழகம் அல்லது தனிப்பட்டவர்கள் சேர்ந்து ஒரு சங்கம் வைத்திருக்கும் வெற்று நிலத்தின் மீது உச்சவரம்பு விதித்தல்.

(2) எதிர்காலத்தில் கட்டப்படும் வீடுகளின் பரப்பிற்கு உச்சவரம்பு விதித்தல்.

(3) நகர்ப்புற நில உரிமை மாற்றத்தை முறைப்படுத்துதல்.

3. இச்சட்டம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகர்ப்புறக் கூட்டுப்பகுதிகளில் தற்போது நடைமுறையில் உள்ளது.

4. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966, ஆகிய இரண்டு சட்டங்களும் அமுல்படுத்தப்படும் பகுதிகள் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் சென்னை நகரைச் சுற்றியுள்ள 162 கிராமங்களில் இச்சட்டம் 9-8-1995 முதல் நடைமுறைப்



படுத்தப்பட்டுள்ளது.

5. ஒவ்வொரு நகரக் கூட்டுப்பகுதியிலும் நிலம் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட தனிநபர், ஒரு குடும்பம் மற்றும் தொழில் நிறுவனம் ஆகியவற்றின் உச்சவரம்பின் விவரம் பின்வருமாறு:-

| நகரக் கூட்டுப்பகுதி | வகைப்பாடு | தனி நபர் | ஒரு குடும்பம் | தொழில் நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | (சதுர மீட்டரில்) | | |
| சென்னை | I | 500 | 2000 | 2000 |
| மதுரை<br>கோயம்புத்தூர்<br>திருச்சிராப்பள்ளி<br>சேலம் | II | 1500 | 3000 | 3000 |
| திருநெல்வேலி | III | 2000 | 4000 | 4000 |

6. இச்சட்டத்தின் விதிமுறைகள், மத்திய மற்றும் மாநில அரசு நிலங்களுக்கும், அரசுத்துறை மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வீட்டு வசதி கழகங்கள் மற்றும் பொது நம்பகங்கள் ஆகியவை வைத்திருக்கும் நிலங்களுக்குப் பொருந்தாது.

7. உச்சவரம்பு வரையறைக்கு அதிகமாக ஒருவர் வெற்று நிலம் வைத்திருந்தால் அதற்கு விலக்களிக்கக் கோரும் நேர்வுகளில், நேர்வின் செயல் நோக்கம், சூழ்நிலைக்குத் தொடர்பான பிற கூறுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பொது நலனுக்குத் தேவையானது என்று கருதினால் மாநில அரசு பிரிவு 21(1)(ஏ)-இன் கீழ் விலக்கு அளிக்கலாம். உச்சவரம்பு வரையறைக்கு அதிகமாக காலியிடம் வைத்திருக்கும் ஒரு நபர் மீது இச்சட்டத்தின் விதிமுறைகள் அவருக்கு மிகக்கடுமையான இடர்பாட்டை விளைவிக்குமானால், மாநில அரசு அவருக்கு பிரிவு 21(1)(பி)-இன் கீழ் காரணங்களை விளக்கி, விலக்களிக்கலாம்.

8. இச்சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை சட்டப்பிரிவு 24 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும்

1997 மார்ச் 21]

படுத்தப்பட்டுள்ளது.

5. ஒவ்வொரு நகரக் கூட்டுப்பகுதியிலும் நிலம் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட தனிநபர், ஒரு குடும்பம் மற்றும் தொழில் நிறுவனம் ஆகியவற்றின் உச்சவரம்பின் விவரம் பின்வருமாறு:-

| நகரக் கூட்டுப்பகுதி | வகைப்பாடு | தனி நபர் | ஒரு குடும்பம் | தொழில் நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | (சதுர மீட்டரில்) | | |
| சென்னை | I | 500 | 2000 | 2000 |
| மதுரை<br>கோயம்புத்தூர்<br>திருச்சிராப்பள்ளி<br>சேலம் | II | 1500 | 3000 | 3000 |
| திருநெல்வேலி | III | 2000 | 4000 | 4000 |

6. இச்சட்டத்தின் விதிமுறைகள், மத்திய மற்றும் மாநில அரசு நிலங்களுக்கும், அரசுத்துறை மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வீட்டு வசதி கழகங்கள் மற்றும் பொது நம்பகங்கள் ஆகியவை வைத்திருக்கும் நிலங்களுக்குப் பொருந்தாது.

7. உச்சவரம்பு வரையறைக்கு அதிகமாக ஒருவர் வெற்று நிலம் வைத்திருந்தால் அதற்கு விலக்களிக்கக் கோரும் நேர்வுகளில், நேர்வின் செயல் நோக்கம், சூழ்நிலைக்குத் தொடர்பான பிற கூறுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பொது நலனுக்குத் தேவையானது என்று கருதினால் மாநில அரசு பிரிவு 21(1)(ஏ)-இன் கீழ் விலக்கு அளிக்கலாம். உச்சவரம்பு வரையறைக்கு அதிகமாக காலியிடம் வைத்திருக்கும் ஒரு நபர் மீது இச்சட்டத்தின் விதிமுறைகள் அவருக்கு மிகக்கடுமையான இடர்பாட்டை விளைவிக்குமானால், மாநில அரசு அவருக்கு பிரிவு 21(1)(பி)-இன் கீழ் காரணங்களை விளக்கி, விலக்களிக்கலாம்.

8. இச்சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை சட்டப்பிரிவு 24 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும்

(முறைப்படுத்துதல்) சட்ட விதிகளின் விதி 23-இன்கீழ் தொழில் நோக்கத்திற்கு அல்லது தொழிலாளர்களின் குடியிருப்பு வசதிக்கு அரசு கீழ்க்கண்டவாறு முன்னுரிமை கொடுத்து ஒதுக்கீடு செய்கிறது:

(1) மாநில அரசுத் துறைகள்.

(2) உள்ளாட்சி, நகராட்சி, மாநகராட்சி மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொது நிறுவனங்கள்.

(3) மத்திய அரசுத் துறைகள்.

(4) மத்திய அரசுத் துறை நிறுவனங்கள்.

(5) வீட்டு வசதிக் கழகங்கள்/கூட்டமைப்பு.

(6) தொழில் நிறுவனங்கள்.

(7) தொழிற் சாலையின் தொழிலாளர்கள் குடியிருப்பு கட்டுவதற்கு.

(8) நிலையங்கள்.

(9) தனி நபர்கள்.

9 இச்சட்டத்தின் கீழ் 31-12-1996 வரை 1547.83.20 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலத்தை அரசு கையகப்படுத்தியுள்ளது. அதில் 75.00.00 ஹெக்டேர் நிலம் நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளது. 291.66.11 ஹெக்டேர் அரசுத்துறை மற்றும் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1181.17.09 ஹெக்டேர் நிலம் ஒதுக்கீட்டிற்காக உள்ளது.

10 நகர்ப்புற நில உச்சவரம்பின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளை விரைவாக முடிக்கவும், இவ்வழக்கில் தொடர்பு உள்ள மக்களுக்கு விரைவில் தீர்ப்பு கிடைக்கவும், தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978-இன் கீழ் வரும் வழக்குகளையும் உயர்நீதி மன்றத்திலிருந்து மாற்றி தமிழ்நாடு நிலச்சீர்திருத்த சிறப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திடம் ஒப்படைக்கலாம் என்று அரசு முடிவு செய்து இதற்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

11. இச்சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் இச்சட்டத்தால் இந்நாள்வரை சுற்றுப்புறச் சூழல், தொழில் வளர்ச்சி மற்றும் அப்பகுதியில்



நிலமதிப்பு மாற்றத்தால் ஏற்பட்ட பயன்பாடு குறித்து மதிப்பீடு செய்ய இவ்வரசு உத்தேசித்துள்ளது.

**11. நகர்ப்புற நிலவரி:**

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் முதன் முதலில் 1-7-1963 முதல் சென்னை நகரில் அறிமுகம் செய்யப்பட்டது. மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 1-7-1971 முதலும், சென்னை புறநகர்ப் பகுதிகளுக்கு 1-7-1975 முதலும் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது. வரிவிதிப்புக்கு உட்படும் நிலத்தின் 1-7-1971 ஆம் தேதி சந்தை மதிப்பு அடிப்படையில் நகர்ப்புற நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது. பின்னர் இச்சட்டம் நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 அமுலில் உள்ள சேலம், கோவை, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி புறநகர்ப் பகுதிகளுக்கும், திருநெல்வேலி நகரப் பகுதிக்கும் 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

(2) இச்சட்டம் கீழ்க்கண்ட நகராட்சிகளுக்கும் நகரியங்களுக்கும் 1-7-1991 முதல் விரிவுபடுத்தப்பட்டது:—

மயிலாடுதுறை, காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, ஈரோடு, பொள்ளாச்சி, தஞ்சாவூர், திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், கும்பகோணம், உடுமலைப்பேட்டை, பழனி, காரைக்குடி, இராஜபாளையம், நாமக்கல், உதகமண்டலம், திண்டுக்கல், கரூர், நாகர்கோவில் ஆகிய நகராட்சிகளுக்கும் மற்றும் கொடைக்கானல், மேட்டூர் ஆகிய நகரியங்களுக்கும், எல்லா பகுதி நிலத்திற்கும் 1-7-1981 நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொள்வதென ஆணையிடப்பட்டது.

(3) இந்த சட்டத்தின் பிரிவு 29-இன் கீழ் கீழ்க்கண்ட நிலங்கள் விலக்களிக்கப்பட்டுள்ளன. அவைகட்கு நகர்ப்புற நிலவரி விதிப்பு பொருந்தாது:

1. பொது வழிபாட்டுக்கான நிலங்கள்
2. மத்திய மாநில அரசு நிலங்கள்
3. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள்
4. மயான பூமி நிலங்கள்
5. மத சார்பு செயல்களுக்காக பயன்படும் நிலங்கள்

[1997 மார்ச் 21

6. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்

7. பொது பூங்காக்கள், நூலகங்கள் உள்ள நிலங்கள்

8. அருங்காட்சியக நிலம், மற்றும் மறுவாழ்வு இல்லங்கள் உள்ள நிலங்கள்.

அறக்கட்டளைகள் மற்ற பிற நிறுவனங்கள் நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் சிரமம் இருப்பின் அரசுக்கு மனு செய்து கொண்டால் பரிசீலனை செய்யப்பட்டு, உரிய இனங்களில் அரசு பிரிவு 27(1)-இன் கீழ் வரிவிலக்களித்து ஆணையிடும்.

(4) கீழ்க்கண்ட அமைப்புகளுக்கு சலுகைகளை அரசு அளித்துள்ளது:-

1. சிறுதொழிற் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 சதவீதம் சலுகை, மற்றவைகட்கு 10 சதவீதம் சலுகை.

2. சங்கீத நாடக சபைகளுக்கு 50 சதவீதம் சலுகை.

3. திரையரங்குகளுக்கு 10 சதவீதம் சலுகை.

4. குடிசைப்பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்கட்கு முழுச்சலுகை.

5. நகர்ப்புற நிலத்தில் கட்டிடம் இருந்து அது நிலத்தின் சொந்தக்காரரால் மட்டும் குடியிருக்க பயன்படுத்தப்பட்டால் விதிக்கும் நகர்ப்புற நிலவரியில் 50% சதவீதம் கழிவு தரப்படுகிறது.

**(5) வரி விதிப்பு விகிதங்கள்:**

| சென்னை புறநகர்ப்பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் அனைத்தும். (1) | சென்னை புறநகர்ப்பகுதியில் உள்ள நிலங்கள் (2) |
|---|---|
| 1. முதல் இரண்டு மனைகள் வரியில்லை. | 1. முதல் மூன்று மனைகள் வரியில்லை. |
| 2. இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள் சந்தை மதிப்பில் 0.7 சதவீதம். | 2. மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள் சந்தை மதிப்பில் 0.7 சதவீதம். |



1997 மார்ச் 21]

| (1) | (2) |
|---|---|
| 3. ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள் 1 சதவீதம் | 3. ஏழு மனைக்கு மேல் பத்து மனைக்குள் 1 சதவீதம். |
| 4. பத்து மனைக்குமேல் இருபது மனைக்குள் 1.5 சதவீதம். | 4. பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் 1.5 சதவீதம். |
| 5. இருபது மனைக்கு மேல் 2 சதவீதம் | 5. இருபது மனைக்கு மேல் 2 சதவீதம். |

(6) 1996-97-ஆம் நிதியாண்டில் 31-12-1996 வரை 6.77 கோடி நகர்ப்புற வரி வசூல் செய்யப்பட்டது.

**12. வேளாண்மை வருமான வரி**

தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டு முதல் வேளாண்மை வருமானவரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் கீழ் மலைத்தோட்டப் பயிர்கள் மூலம் பெறப்படும் வருமானத்திற்கு வரி விதிப்பு செய்யப்பட்டது. பின்னர் 1958ஆம் ஆண்டு மேற்படி சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரப்பட்டு மலைத்தோட்டப் பயிரல்லாத பயிர்களுக்கும் வரி விதிப்பு செய்யப்பட்டு வரி விதிக்கப்பட்டது. கேரளா, கர்நாடகா, அஸ்ஸாம், மேற்கு வங்காளம் ஆகிய நான்கு மாநிலங்களிலும் வேளாண்மை வருமானத்திற்கு வரி வதிக்கப்படுகிறது.

2. சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் முகத்தான் மலைத்தோட்டமல்லாத பயிர்கள் மீதான விவசாய வருமானவரி விதிப்பு 1-4-1992 முதல் கைவிடப்பட்டது. இப்போது மலைப்பயிர்கள் தேயிலை, காபி, ரப்பர், ஏலக்காய், கிராம்பு, பாக்கு மற்றும் மிளகு ஆகிய ஏழு இனங்களுக்கு மட்டுமே வேளாண்மை வருமானவரி விதிக்கப்படுகிறது. 8 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் உடைய வரிதாரர்கள் மட்டுமே தற்போது தமிழ்நாடு விவசாய வருமானவரிச் சட்டம், 1955-இன் கீழ் 1-4-1992 முதல் வரி விதிப்புக்கு உட்படுத்தப்படுகின்றனர். இணக்கமுறை வரிவிதிப்பின்கீழ் சாதாரண 8 ஏக்கர்வரை வரி விலக்களிக்கப்பட்டும் 50 ஏக்கர் வரை இணக்கமுறை அனுமதிக்கப்பட்டும் வருகிறது.

[1997 மார்ச் 21

3. 1992-93 வரிவிதிப்பாண்டு முதல் சுய வரிவிதிப்புக்கும் முன்னதாக வரி செலுத்தும் முறைக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. மலைத் தோட்டப் பயிரல்லாத இனங்களில் வருமானவரி நிலுவையினை 1-6-1992 முதல் வட்டாட்சியர் மூலமாக வசூலிக்க ஒப்படைக்கப்பட்டுள்ளது. வருமான அடிப்படையில் வரிவிதிக்க வரம்பு ரூ.28,000/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4. வேளாண்மை வருமான வரிச்சட்டத்தின்கீழ் வரி செலுத்துவோர் தனது உறவினர் அல்லாத தனிநபர்களிடமிருந்து பெறும் கடனுக்கான வட்டி உச்சவரம்பு 15 சதவீதத்திற்கு உட்பட்டு 1995-96ஆம் வரிவிதிப்பாண்டு முதல் வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்க வகை செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு வருமானத்திலிருந்து கழிவு அனுமதிக்கப்படுகிறது.

5. தேசிய சேமிப்பு திட்டம் அல்லது தேசிய சேமிப்பு பத்திரம் ஆகிய திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட மொத்தத்தொகையில் 20 சதவீதம் வருமானத்திலிருந்து ரூ.12,000-க்கு உட்பட்டு கழிவு அனுமதிக்கப்படுகிறது.

6. விவசாய வருமானவரி ஈட்டுவதற்காக பயன்படுத்தப்படும் கட்டிடங்கள், இயந்திரங்கள், தொழிற்கூடங்கள், அறைகலன்கள் ஆகியவற்றிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் தேய்மான செலவு அனுமதிக்கப்படுகிறது. இந்தச் சலுகை வாடகை அடிப்படையில் வாங்கப்படும் பொருட்களுக்கும் அடங்கும். முதல் வருட உபயோகத்திற்கு விலையில் 10 விழுக்காடு விலக்களிப்பு முதலீட்டுப் படியாக அனுமதிக்கப்படுகிறது.

**13. நில அளவை மற்றும் பதிவுருக்கள் பராமரிப்பு.**

விற்பனை மாற்றம், உரிமை வழி மாற்றம், அன்பளிப்பு பரிமாற்றம், நீதிமன்ற ஆணை, பாகப்பிரிவினை முதலிய நிகழ்வுகள் மூலம் அன்றாடம் நில உடமைதாரர்கள் மற்றும் நில உடமை எல்லைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை நிரந்தர நிலப்பதிவுருக்களில் பிரதிபலிக்கும் வகையில் பராமரிப்பதும், முறையாக ஆய்வு செய்வதும் நில அளவை மற்றும் நிலப்பதிவுருக்கள் துறையின் பொறுப்பாகும். வேளாண்மைப் பகுதிகள், நத்தம் பகுதிகள் மற்றும் நகர்ப் பகுதிகளில் எங்கெங்கு அவசியமோ, அங்கு முதல் நில அளவை, மறு நில அளவை அல்லது துணை நில அளவை இத்துறையினரால் மேற்கொள்ளப்படுகிறது.



1997 மார்ச் 21]

முறைப்படியான பராமரிப்புப் பணியோடு கீழ்க்கண்ட திட்டப்பணிகளும் மாநில அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:-

(1) நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாது பிறவற்றிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வேளாண்மை நிலங்களை அளவை செய்தல்;

(2) (சென்னை பழைய நகரம் நீங்கலாக) அனைத்து நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகளில் நகர- அளவை செய்தல்;

(3) மாநிலத்தில் ஆறு மலைகளில் உள்ள மலைக்கிராமங்களின் வருவாய் பின்தொடர் பணி.

**நத்தம் அளவை:**

இத்திட்டப்பணி சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக 27 மாவட்டங்களில் உள்ள 186 வட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை எடுத்துக்கொள்ளப்பட்ட 184 வட்டங்களில் 178 வட்டங்களுக்கு புல அளவைப்பணி முடிக்கப்பட்டுள்ளது. 6 வட்டங்களில் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சிய 2 வட்டங்களில் இப்பணி நடப்பு வருடத்தில் மேற்கொள்ளப்படும்.

31-12-1996 முடிய 4397 ச.கி.மீ. பரப்பில் அளவைப்பணி முடிவுற்று 4336 ச.கி.மீ. பரப்பிற்கான ஆவணங்கள் நிலவரித்திட்டத் தொடர் பணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**நகர அளவை:**

ஒவ்வொரு பகுதியிலும் மேற்கொள்ள வேண்டிய நகர அளவையின் தன்மையையொட்டி, முதல் நகர அளவை, துணை நகர அளவை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாட்டில் 6 மாநகராட்சிகளும், நகரியங்களை உள்ளடக்கிய 107 நகராட்சிகளும் உள்ளன. இவற்றில் 30 நகராட்சிகளில் முதல் நகர அளவையும் 75 நகராட்சிகளில் துணை நகர அளவையும், 6 மாநராட்சிகளில் முதல் நகர அளவை மற்றும் துணை நகர அளவையும் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

27 மாவட்டங்களை உள்ளடக்கிய 76 நகரங்களிலும் 6 மாநகராட்சிகளிலும் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 53 நகரங்களிலும், ஒரு மாநகராட்சி மற்றும் ஒரு மாநகராட்சியின் ஒரு பகுதியிலும் அளவைப்பணி முடிக்கப்பட்டுள்ளது. 23 நகரங்களிலும் 5

[1997 மார்ச் 21

மாநகராட்சிகளிலும் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சிய 31 நகரங்களில் இப்பணி நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாது பிற பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் வேளாண்மைப் பகுதிகளில் தற்சமயம் நடைபெறும் திட்டப்பணி முடிந்தவுடன் படிப்படியாக மேற்கொள்ளப்படும். 31-12-1996 வரை 1,270 ச.கி.மீ. பரப்பில் அளவைப்பணியும் 1,150 ச.கி.மீ. பரப்பிற்கு தனி அலுவலர் இறுதித் தணிக்கை பணி மற்றும் நிலவரித்திட்டத் தொடர் பணி மேற்கொள்ள ஆவணங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**மலைக்கிராம அளவை:-**

வடாற்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், பெரம்பலூர்-திருவள்ளுவர், சேலம், ராஜாஜி மற்றும் கோவை மாவட்டங்களில் கீழ்க்குறிப்பிட்ட ஆறு மலைகளை உள்ளடக்கி 66 கிராமங்களில் மலை அளவை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது :-

(1) ஜவ்வாது மலை

(2) ஏலகிரி மலை

(3) பச்சை மலை

(4) கொல்லி மலை

(5) அரநூத்து மலை (மற்றும்)

(6) ஆனை மலை

மேற்கண்ட மலைகளில் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 66 மலைக்கிராமங்கள் அனைத்திலும் அளவைப்பணி முடிக்கப்பட்டுள்ளது.

31-12-1996 வரை 861 ச.கி.மீ. பரப்பிற்கு அளவைப்பணியும், 858 ச.கி.மீ. பரப்பிற்கு நிலவரித் திட்டத்துறைக்கு தொடர் பணிக்கு ஆவணங்கள் ஒப்படைக்கும் பணியும் முடிக்கப்பட்டுள்ளன.

**வருவாய்ப் பதிவுகள், பதிவேடுகள் பராமரித்தல்:-**

கிராம மட்டத்திலிருந்து மாநிலம் வரை எல்லைகளை அடையாளம் காண்பதற்கு உன்னிப்பான நில அளவைப் பராமரிப்புப் பணி மிக அவசியமான ஒன்றாகும். பொது மக்களுக்கு தமது உடமை குறித்த புல எல்லையை தெரிந்து கொள்வது, வருவாய்க் கணக்குகளில் தமது உடமைகளைப் பதிவு செய்தல் மற்றும் பாகப் பிரிவினைகள் ஏற்படும்



1997 மார்ச் 21]

போது அவை தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் நில அளவைப் பதிவேடுகளில் தேவையான பதிவுகள் செய்தல் மற்றும் உரிய கட்டணத்தொகை பெற்று நில உடமைதாரர்களுக்குத் தேவையான புலப்பட நகல்கள் வழங்குதல் ஆகிய பணிகளை இத்துறை செய்கிறது. இப்பணிகளைக் குறுவட்ட அளவில், பராமரிப்பு நில அளவர்களும், வட்ட அளவில் சார் ஆய்வாளர்களும் மற்றும் வரைவாளர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

மாநிலத்தில் 29 மாவட்டங்களில், மாவட்ட நில அளவை அலுவலங்களும், தலைமையிடத்தில் ஒரு மத்திய நில அளவை அலுவலகமும் செயல்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு நில அளவை தொடர்பாக தேவைப்படும் தகவல்கள் மாவட்ட நில அளவை அலுவலகங்களில் உள்ளன. மேலும், பொதுமக்களுக்குத் தேவையான கிராமப்படங்கள், வட்டப்படங்கள், மாவட்டப்படங்கள் சுற்றுலா வரைபடங்கள் மற்றும் பெருவழிப்பாதைகளைக் காட்டும் பல்வகையான படங்களும், மாவட்டங்கள் மற்றும் சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் உள்ள விற்பனைப் பிரிவுகளில் குறைந்த விலையில் பொது மக்களுக்கு கிடைக்கச் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

**அச்சக வசதிகள்:**

சென்னை, நில அளவைப் பதிவேடுகள் துறையுடன் இணைந்துள்ள நில அளவை மத்திய அலுவலகத்தில் வரைபடங்கள் அச்சிடுவதற்கான வசதிகள் உள்ளன. வரைபடங்கள் கருப்பு வெள்ளையிலும் மற்றும் ஆறு வண்ணங்களிலும் அச்சிடப்படுகிறது. மேலும் எவ்வித லித்தோ பணியையும் இத்துறையினால் ஏற்க இயலும்.

நிழற்பட அச்சு மூலமோ, ஆப்செட் அச்சிடும் முறை மூலமோ நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி வரைபடங்கள் தயாரிப்பதற்கு நிழற்பட நகல் எடுக்கும் இயந்திரத்தை உபயோகிப்பதும் பிளான் பிரிண்டர் மற்றும் கம்ப்யூட்டர் போன்றவற்றின் மூலம் கிராமப்பட நகல்கள் தயாரிக்கும் நவீன முறைகளை இத்துறை ஏற்கெனவே அறிமுகப்படுத்தியுள்ளது.

**நில அளவைப் பயிற்சி நிலையம் :**

வருவாய்த் துறை பணியாளர்கள், பயிற்சி பெறும் துணை ஆட்சியர்கள், இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் மற்றும் இதர துறை

மற்றும் அரசு கழகங்களைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் முழு அளவில் நில அளவைப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, நில அளவைப் பயிற்சி நிலையம் ஒன்று தஞ்சை மாவட்டம், ஒரத்தநாட்டில் இயங்கி வருகிறது. வானவியல் அளவை மற்றும் கார்ட்டோகிராப் போன்ற அளவை முறைகளில் விசேஷ பயிற்சிகளும் தேர்வு செய்யப்பட்ட சிலருக்கு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் விண்கோள் மூலம் தொலை தூரத்தை அளந்து நிலப்படம் வரைவதிலும், பயிற்சி வழங்குவதற்கு வசதியாக இப்பயிற்சி நிலையத்தின் பயிற்சி உள்ளமைப்புகளை வலுப்படுத்துவதிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. வருவாய் நிர்வாகத்துறையில் செய்தது போல நில அளவை மற்றும் பதிவேடுகள் துறையில் பணிபுரியும் உதவி இயக்குநர்கள், நில அளவை ஆய்வாளர்கள் ஆகியோர்க்கு அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் பயிற்சியளிக்க அரசு ஆணை நிலை எண் 219, வருவாய், நாள் 24-2-1997இல் தற்பொழுது ஆணை பிறப்பித்துள்ளது.

**நில அளவை பதிவேடுகள் . கணிப்பொறி மூலம் நவீனப்படுத்துதல்:**

மைய அரசின் நூறு சதவிகித நிதி உதவியுடன் இம்மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் உள்ள நிலப் பதிவுருக்களை கணிப்பொறி மயமாக்க கொள்கை அளவில் அரசு முடிவு செய்துள்ளது. ஒரு முன்னோடி திட்டமாக சேலம் மற்றும் இராஜாஜி மாவட்டங்களில் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. 9 கிராம கணக்குகளும் 15 வட்ட ஆவணங்களும் கணிப்பொறி மயமாக்க அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தைக் கீழ்க்கண்ட மாவட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய அரசு இதுவரை ரூ.453 இலட்சங்களுக்கு நிதி வழங்கியுள்ளது :—

1. சேலம்
2. இராஜாஜி
3. திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர்
4. கரூர்-தீரன் சின்னமலை
5. பெரம்பலூர்–திருவள்ளுவர்
6. இராமநாதபுரம்
7. திருநெல்வேலி - கட்டபொம்மன்
8. திண்டுக்கல் - மன்னர்-திருமலை



9. தர்மபுரி
10. தென்னாற்காடு - வள்ளலார்.
11. மதுரை
12. கோயம்புத்தூர்
13. தஞ்சாவூர்
14. காமராசர்
15. நகை-காயிதேமில்லத்
16. வடாற்காடு-அம்பேத்கர்
17. சென்னை
18. அண்ணா
19. கன்னியாகுமரி
20. சிதம்பரனார்
21. நீலகிரி
22. பெரியார்
23. பசும்பொன் முத்துராமலிங்க தேவர்
24. விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார்
25. திருவண்ணாமலை-சம்புவராயர்.

இப்பணிக்கென மாவட்டாட்சியர் அலுவலகத்தில் கணிப்பொறிகள் தேசிய தகவல் மையத்தினால் நிறுவப்பட்டுள்ளன. இடம் தேர்வு செய்தல், பயிற்சி வழங்குதல் மற்றும் புள்ளி விவரம் சேகரித்தல் போன்ற ஆயத்தப்பணிகள் தற்சமயம் முன்னேற்றத்தில் உள்ளன. இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படும் கணிப்பொறி மென்பொருட்களை மேம்படுத்தி வைத்துக் கொள்ள மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. 2000-ஆம் ஆண்டிற்குள் அனைத்து மாவட்டங்களிலும் நில அளவைப் பதிவேடுகள் கணிப்பொறி மயமாக்கப்படும்.

**வருவாய்த்துறை மற்றும் ஆவணங்கள் மேம்படுத்தும் திட்டம்:**

வருவாய்த்துறை நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நில உடமை ஆவணங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் மத்திய அரசு 50:50 அடிப்படையில் (மாநில மற்றும் மத்திய அரசு) உதவியளிக்கிறது.

இதுவரை ரூ. 722.06 இலட்சம் இத்திட்டத்திற்காக (மாநில அரசின் பங்கும் சேர்த்து) கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:-

| | | | |
|---|---|---|---|
| 1989-90 | .. | 200 | இலட்சம் |
| 1990-91 | .. | 20 | இலட்சம் |
| 1991-92 | .. | 148 | இலட்சம் |
| 1992-93 | .. | 125.76 | இலட்சம் |
| 1993-94 | .. | 150.70 | இலட்சம் |
| 1994-95 | .. | — | |
| 1995-96 | .. | 77.60 | இலட்சம் |
| மொத்தம்: | | 722.06 | இலட்சம் |

இத்தொகை நவீன உபகரணங்கள் வாங்கவும், பயிற்சி உள்ளமைப்புகளை வலுப்படுத்தவும், கட்டிடம் கட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இதுவரை இவ்வகையில் ரூ. 547 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**14. வறட்சி நிவாரணம்.**

தமிழ்நாட்டில் ஆண்டு மழையளவில் மூன்றில் இரண்டு பாகம் வடகிழக்குப் பருவ காலங்களில் பெறப்படுகிறது. 1995-ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவக் காற்று மழை பொய்த்துவிட்டமையால், டிசம்பர் திங்கள் 1995-லிருந்தே 19 மாவட்டங்களில் குடிநீர் பற்றாக்குறை இருப்பது உணரப்பட்டது. இக்குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க ஏப்ரல் திங்கள் 1996-லிருந்து ஆகஸ்ட் திங்கள் 1996 முடிய, அரசு ரூ. 1179.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது. 2015 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

(2) மாநிலத்தின் தென் மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலைமை பற்றி அரசுக்கு தெரிய வந்தது. மாநில அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று இந்த மாவட்டங்களில் விரிவான சுற்றுப் பயணம் மேற்கொண்டு மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து அறிக்கை தந்துள்ளனர். அந்த அறிக்கையின் அடிப்படையில் வேலைவாய்ப்புப் பணிகள் உள்ளிட்ட வறட்சி நிவாரணப்பணிகளுக்கு அரசு ரூ. 42 கோடி ஒதுக்கீடு செய்யும்.



**15. வெள்ளம்/புயல் நிவாரணம்.**

சுமார் ஆயிரம் கிலோ மீட்டர்கள் கடலோரப் பகுதி அமைந்துள்ள தமிழ்நாடு ஆண்டுதோறும் 925 மி.மீ. மழை பெறுகிறது. இதில் 47% வடகிழக்குப் பருவகாற்று காலத்தில் பெறப்படுகிறது. இவ்வாண்டு தென்மேற்கு பருவகாற்று காலத்தில் கூட கூடுதல் மழை பெய்துள்ளது. 11-6-96 அன்று காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகி அது புயலாக வலுப்பெற்றதன் காரணமாக சென்னை மாநகரம், அண்ணா, எம்.ஜி.ஆர், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் தொடர்ச்சியாக மழை பெய்து சேதங்கள் ஏற்பட்டன. திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார், கன்னியாகுமரி மற்றும் திண்டுக்கல்-மன்னர் திருமலை ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை இல்லாத போதிலும் மணிக்கு 60 முதல் 80 கி.மீ வேகத்தில் சூறாவளி காற்று வீசியதால் இம்மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாயின.

ஜூன் 1996 திங்களில் பெய்த பெருமழையினால் உயிரினங்களுக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் ஆகியவை பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| மனித உயிரிழப்பு | .. | 48 |
| கால்நடை உயிரிழப்பு | .. | 36 |
| குடிசைகள் சேதம் | .. | 97,990 |
| வேளாண் பயிர்கள் சேதம் | .. | 2832.1 ஹெக்டேர் |
| தோட்டக் கலைப் பயிர்கள் சேதம் | .. | 3313.48 ஹெக்டேர் |
| மலைத்தோட்டப் பயிர்கள் சேதம் | .. | 132 ஹெக்டேர் |

இதைத் தவிர நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் சாலைகள், நீர்ப்பாசன ஆதாரங்கள், உள்ளாட்சித் துறையின் சொத்துக்கள் மற்றும் மாநகராட்சியின் சொத்துக்கள் ஆகியவற்றிற்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

அரசு பல்வேறு நிவாரணம் மற்றும் புனரமைப்பு பணிகளுக்காக ரூ. 2097.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளித்துள்ளது. மேலும் முழுமையாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ. 1000/- ஆகவும், பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ. 500/-ஆக உயர்த்தப்பட்டு

மாநிலம் முழுவதும் எவ்வித பாகுபாடின்றி ஒரே அளவாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் வெள்ளத்தினால் இறக்க நேரிடும் கால்நடைகளுக்கு, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பால் உற்பத்தி செய்யும் விவசாயிகள் ஆகியோருக்கு பின்வருமாறு நிவாரணத் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| 1. பசு, எருது மற்றும் எருமை தலா | ரூ. 5000 |
| 2. மேற்கண்டவைகளின் கன்றுகளுக்கு தலா | ரூ. 3000 |
| 3. வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு தலா | ரூ. 1000 |

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவகாற்று 9-10-96 முதல் தொடங்கியது. 16-10-96 அன்று வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத்தினால் மதுரை, கன்னியாகுமரி, சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன், தர்மபுரி, வடாற்காடு-அம்பேத்கர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் மழை பெய்தது. இம்மழையால் 49 மனித உயிரிழப்பும், 97 கால்நடை இழப்பும் ஏற்பட்டன. குடிசைகளும், விவசாயப் பயிர்களும் சேதமடைந்தன.

1996 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பெய்த பெருமழை அதிக அளவு சேதத்தை ஏற்படுத்தியது. ஆந்திரக் கடற்கரை ஓரத்தில் உருவான சூறாவளிக் காற்றானது தெற்கு நோக்கி நகர்ந்து 6-12-96 அன்று மாமல்லபுரம் அருகில் தமிழ்நாட்டில் கரையைக் கடந்தது. ஆயினும், இப்புயல் அதனளவில் பெரிய சேதங்களை கொண்டுவரவில்லை. ஆயினும், அத்துடன் தெற்கு விரிகுடாவில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் வழக்கத்திற்கு மாறாக அதிகநாள் நீடித்ததால் 10 நாட்களுக்கு தொடர்ந்து மழை பெய்தது. இதன் காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. சென்னை, அண்ணா, எம்.ஜி.ஆர், தென்னாற்காடு-வள்ளலார், விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார், தஞ்சாவூர், நாகை-காயிதே மில்லத், திருவாரூர்-ஏ.டி. பன்னீர்செல்வம், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய மாவட்டங்கள் இதன் காரணமாக மிக அதிகமாக பாதிப்புக்குள்ளாயின. வடாற்காடு-அம்பேத்கர், தர்மபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர், பெரம்பலூர்-திருவள்ளுவர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளான பிற மாவட்டங்களாகும். அரசு பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் வெள்ளச் சேதத்தைக் கணக்கிடவும், நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடவும்



சில துறைத் தலைவர்களை நிவாரண ஆணையர்களாக அம்மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்தது. இவ்வெள்ளத்தின் விளைவாக ஏற்பட்ட சேத விவரங்கள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| மனித உயிரிழப்பு | : | 151 |
| கால்நடை உயிரிழப்பு | : | 3,738 |
| குடிசைகள் சேதம் | : | 6,88,300 |
| விவசாயப் பயிர்கள்—முழுமையாக | : | 3.08 இலட்சம் ஹெக்டேர் |
| —பகுதியாக | : | 2.21 இலட்சம் ஹெக்டேர் |
| தோட்டக் கலைப் பயிர்கள் —முழுமையாக | : | 15,437 ஹெக்டேர் |
| —பகுதியாக | : | 6,651 ஹெக்டேர். |
| பாசன ஆதாரங்கள்—ஏரிகள் / குளங்கள் | : | 823 |
| —ஆறுகள் | : | 1,845 இடங்கள் |
| —கால்வாய்கள் | : | 2,774 |
| சாலைச்சேதங்கள்—தேசிய நெடுஞ்சாலைகள் | : | 256 கி.மீ |
| —மாநில நெடுஞ்சாலைகள் | : | 9,846 கி.மீ. |

மேற்கண்டவைகளைத் தவிர உள்ளாட்சி மற்றும் மாநகராட்சி சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள், குடிசைப் பகுதி சாலைகள் ஆகியவை சேதமடைந்தன. ரூ. 630.30 கோடி நிதி உதவி கேட்டு மத்திய அரசுக்கு விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசினால் அனுப்பப்பட்ட நிபுணர் குழு 28-12-96, 29-12-96 மற்றும் 30-12-96 ஆகிய நாட்களில் அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளது.

மாநில அரசு தற்காலிக புனரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள ரூ.195.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளது. வெள்ளத்தால் இறந்தோரின்

குடும்பத்ினருக்கு நிவாரணமாக இதுவரை ரூ. 10,000 வழங்கப்பட்டு வந்தது. இதனை 16-10-96 முதல் ரூ.15,000 ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

## 16. நலத்திட்டங்கள்

### விபத்து நிவாரணத் திட்டம்:

தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது விபத்தினால் இறக்க நேரிடும் அல்லது காயங்களினால் அங்கங்களை இழக்க நேரிடும் ஏழைத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காக ஒருங்கிணைந்த விபத்து நிவாரணத் திட்டம் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்குவதற்கு ஆண்டு வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. தொழிலில் ஈடுபட்டிருக்கையில் இறக்க நேரிடும் ஏழைத் தொழிலாளர்கள் குடும்பத்திற்கு ரூ. 15,000 வழங்கப்படுகிறது. விபத்தில் உடல் ஊனமடைந்தவர்களுக்கு ரூ. 5,000 முதல் ரூ. 10,000 வரை அவர்களின் ஊனத்திற்கேற்றவாறு நிவாரணம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை முதலில் அமுல்படுத்தியபோது 22 வகையான ஏழைத் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற சேர்க்கப்பட்டிருந்தனர். தற்போது 44 வகை ஏழைத் தொழிலாளர்களுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டம்:

ஆண்டு வருமானம் ரூ. 7,200 க்கும் மிகாமல் பெறும் குடும்பத்தைக் காப்பாற்றும், பொருளீட்டும் குடும்பத் தலைவர் இறக்கும் பட்சத்தில், அன்னாரின் வருமானத்தை இழந்து தவிக்கும் ஏழைக் குடும்பத்திற்கு உதவி செய்யும் வகையில் நிவாரணத் தொகை வழங்க தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தற்போது ரூ. 7,500 நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

## 17. தீ விபத்து

கிராமங்களில் உள்ள பெரும்பான்மையான வீடுகள் கூரை வீடுகளாகவே உள்ளன. குடிசைப் பகுதிகள் மிகுந்துள்ளதால் சென்னை நகரும் அதற்கு விதிவிலக்கல்ல. ஏனைய பருவ காலங்களைவிட கோடை காலத்தில்தான் அதிகப்படியான தீ விபத்துகள் நிகழ்கின்றன. தீ விபத்து ஏற்படும்போது துரித நிவாரணமாக முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 1,000 மும், பகுதியாகப்



பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 500 ம் வழங்கப்படுகிறது. இவை போக 5 கிலோ அரிசியும், 1 லிட்டர் மண்ணெண்ணெய், 1 வேட்டி அல்லது 1 லுங்கி மற்றும் 1 சேலை முதலியன பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

தீ விபத்தில் இறக்கும் கால்நடைகளைப் பொறுத்தவரை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் கால்நடை விவசாயிகளுக்கு கீழ்க்கண்டவாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:—

(1) பசு, காளை மற்றும் எருமை ஒன்றுக்கு ரூ. 5,000.

(2) பசு, காளை மற்றும் எருமை ஆகியவற்றின் கன்று ஒன்றுக்கு ரூ.3,000.

(3) செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு ஒன்றுக்கு ரூ.1,000

தீ விபத்துகளில் மனித உயிர் இழப்பு ஏற்பட்டால், இறந்தவர் பொருளீட்டும் நபராக இருந்தாலும், இல்லாவிட்டாலும், எந்தவித பாகுபாடுமின்றி இறந்தவர் குடும்பத்துக்கு கருணைக் கொடையாக ரூ. 15,000 வழங்கப்படுகிறது. தீ விபத்தில் இறக்கும் குழந்தைகளுக்கும் இது பொருந்தும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருவூல விதி 27-ன்படி தேவையான பணத்தைப் பெற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

D
V211,31N97
N97.26.2
26348